The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library Society

EDITED BY

S. KRISHNAN

ADMINISTRATIVE OFFICER,

T. M. S. S. M. Library Society,

Thanjavur

L XXXVII

No. 1, 2 & 3

PUBLISHED ON BEHALF OF

THE SARASVATI MAHAL LIBRARY SOCIETY

THANJAVUR

Annual Subscription Rs. 6-00

A. D. 1988

TANJORE MAHARAJA
SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY SOCIETY, THANJAVUR.

EDITORIAL BOARD

PATRON:

Thiru. S. MACHENDRANATHAN, I. A. S.,
District Collector and Director i/c.
T. M. S. S. M. Library, Society, Thanjavur.

EDITOR:

Thiru. S. KRISHNAN,
Deputy Collector and
Administrative Officer.
T. M. S. S. M. Library Society, Thanjavur.

MEMBERS:

Thiru. A. Panchanathan, M.A., B.Lib.Sc.,
Publication Manager-Cum-Librarian,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

Thiru. M. Seralan, B. A., B. L. I. Sc.,
Librarian Grade II,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

Thirumati. S. Thilagam, B. Litt.,
Tamil Pandit,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

Thiru. T. R. Bhima Rao,
Marathi Pandit,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

Thiru. N. Viswanathan,
Telugu Pandit,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

Thiru. N. Srinivasan, Siromani
Sanskrit Pandit,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

Thirumati. S. Rajalakshmi, Siromani
Sanskrit Pandit,
T. M. S. S. M. Library Society, Thanjavur.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's
Sarasvati Mahal Library Society

EDITED BY

S. KRISHNAN
ADMINISTRATIVE OFFICER,
T. M. S. S. M. Library Society,
Thanjavur.

PUBLISHED ON BEHALF OF

THE SARASVATI MAHAL LIBRARY SOCIETY

THANJAVUR

Annual Subscription Rs. 6-00

A. D. 1988

CONTENTS

*

		page.
1.	Editorial	i
2.	Glimpses	i—iii
3.	The History of Virabhoga Vasantharayar –Pulavar Tmt. S. Thilagam, B. Litt.	1—13
4.	Chaturlaksha of Krishnamacharya ... –Thiru N. Viswanathan.	1—12
5.	Sthalapuranas ... –Thiru M. Seeralan, B. A., B. L. I. SC.,	1—8
6.	Manuscripts and Manuscript Libraries - A Study –Thiru P. Perumal, B. SC. (spl.), M. A., M. L. I. SC.,	1—10
7.	Ekoji II and Prapanchamrta Sara ... –Tmt. S. Rajalakshmi, Siromani.	1—16
8.	Thiruvarur Mahatmyam alias Kalividambanam –Thiru N. Srinivasan, Siromani, Vidwan.	1—29
9.	Tanjore Maratha Kings and Poets Contribution to Literature ... –Thiru T. R. Bhima Rao.	1—31
10.	New Light on Tanjore Nayak History ... –Thiru M. Balasubramanian, B. SC., M. A.,	1—12
11.	From our Visitors' Book	

வேண்டுகோள்

கருணையுள்ளம்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப.,

மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

தஞ்சாவூர்,
21—6—88.

The Journal of
The Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library Society.

Vol. XXXVII A. D. 1988 - Saka 1910. Nos. 1, 2 & 3

EDITORIAL

I have great pleasure in presenting the 37th volume of the Journal of the T.M.S.S.M. Library Society. This multilingual journal has won appreciation from the scholors in Tamilnadu. The message conveyed in the writings of the Great poets of India are being analysed and annotated by the scholars of the Sarasvati Mahal Library Society. Besides this journal, our Library publishes books on art, culture and other related subjects. The Library has brought out 268 books in Sanskrit, Tamil, Telugu, Marathi and English languages so far.

The Government of India are gracious enough to release grants for the developmental

activities of the Library including the publication of books.

The Library places on record its sense of gratitude to the contributors of the articles and other staff of the Library for bringing out this issue in a fitting manner.

Thanjavur,

17—9—1988.

S. MACHENDRANATHAN,

District Collector and Director i|c.

T. M. S. S. M. Library Society.

GLIMPSES

A. Panchanathan, M. A., B. Lib. Sc.,
Publication Manager-Cum-Librarian.

3. **The History of Virabhoga Vasantharayar** - S. Thilagam.

In this article, the Pandit brings out the History of Vasantharayar. Vasantharayar has used a new word 'Pathrikai' for 'adhyayas' (Chapters). She has given a new light on this subject.

4. **Chaturlaksha of Sri Krishnamacharya** - N. Viswanathan.

Sri Krishnamachari lived before the famous Annamachariar of Andhra Pradesh. He was a warrior as well as Music Composer. In this article, the author has written about the music. He wās a strong devotee of Lord Ranganatha.

5. **Sthalapuranas** - M. Seeralan.

In this article, the author deals with the availability of Sthalapurana manuscripts and books in this Library. He has also given an account of Saiva Thiruthalangal and Vaishnava Thiruthalangal which were praised by the great devotees of Saivism and Vaishnavism respectively. From the available census, we come to know that 274 temples have been worshipped by three famous Saiva Nayanmars viz., Sambandar Appar and Sundarar and 105 temples by Alwars.

6. **Manuscripts and Manuscript Libraries** - A study - P. Perumal.

In this article, he deals with the methods of preservation and conservation of manuscripts. Preservation is one of the important functions of a manuscript Library.

He has also discussed about the origin of writing materials, the publication of manuscripts and the services rendered to the research scholars by this Library.

7. **Ekoji II and Prapanchamrta Saram** - S. Rajalakshmi.

This article stresses the fact than the King was a great patron of letters though he ruled for a short span. This article is a coutinuous

one. This piece could be kept on a par with chapters on the deities of loyal savent of the Dharma Sastra texts.

8. **Thiruvarur Mahatmyam alias Kalividambanam** – N. Srinivasan.

This article deals with the history of Sahaji - II period (1684 – 1710) The author explains about the report given by the Veternary Doctor to the King Shahji-II about the mal-practices committed by the staff in a Veterinary Hospital. From this article, we come to know about the maintenance of veternary hospitals even during the period of King Shahji - II and about the various wings of administration in the hospital.

9. **Tanjore Maratha Kings and Poets Contribution to Literature** – T. R. Bhima Rao.

In this article, the Pandit deals with Marathi literary contribution of the King Shaji, Ekoji (Bhava Saheb) Pratapasimha Raja and Serfoji-II and the court poets – Ragunatha Pandita, Madhvaswamy, Trayambakaraya Makhi, Ghahasyama Pandita, Gangadhara and Sesha Kavi.

10. **New Light in Tanjore Nayak History** – M. Balasubramanian.

In the History of Tanjore Nayaks, the end of Vijayaraghava Nayak (the last rular) has so far not been clearly exposed by the historians. Most of them wrote the history only on the basis of a Palm-leaf manuscript "Thanjavooru Andhrarajulu charitamu" which is preserved by the Oriental Manuscripts Library. But by this article, the author refutes the old theory. He clearly exposed the real history with the help of contemporary records with some valuable Maratha records of this Library.

ஸ்ரீ வீரபோக வசந்தராயர் வரலாறு

புலவர் **ச. திலகம்,** B. Litt.,
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகச் சங்கம், தஞ்சாவூர்.

பழமை மரபில், வரலாறு, சரித்திரம் என்ற நெறியில், வம்சப்பத்திரிகை ஜன்மப்பத்திரிகை என்ற தலைப்பிலும் சரித்திரங்களை எழுதுவது உள்ளன. சம்பிரதாயக்கதை, வம்ச சரித்திரம் என்பன உண்டு. இந்நூலும் அம்மரபில் இயற்றப் பெற்றதாகத் தெரிகிறது.

இந்நூல் தமிழ்ச்சுவடி இலக்கியப்பகுதியில் "வீரபோக வசந்தராயர்" என்ற பெயரில் சுவடி எண். 1738, "B"ஐக் கொண்டுள்ளது. இந்நூலுள இவருடைய மகிமைகளைப்பற்றிக் கூறப்படுகிறது. இதில் அத்தியாயம் என்பதற்கு மாறாக பத்திரிகை என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. ஏழாவது பத்திரிகை முடிய உள்ளன. இச்சுவடியின் இறுதியில் ஏழாவது பத்திரிகை இரண்டாம் பாகம் முற்றுப்பெற்றது என்று கூறியிருப்பதனால் முதல் பாகம் என்ற பகுதி ஒன்று இருந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டாகிறது.

விநாயகா காப்பு (வெண்பா)

சீரோங்கு மாயன் ஜெயசிங்கு புத்திரனாய்ப்
பாரோங்கவே பிறந்த பத்திரிகைப்—பேரோங்கும்
பூரணமாங் காதைதனைப் பூமிதனிற் கூறுதற்குக்
காரணமாம் யானைமுகன் காப்பு".

துதி

ஓம் ஸ்ரீ விநாயநம.
ஓம் ஸ்ரீ நமோநாராயணாய நம.
ஓங் ஸ்ரீ வீரபரம்மசைதன்யாய நம.
ஓம் ஸ்ரீ கனக துர்க்காம்பிகாய நம.
ஓம் ஸ்ரீ இராமயோகி ஐயராய நம.
ஓம் ஸ்ரீ சிதம்பர தீக்ஷிதராய நம.

ஸ்ரீ மகாவிஷ்ணு துதி.

நீராழி வண்ணனைப் பாலாழி நாதனை நின்மலனை
சீராழி யங்கைத் திருமகள் கேள்வனை தெய்வநாமக்
கூராழி மாயனை மாலலங்காரனைக் கொற்ற வெய்யோன்
ஓராழித்தேர் மறைத்தானை யெந்நாளுமுரை நெஞ்சமே.

ஸ்ரீ வீரபோக வசந்தராயர் அவதரித்த பத்திரிகை வரலாறு

நீர்கொண்ட அண்டத்தும் தாவரத்துஞ் சங்கமத்தும் நிறைந்து நின்ற சுகாதீத சுத்த பரபிரமம் வஸ்துவாகிய நித்தியானந்த ஸ்வரூப ஸ்ரீமந் நாராயணனை நாள்தோறும் பூஜித்து வருகிற பரத்துவாச மகரிஷியினுடைய ஆசிரமத்தைச் சார்ந்த கேதாரவண மலைக் குகையில் தண் முனீஸ்வரர்களோடு வாசஞ் செய்து வருகிற ஸ்ரீ வீரபிரமம் என்ற வீரபோக வசந்தராயர்வர்கள் திருச்சமூக நிரூபம் என்னவென்றால் முக்கோடி கிறுமம் சுவாமிநாத சாஸ்திரியாரென்ற நாராயண நரசிம்மாசாரியார் முன்னம் எழுதியனுப்பிய விகாரி வருஷ பலன்களுக்கும் காஷ்மீர தேச மகாதேவ சாஸ்திரியாரென்ற ஸ்ரீ ஜோஸியரவர்கள் எழுதியனுப்பிய சுபகிருது வருஷ பலன்களுக்கும் இனி உலகத்தின்கண் நடக்கப் போகிற அநேக விஷய ஆச்சரிய வைபவங்களுக்கும் உதாரண உண்மையோடு எங்கள் மனச்சம்மதமாக எழுதியனுப்பிவித்த நிருபம் அதாவது துந்துபி ௵ வைகாசிமீ கஅ தேதி குருவாரமும் பூராட நட்சத்திரமும், திரயோதசி திதியுங் கூடின சுபயோக சுபதினத்தன்று ஸ்ரீ பரத்துவாஜருடைய அழகிய ஆச்சிரமம் போய்ச்சேர்ந்தோம். ஆங்கு இருண்ட வனங்கள் சூழ்ந்திருக்கிறது. அவ்விடத்தில் முனிவர்கள் முதலான அநேக பெரியோர்கள் இருந்தார்கள். அவர்களைக் கண்டு தரிசனஞ்செய்தோம். அன்றியும் அவர்களுக்கருகினிற் பதினொரு வயதுள்ள பாலகுமாரன் மூர்த்தி சொரூபமாக வீற்றிருப்பதைக் கண்டோம். கண்டவுடன் முனீஸ்வரர்களை நோக்கி ஐயன்மீர் பாலகன் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் சொரூபம் போல் விளங்குகின்றானே இவன் யார் எனக்கேட்டதற்கு சித்தர்கள் ஓ! நண்பரே இக்குமாரன் இப்பூலோக முழுவதையும் ஏக சக்ராதிபதியாகப் பிரபவ ௵ முதல் அரசு புரிவதற்கு ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினுடைய அம்சமாக வளமிகுந்த காஷ்மீர தேச அரசனாகிய செயசிங்கு மகாராசாவின் பத்தினி மிக்க சௌந்தர்ய பதிவிரதை என்ற திலதம்மை வயிற்றிலுற்பத்தியாகிப் பிறந்தவர். இவர் பிறந்த பதினொரு வருடத்துக்குள் வேத, வேதாந்த நூல்களையும் பதினென்பாஷைகளையும் இராச்சிய விவகார நீதிகளையும் மற்றுமுண்டான சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்தவர் இன்று மூன்று வருடமிவ்விடத்திலெழுந்தருளியிருப்பர். அதற்கப்பால் கேதார வனத்துக்குச் சென்று ஆங்கு இரண்டுமாத காலம் வரை அன்ன ஆகாரம் இல்லாமல் தவயோக ஞான நிஷ்டையில் இருந்து ஸ்ரீ சாம்பசிவமூர்த்தியினுடைய

தெரிசனக் காட்சிப்பெற்று மூன்று வரங்கள் பெற்றுக்கொண்ட பின்னர் குரோதன வருசம் சித்திரை மாதம் பூர்வபக்ஷமுங் குருவாரமுங் கூடிய சுபதினத்தில் இந்திரசீல பருவத்திற்குச் சென்று ஆங்கு வாசஞ் செய்கின்ற மகரிஷிகளைக் கண்டு தெரிசித்து சிறிது நாள் வரை அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாகி மல்லிகார்ச்சுண சுவாமிகளை தெரிசித்துச் சிறிது நாட்கள் கழித்து அவருடைய வரப்பிரசாதம் பெற்று ஸ்ரீ கனகதுர்க்கையம்மாள் தரிசினங்கண்டு அவனுடைய அனுமதியையும் பெற்றுக்கொண்டு தம்முடைய வம்சத்தாராகிய தருமராஜாக்களாண்ட சில பட்டணங்களுக்குச் சென்று ஆங்காங்கு பூமியினகண் முன்னோர்களாற் புதைக்கப்பட்டிருக்கிற அநேகமாகிய ஐசுவரியங்களையும் சிம்மாசன முதலியவைகளையும் கைக்கொண்டு இந்திரகிரி பருவதத்தின் அடிவாரத்தில் புதிய நகரமொன்று கலியாணபுரமென்று நகரினெல்லை வரையுண்டுபண்ணி நன்கலங்கரிக்கச் செய்து பிரபவ ௵ முதல் தொண்ணூற்றென்பது வருடம் வரை தேவர்கள் முதலான பெரியோர்கள் யாவரும் ஆசிகூறி புகந்தேத்தம் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு ஏக சக்கராதிபதியாக இந்த பூலோகத்தை மிக்க நீதியாக அரசு புரிவார். அப்போது உலகத்தில் ஆண், பெண் மக்கள் அனைவரும் சுப சோபன மணமங்களமாக இருப்பார்கள். மாத மூன்று மழை தவறாது வருஷிக்கும். பிராமணர்கள் நித்தியகர்மானுட்டானங்களைத் தாழ்ச்சியில்லாமல் நடத்துவார்கள். சில சிற்றரசர்கள் ஒருவர்க்கொருவர் போர் புரிவார்கள். அப்படிப் போர் புரியும்போது சில பேர்கள் சேதப்படுவார்கள். சில அரசர்கள் சுப சந்தோஷமாகயிருந்து வாழ்வார்கள். இனி நடக்கப் போகின்ற இவருடைய மகிமைகளை இன்னுங்கூற வேண்டுமானால் ஆயிரம் நாவையுடைய ஆதிசேடனால் முடியுமேயல்லாது எங்களாற் கூறத் தக்கதலல. இது நிச்சயம். இதற்குச் சந்தேகமில்லை இவருடைய நாமத்தையாவது புகழையாவது வாசித்து ஜெபித்துப் பிரசங்கஞ் செய்பவர்கள் எவர்களானாலும் அவர்கள் ஸ்ரீ சாம்பசிவமூர்த்தி அனுக்கிரகத்தினால் பூரண ஆயுளையுடையவராய் அஷ்ட ஐசுவரியங்களையும் பெற்றுச் சுகமாக வாழ்ந்திருப்பார்கள். இப்பத்திரிகையை வைத்துக்கொண்டு மறுபிரதி வாங்கியும் எழுதியும் மறு தேசங்களுக்கு யார் அனுப்புவிக்கிறார்களோ அவர்களைத் தேவர்கள் வாழ்த்தி வேண்டிய வரங்களைக் கொடுப்பார்கள். இப்பத்திரிக்கையை இகழ்ச்சியாய்ப் பேசியும் சகலருக்குந் தெரியும்படி பிரசங்கஞ் செய்யாது மௌனமுற்றும் இருக்கிறவர்கள் மகா கொடிய பிரம்மஹத்தி தோஷத்தையடைவார்கள். இப்பத்திரிக்கையை பயபக்தியோடு வாசித்துப் பிறர்க்கு நன்கு தெரியும்படி இதன் மகிமைகளை எவன் புகழிக்கின்றானோ அவனுக்கு என்ன பலன் என்றால் பெரியோர்கள் சோடசோபசாரத்தோடு வரவேற்றுப் பணிந்து போற்றினால் எவ்வளவு பலன் கிடைக்குமோ அவ்வளவு பலனிலும் அதிகமான பலனையடைந்து வாழ்ந்திருப்பார்கள். இந்தப்பத்திரிகை எவரிடமிருந்தாலும் அவர்களுடைய காரியங்கள் யாவும் அனுகூலமாம். சுபம். சுபம். ஜெயஜெய வந்தேமாதரம் — அல்லாஹ் அக்பர். மூன்றாவது பத்திரிகை முற்றுப் பெற்றது.

நான்காவது பத்திரிகை

இந்தப் பத்திரிகை மகா மேருகிரியைச் சார்ந்த கேதாரவனத்திலிருக்கும் தவயோகஞான நிஷ்டானுபூதியையடைந்த மகாமாக்களாகிய முனீஸ்வரர்கள் பலரும் மனமகிழ்வோடு ஒருங்கு கூடி எங்களுக்கு அனுக்கிரகித்தபடி நாங்கள் இந்த பூலோகத்தில் உள்ள ஆண், பெண் மக்கள் அனைவருக்கும் பிரசங்கஞ் செய்து போதித்து எழுதியனுப்பிய சங்கை என்னவெனில் துந்துபி ௵ ஆடி மீ சுக்கில பட்சமும், சனி வாரமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று இப்பத்திரிகை பிரசுரஞ் செய்யப்பட்டது. அதாவது நீர்வள, நிலவள மிகுந்த உத்தர காஷ்மீர தேசத்தின்கண் தருமராஜ வம்சத்திய சீல ஜெயசிங்கு மகாராஜாவின் பத்தினி திலதம்மை வயற்றில் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் செனித்துப்பூமியில் அவதரித்து ஸ்ரீ வீரபோக வசந்தராயரெனப் பேர் பெற்றிருக்கிறார். அவருக்கும் இப்போது பதினோரு வயதாகிறது. அதற்குள் வேத புராண சாஸ்த்திர இதிகாச ஞான, யோக முதலிய நூல்களையும் பதினெண்பாஷைகள், இராஜ்ய விசார நீதி நெறிமுறைகள் போர்வன்மை முதலிய சகல விஷயங்களையுங் கற்று மிகுந்த வல்லவராயிருக்கிறார். பிரபவ ௵ முதல் தொண்ணூற்றொன்பது வருசம்வரை இராச்சிய பரிபாலனஞ் செய்யவரப்போகிறார். அப்படி அவர் வருவதற்கு முன் அதாவது அக்ஷய வருக்ஷத்துக்குள் நல்லோர்கள் தவிர துற்சனர்களாகிய துஷ்டர்கள் யாவரும் பற்பலவித கலகங்களால் நசித்துப்போவார்கள். அப்பொழுது வீரபோக வசந்தராயவர்கள் மூன்று மாத காலம் வரை தவயோக நிஷ்டையிருந்து தருவார். அத்தவத்துக்கு மெச்சி மும்மூர்த்திகளும் பிரசன்னராகி மூன்று வரமருளுவார். அவ்வரங்களைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீ வீரபோக வசந்தராயர் நிஷ்டை கலைந்து கார்த்த வீரயார்ச்சுனனிடஞ் சென்று வீரக் கங்கணக் கடையம் பெற்றுக்கொண்டு பஞ்ச பாண்டவர் அரசு புரிந்த தானமாகிய அஸ்தினபுரம் வந்து சிம்மாசனத்தமர்ந்து முனிவர் தேவர் முதலானோர் வாழ்த்த பட்டாபிஷேகங்கொண்டு, இராச்சிய பரிபாலனஞ் செய்வார். மகிமை வாய்நத இப்பத்திரிகையை இகழ்ச்சியாகவும், இதில் கண்ட சங்கைகள் அபத்தமெனவும் சொல்கிறவர்களை விசாரிப்பதற்கு ஸ்ரீ கனக துர்க்கையம்பிகை அவதரித்து வரப்போகிறாள். இப்பத்திரிகையை நிச்சயமென நம்பிக்கையுற்று பயாக்தியோடு நீதியாகிய வேதநெறிமுறை பிறழாது பூமியின்கண் மணமங்களமாக வாழ்ந்து வருகிற ஆண் பெண் மக்களுக்கும் தான தருமங்களை வழுவாது செய்து வருகிற நல்லோர்களும் தவயோக ஞான சாதனையிலிருந்து வருகிற பெரியோர்களும் சந்தோஷங்கொள்ளும்படியாக ஸ்ரீமந் நாராயண வீரபிரமம் அவர்கள் பிரசன்னராகி திருக்காட்சி தந்தருளுவார். இன்னும் இரண்டு மாதத்திற்குள் துஷ்டர்கள் அநேகர் ஒருவருக்கொருவர் போர் புரிந்து மாறுவார்கள். அந்தக் காலத்தில் பயங்கொண்டு அலறித் துடிதுடித்து மனவருத்தமுறும் விற்பனர்களும், தன் தாரமின்றி பிறர் தாரத்தை இச்சிக்காதிருக்ககிறவரிகளுக்கும், கற்புடைய மங்கையர்க்கும், கள், சாராயம்,

கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகியாதவர்களுக்கும் கள்ளக் கவி எழுதாது தான் சுயமாகப் பாடும் புலவர்களுக்கும் இன்னுமற்றுமுண்டான பெரியோர்க்கும் நம்மை நினைத்து மானதமாகப் பூசை செய்வோர்களுக்கும் நாங்கள் அவர்கள் முன் பிரதியக்ஷமாகித் திருக்காட்சிக் கொடுத்து வேண்டிய உதவிகளைச் செய்வோம்.

மற்றும் எவராகிலும் விபூதியில் எங்களுடைய நாமங்களை ஓங்காரத்துக்குள் எழுதி பயபக்தியுடன் ஆயிரம் உருச்செபித்துத் தேங்காய், பழம், பானகம் வைத்து நைவேத்தியஞ்செய்து தூபதீபங் கொடுத்துப் போற்றிப் பணிந்து அந்த விபூதியை எடுத்துப் பில்லி சூனிய முதலானவைகளால் வரும் பிணியாளர்களுக்குக் கொடுத்தால் பிணிகள் நீங்கி சௌக்கியமாக வாழ்வார்கள். புத்திரோற்பத்தியில்லாதவர்கள், அந்தகர், குஷ்டரோகிகள் முதலான சகலரும் எங்களை நினைந்து மானதமாக பூசித்தால் அவரவர்கள் எண்ணப்படி சரீர சவுக்கியமுற்று புத்திரசந்தானம், ஐசுவரியங்கள் நிறையப்பெற்றுமன மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். அன்றியும் எங்களை மனதிலெண்ணி நாளுதி ஜெபதப பூசான கைங்கர்யங்கள் தவறாது பயபக்தியோடு தேங்காய், பழம், புஷ்ப்பம், வடை, பாயாசம், பானகம், எள்ளுருண்டை முதலியவைகளை வைத்துப் பூசித்தாலும் சோமவாரந்தோறும் நியமந்தவறாமல் உபவாசமிருந்தாலும் அவர்கள் முன்னர் பிரசன்னராகி அவரவர் மனதிலெண்ணியபடி வேண்டிய வரங்களை தந்தருளுவோம். இன்னும் மகப்பேறில்லாதவர்களுக்கும், கண்ணிழந்தவர்களுக்கும், அவரவர்கள் எண்ணியபடியே அவர்கள் செய்யும் பூசைக்குத் தக்கவாறு வேண்டியவரங்களை ஈய்ந்தருளுவோம். இந்தப் பத்திரிகையை படிக்குமறிவுடையோர்களுக்கும் அதனைக் கேட்கும் அறிவுடையோர் வஸ்த்திரம் சந்தனம், தாம்பூலம், தட்சணை, அறுசுவைப் போசனம் முதலியவைகளை இனமாகக் கொடுத்து மனமகிழ்ச்சியடையச் செய்யவேண்டும்.

அப்படிக்கில்லாது இப்பத்திரிகையின் சங்கைகளை கேட்போரும் கேட்காமலிருப்போரும் அபத்தமென்று சொல்வோரும் இப்பத்திரிகையை நித்திய கருமானுட்டான ஸ்நான பூஜாதவ நியமமில்லாது வாசிப்போரும் இதென்ன பத்திரிகையென்று ஏளனஞ் செய்வோரும் இப்பத்திரிகையைக் கண்டவுடன் சகல மாணவர்களுக்குந் தெரியும்படி நன்கு விபரமாகப் படிக்காமலிருப்போரும் இந்தப்படிச் சரியாக நடக்குமோ எனச் சந்தேக எண்ணங்களைக் கேள்வோரும் ஆகிய இவர்களை விசாரித்துத் தண்டிக்கும் படியாய்க் காளிகாதேவியையும் துர்கையம்பாளையும் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் இருவரும் வந்து மேற்கண்ட விஷயங்களை யாபரணமாகவுடைய கொடிய சண்டா துஷ்டர்களை விசாரணை செய்து சிக்ஷை செய்வாள். இது நிச்சயம்.

இதிற் கண்ட முழுதுமெள்ளளவுஞ் சந்தேகமில்லை. இன்னுமிரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக இத்தேசங்களுக்கு நாங்களும் வருகிறோம். நிச்சயமென்றறியவும். இந்தப் பத்திரிக்கையைக் கொண்டுவந்து கொடுத்தவர்களுக்கு அன்னம், வஸ்த்திரம், தாம்பூலம், சொர்ணபுஷ்பம் முதலியவைகளைக் கொடுத்து சோட சோபசாரத்துடன் சந்தோஷமாயனுப்பி வைக்கவேண்டும். சோமவாரத்தன்று இந்தப் பத்திரிக்கைக்கு முன் இலை விரித்து தயிரன்னம் வடை, பாயசம், இளநீர், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு முதலியவைகளை வைத்து பயபக்தி விசுவாசத்தோடு நைவேத்தியஞ்செய்து தூப தீபங்களாற் பூசிப்போர்கள் இஷ்ட்டகாமியார்த்த மோக்ஷங்களைப் பெற்று வாழ்வார்கள். சுபம். சுபம். நான்காவது பத்திரிகை முற்றுப் பெற்றது.

ஐந்தாவது பத்திரிகை

அதிகாலையிலிருந்து நித்திய கருமானுட்டான ஸ்நான ஜெபதப முடித்து கிழக்கு முகமாக வீற்றிருந்து இப்பத்திரிகையைப் பார்த்து ஒரு முறை பாராயணம் பண்ணி வேறொரு பிரதி எழுதிவைத்துப் பொங்கல் நைவேத்தியம் செய்து தூப திபங் கொடுத்துப் பூசித்து வந்தவர்களுக்குக் கோடி கன்னிகா தானஞ் செய்த பலன் கிடைக்கும். அவ்வாறு செய்யாமல் இக்ழ்ச்சி செய்த பேர்களைத் துர்க்காதேவியானவள் பிரசன்னமாகித் தண்டித்து நற்புத்தி கூறுவாள். இது உண்மை.

இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் அவ்விடம் நாங்கள் வருகிறோம். சில நாட்களுக்கு முன் பிரம்மதேவனுடைய அம்சமாக அவதரித்த இராமயோகி ஐயரென்ற நம்மையும் சாம்பவமூர்த்தியின் அம்சமாக அவதரித்த சிதம்பர தீக்ஷிதர் என்ற இவரையும் பூலோக கைலையங்கிரியென்ற அருணையம் செல்லுங்களெனக் கோதாரக்கிரிக் குகையின் கண்ணிருக்கிற முனிவர்கள் உத்தரவு செய்தார்கள். அதற்கு நாங்களிருவரும் அந்த சீமைக்கு இச்சமயம் போக முடியாதெனக் கூறினோம். அதைக்கேட்டு முனீஸ்வரர்கள், நண்பரே மும்மூர்த்திகளில் ஒருவராகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய உத்தரவுபடி அந் நகர்க்கு அவருடைய அழகிய சக்கரத்தையனுப்பியிருக்கிறோம் என்று சொல்லுவதற்கு முன்னமே நாங்களிருவரும் அந்த சக்கரத்தை எதற்காக அங்கு அனுப்பினீர்கள், அதன் விபரமென்ன என்று கேட்டோம்.

அதற்குச் சித்தர்கள் ஐயன்மீர் அந்தச் சக்கரம் அருணாசல நகரத்தில் ஒரு ஏழை வாணிபன் வீட்டிற்கு குழந்தையாக பிறந்திருக்கிறது. அக்குழந்தை முன் சென்மத்தில் வெல்லாள மகராசனாக பிறந்து, அரசு புரிந்து வருங்கால் நாங்கள் அங்கு சென்று அந்த அரசனிடம் இந்த நகரிற் பாதிபாகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு அவ்வரசன் நீங்கள் யார் எதற்காக

என் இராச்சியத்தில் பாதிபாகம் உங்களுக்குக் கொடுக்கவேண்டும் அதன் விபரமெண்ணவென்று கேட்டான். அவ்வார்த்தையைக்கேட்ட நாங்கள் அரசனே, அந்த விபரங்களை இப்பொழுது உம்மிடந் தெரிவிக்க மாட்டோம். நீர் நாங்கள் கேட்டபடிக்குக் கொடுக்கமுடியுமா? முடியாதா என்று கூறி வாய் மூடு முன்னமே அவன் வேலைக்காரர்களை அழைப்பித்து, இவர்களைப் பிடித்து வெளியே தள்ளுங்கள் எனக் கோபத்துடன் முகங் கடுகடுத்துக் கூறினன். உடனே புலிபோல் அந்த வேலைகாரர் எங்கள்மேற் பாய்ந்து கோட்டை வாயிலுக்கு வெளியே கொண்டுவந்து தள்ளினர்கள்.

அப்போது நாங்கள் மனவருத்தமுற்று பேரிரைச்சலுடன் அந்த அரசனுக்கு சாபங்கொடுத்த விபரம் யாதென்முல் ஓ! அரசனே நீர் இன்று முதல் உம்முடைய இராச்சியத்தை இழந்து முப்பத்தொன்பது வருடம்வரை மிகுந்த துன்பமுற்று அப்பால் சிறிது நாட்களுக்குள் சிவபெருமானல் நல்ல மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தைப் பெற்று மறு ஜென்மத்தில் ஒரு வாணிபன் வீட்டில் ஸ்ரீ விஷ்ணு சக்கரத்தின் அம்சமாகப் பிறக்கக்கடவது. அப்படிப் பிறந்தகாலத்தும் உனக்கு இருபத்தைந்து வயதுவரை கொடிய பிணிகளும் வறுமையும் வந்தெய்தும். அக்கணம் அளவில்லாத பல துன்பங்களையு படையப்பெறுவாய். என நாங்கள் கூறிய சாபத்தைச் செவிதனிற் கேட்ட அரசன் ஓடோடியும் வெளிவந்து சோடச உபசாரங்களோடு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமெனக் கூறிச் சாப நிவர்த்தி செய்வீர்களென வேண்டினன்.

அதற்கு நாங்கள் அரசே நாங்களிட்ட சாபத்தை நிவர்த்திசெய்ய எங்களால் இச்சமயம் முடியாது. எங்கள் சாபப்படி நீர் கலியுகத்தில் வந்து ஒரு வாணிபனுக்கு ஸ்ரீ விஷ்ணு சக்ராம்சக் குழந்தையாகப் பிறந்து துன்புறு வாய், அக்காலத்தில் இவ்வுலகத்தை அரசு புரியும் பஞ்சமர்களைச் செயித்து ஏக சக்ராதிபதியாய் ஆள்வதற்கு ஸ்ரீ விஷ்ணு அவதார வீரபோக வசந்தராயர் அவதரித்து வருவார். அப்பொழுது நாங்களும் கூட வருவோம். உம்முடைய சாப நிவர்த்தியுந் தீரும் என்று அந்த அரசனிடங் கூறிவந்துவிட்டோம். ஆகையால் நீங்கள் அங்கு சென்று அந்த வாணியனுடைய வீட்டைக் கண்டு அவனிடம் ஸ்ரீ வீரப்பிரம்மனுடைய சங்கதிகளையும் முன் நடந்த விசயங்களை யும் நன்கு தெரியும்படி பிரசங்கஞ்செய்து போதித்து, அவ்வூரிலுள்ள சகல சனங்களுக்கும் அறிக்கை செய்து வருவீர்கள்.

இந்தப் பத்திரிகையை அபத்தமென்று சொல்லுகிறவர்கள் சொல் லொன்ணத மிகுந்த கஷ்டநிஷ்டுரங்களை அனுபவிப்பார்கள். இதை நிச்சய மென்று மனதிலெண்ணிப் பூசித்தவர்கள் மிகுந்த சுகிர்தமான வாழ்வையும்

தீர்க்காயுளையும் பெற்று மகிழ்ச்சிபோடிருப்பார்கள். ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியி னுடைய திருவருளினுலும் ஸ்ரீமந்நாராயணனுடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தினு லும் பிரம்மதேவனுடைய கிருபா நோக்கத்தாலும் உலகத்திலுள்ள நல்லோர் கள் யாவரும் சுக சீவியாய் வாழ்வார்கள். சுபம். சுபம். ஐந்தாவது பத்திரிகை முற்றுப் பெற்றது.

ஆருவது பத்திரிகை

ஒருநாள் திருக்காளஸ்திரியீஸ்வரருடைய கிருபாகடாக்ஷ வீக்ஷயண்யத் தைப் பெற்ற ஸ்ரீ சிதம்பர தீக்ஷிதரும் இராமயோகி ஐயரும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் அம்சமாக பூமியில் அவதரித்த வீரபிரம்மம் அவர்களும் மற்று முள்ள முனீஸ்வரர்களும் ஒருங்கு கூடி ஒரு அந்தரங்க ஆலோசனை செய்த விபரம் யாதெனில் முன்னர் ஐந்து தடவை பிரசங்கஞ் செய்து ஐந்து பத்திரிகை அனுப்புவித்ததின் நிமித்தம் உலகத்தில் இருக்கப்பட்ட ஆண் பெண் மக்களுள் சிலர் அறிவு, சத்தியம், பயம், பக்தி முதலியவைகளை நீக்கி துஷ்டருறவு கொண்டு இப்பத்திரிகை அபத்தமென்று நினைந்தும் நம்மை ஏளனஞ்செய்து கொண்டுமிருக்கிருர்கள். சிலர் நம்மை மானதமாகப் பூசித்துப் போற்றிப் புகழ்ந்தும் பத்திரிகையிற் கூறிய விஷயங்களை உண்மையென நம்பியும் பய பக்தியோடு நடந்து வருகிருர்கள். ஆகையால் ஏளனஞ்செய்து துஷ்டர்களைச் சம்ஹரிக்க ஸ்ரீ கனக துர்க்கையம்மையை சீக்கிரம் அனுப்பிக்க வேண்டும். வீரப்பிரம்மம் என்னும் வீரபோக வசந்தராயராகிய இவரைத் தவயோக ஞான ஞான நிஷ்டானுபூதியில் அமரும்படி இமயமலைச் சாரலுக்கு எழுந்தரு ளும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியிடம் வேண்டிய வரப்பிரசாதங்களைப் பெற்று அட்சய வருடம் முடிந்தவுடன் பிரபவ வருஷ முதல்கொண்டு நான்கு சமுத்திரத்துக்குட்பட்ட இந்தப் பூமியை அரசாள எதுவாயிருக்கும் அன்றியும் இவர் அரசபானதின் பிறகு சாலிவாகன சகாப்தம் என்ற சொல் நின்றுபோய் வசந்தராய சகாப்தம் என்று சொல்லு வார்கள்.

அன்று முதற்கொண்டு திரேதாயுகம் போல் மாதமூன்று மழை உலகத் தில் வருஷிக்கும் சகல சீவர்களும் சுகமாக வாழ்வார்கள். நித்தியோ பவுத்தி யில்லா முத்தர்களுக்கும் ஞானிகளுக்கும் ஆதாரமாயிருக்கும் மந்திரமாகிய ஓம் சிவாய சிதம்பர ராமபிரமம் வீரபோக வசந்தராய நம என்ற மந்திரத்தை யார் மன ஓர்மையுடனும் பய பத்ததி விசுவாசத்துடனும் தியானம் பண்ணிக் கொண்டிருக்கிருர்களோ, அவர்களுடைய மனோபீஷ்டப் பிரகாரம் நாங்கள் மூவர்கள்முன் பிரத்தியக்ஷமாகி வேண்டிய வரங்களைத் தந்தருளுவோம். சுபம். சுபம். ஆருவது பத்திரிகை முற்றுப் பெற்றது.

ஏழாவது பத்திரிகை

1555-இக் (௲௫௱௫௰௫) செல்லா நின்ற கலியுகம் 4892-க்கு (௪௲௮௱௯௰௨) ருத்ரோத்காரி வருடம் மாசி மாதம் 7-ந்தேதி குருவாரமும் தசமிதிதியும் விசாக நட்செத்திரமுங் கூடிய சுபயோக சுபதினத்தில் மகாமந்தரசகுதாகளான கேதாரகிரிக் குகைச்சித்தர் கூட்டங்களுள் உள்ளவர்களாகிய உருத்திரம் முனீஸ்வர சுவாமிகள் ஜெயகம்பயா சுவாமிகள் என்ற இவ் இருவரும் ஸ்ரீவீர போக வசந்தராயவர்கள் சொற்படிக்கு எழுதிய திருமுகப் பத்திரிகை என்னவென்றால்,

பூலோகத்தின்கண் கலியுக தர்மத்தில் அதர்மம் மிகுந்திருக்கிறதென்று நம் வீரப்பிரமம் அவர்கள் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி அம்சமாக பூமியின்கண் அவதரித்து சகல சாத்திரங்களுங் கற்று இப்பொழுது சித்திரகூட பருவதஞ் சென்று தவயோக நிஷ்டாநுபூதியிலிருக்கிறார். அவ்விடமிருந்து இனி இமோத்கிரிபருவதஞ்சென்று ஈசுவரன் ஈசுவரியை நோக்கித் தவசு செய்து வேண்டிய வரங்களை பெற்றுக் கூடிய சீக்கிரத்தில் இவ்வுலகத்தை அரசாள வரப்போகிறார்.

அன்றியும் அவர் மகா மந்திரோபதேச அநுட்டான அஷ்டாங்க யோக சாதனைகளையும் இந்திரசால வித்தைகளையும் கூடுவிட்டு கூடுபாய இரச மாற்றியங்களையும் மிக நன்றாய் கற்றறிந்தவர். ஒரு சமயம் அவர் கேதாரகிரி மலைக்குகையின்கண் சித்தர் முதலானோர்களுடன் தவயோக ஞான நிஷ்டை புரிந்து கொண்டிருக்கும்பொழுது இச்சா சத்தி கிரியா சத்தி ஞான சத்தி முதலிய சத்திகள் தன்னை சூழ்ந்துவர ஸ்ரீசாம்பவிபிரத்தியஷ்மாகித் திருக் காட்சி தரிசனத்தைத் தந்தருளினாள். அத்தரிசனக் காட்சியைக்கண்ட ஸ்ரீவீர பிரமம் அவர்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பி சிரமேற் கரங்களைக் கூப்பிப் போற்றித் துதித்து சாஷ்டாங்க தெண்ட நிட்டு எழுந்து நின்றார்,

அம்பிகையானவள் திருக்கருணை கிருபா நோக்கத்தோடு நோக்கி, ஸ்ரீமன் நாராயண அம்ச வீரப்பிரம்மம் வீரபோக வசந்தனே உனக்கு யாது வரம் வேண்டும் என்ன குறையேற்பட்டது எனக்கேட்க அதற்கவர் அம்பிகே பாரதமாதா புவனேஸ்வரி, அடியேன் உலகத்தில் வந்து பிறந்த சங்கதிகள் யாவுந் தாங்கள் அறிந்ததே. ஆனாலும் இப்பூவுலகத்தின்கண் அதர்மமிகுதி யாய் இருக்கிறது. அரசர்கள் நீதிநெறி முறைகள் தவறி கொடுங்கோலசராக அரசுபுரிந்து வருகிறார்கள். தேவாலயங்களில் ஆராதனை பூசைகள் முதலியவை முறைதவறி நடந்து வருகிறது. குருநிந்தனை, மூர்த்தி பேதகம், பேசல் இரும்பு வார்த்தைகள் மொழிதல் ஆகிய இவைகள் யாவும் நிவாரணமாகத் தந்தருள வேண்டுமெனக் கேட்கச் சாம்பவியானவள்,

ஹே வீரபிரம்மனே! துஷ்டர்களைச் சம்சரித்துச் சிஷ்ட பரிபாலனஞ் செய்வதற்கு இதோபார் ஒளிமிக்க வச்சிராயுதமொன்று, இதைப் பெற்றுக் கொள் என்று கொடுத்தும் பலே, அபலே என்ற மந்திரத்தை உபதேசம் பண்ணியும் இராச்சிய விவகார சாம, பேத, தான, தண்டமென்னும் சதுர்வாத உபாயங்களின் விபரீதக் கருத்துக்களின் உண்மையைப் போதித்தும் முடித்த பின்னர் சில விஷயங்களைப் பற்றிக் கூறுகிறாள். அதாவது முந்நூற்றறுபது (௩௬௰) நொடி ஒரு நாழிதை. நாழிகை $7\frac{1}{4}$ (எ-து.) கொண்டது ஒரு சாமம். சாமம் 8 (அ) கொண்டது ஒரு நாள். நாள் முப்பது கொண்டது ஒரு மாதம். மாதம் பன்னிரண்டு கொண்டது ஒரு மாமாங்கம். மாமாங்கம் அறுபது எழுநூற்றிருபது வருடம் அதாவது மகாசெயம். ஜெயம். இவை போல இனி உனக்குச் ஜெயம் ஜெயம் என்று வாழ்த்திப் பின்னுஞ் சொல்லுகிறாள். உத்திர தெக்ஷணதிக்கை நோக்கி கங்கைக் கரையின் கண் தவசு நியமலநுட்டாணம் பூசை முதலியவை செய்யாதவர்கள் உறுதியையும் சத்தியத்தையும் பக்தியையும் இழந்தவர்களாய் அப்பொழுதே நசித்துப் போவார்கள்.

வேத வாக்கியத்தை உடைய பிருமணர், க்ஷத்திரியர் முதலானோர் அவரவர்களுக்கேற்பட்ட வேத நியமாநுட்டானங்களை தவறினால் அந்த வேத வாக்கியமே அவர்களுக்குக் கேடாயிருக்கும். அரசர்கள் நீதி, நெறிமுறை பிசகினால் தன் தேசத்திலிருக்கும் பெரியோர்களைக் கொன்ற பாவத்திற் போவார்கள். தானிய முதலியவைகளைக் குறைந்த விலைக்கு விற்கிறவர்களையும் ஜீவகாருண்யமுடையவர்களையும், தவயோக ஞானிகளையும், கற்புடைய மாதர்களையும், நிந்தனை செய்கிறவர்கள் தூர்ச்சன தோஷமாகிய அதர்ம பாவத்துட் புகுந்து சண்டாள தத்துவத்தையடைந்து துர்மரணமாக இறந்து போவார்கள். இவையெல்லாம் பொய்யென்று இகழ்ச்சியாகப் பேசுகிறவர்கள் காசியம்பதி கங்கைக்கரையில் கோவதை செய்த பாவத்தையடைந்து குஷ்ட ரோகத்தை யேற்றுச் சீக்கிரம் மரணமடைவார்கள். இனிமேல் உலகத்தில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர், வேளாளர் என்ற நான்கு வருணத்தாரும் வேத சாஸ்த்திர நெறிமுறையின்படி நடந்து தான தருமங்களை தவறாது செய்து கொண்டிருப்பார்கள்.

தவயோக ஞானிகள் நிஷ்டாநுபூதியையடைந்து, விஷ்ணு தியானஞ் செய்து கொண்டிருப்பார்கள். சிற்றரசர்கள் நீதி நெறிமுறை தவறாது செங்கோல் செலுத்துபவர்கள் அன்றியும் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தும், தேவாலயங்களுக்கு ஆறுகால பூசை தவறாது நடத்தியும் தர்ம சிந்தனையோடும் மனமகிழ்வாயிருப்பார்கள். கற்புடைய மாதர்கள் சுக்கிர வாரத்தன்று அதிகாலையிலெழுந்து ஸ்நானம் செய்து இவ்விடத்தை மெழுகிச் சுத்தி பண்ணி எம்மையும் உன்னையும் சிதம்பர தீக்ஷித இராமயோகி முதலான சித்தர்களை மனத்துள் நினைத்து மானதபூஜா ஜெபதபமுடித்து விரதமிருந்து அனறு அஸ்தமித்தவுடன் திருவிளக்கேற்றிப் புஷ்பஞ் கூட்டி அன்ன முதலிய

நைவேத்தியங்கள் செய்து தூபதீபமிட்டு நமஸ்கரித்துப் பின்பு தங்கள் தங்கள் கணவரைப் போற்றிப் பணிந்து சுகமாக வாழ்வார்கள்.

அன்றியும் உத்தர தேசத்தில் நௌபாஜி நகரமென்ற ஒரு நகரமுண்டு. அந்த நகரத்து வடகிழக்கில் அழகிய பொன்தாமரைகள் புஷ்ப்பித்து நிறையப் பெற்ற மந்திரகங்கா தீர்த்தமென ஒரு தடாகமுண்டு. அத்தடாகத்தினுள் எம்முடைய அம்சத்தால் மந்திர கன்னிகையென்ற ஒரு மாது அவதரித்திருக்கின்றனள். அம்மந்திர கங்கா தீர்த்தத்துக்கருகிலிருக்கிற இரத்தின மாதன பர்வதத்தில் சிறிது நாட்களுக்குமுன் புஷ்பமாரி பொழிந்தது. அந்த புஷ்ப மாரியில் நம்முடைய அம்சமாகச் சத்துருபிகை என்ற ஓர் பெண் அவதரித்திருக்கிறாள். மகா உன்னதமாகிய இந்திர நீலகிரி நீலமாரி பொழிந்தது. அந்நீலமாரியில் நம்முடைய அம்சமாக நீல கன்னிகை என்ற ஓர் பெண் அவதரித்திருக்கிறாள். மனவேகி என்னும் பெயருடைய புஷ்பவனமொன்று இந்திர நீலகிரிக்கருகிலிருக்கிறது. அந்த வனத்தில் சூரி என்ற ஒரு கன்னிகை நம்முடைய அம்சமாக அவதரித்திருக்கின்றனள்.

கேதாரவனத்துக்கருகில் அக்கினி கேதார வனமென்னும் ஒரு வனமுண்டு. அவ்வனத்தில் நம்முடைய அம்சமாக அக்கினி கபாலியென்ற ஒரு கன்னிகை அவதரித்திருக்கின்றனள். இவ்வாறு அவதரித்திருக்கின்ற இந்த ஐந்து பேர்களுடன் துர்க்கை, சாமுண்டி என்ற கன்னிகைகளும் சாம்பவி என்ற நாமும் உலகத்தின்கண் துஷ்ட்ட நிக்கிரஞ் செய்யும் பொருட்டாக அவதரித்திருக்கின்றோம். எங்களுடைய சொரூபம் எப்படி என்றால் பாதம் இரண்டும் ஸ்தன்யங்கள் மூன்றும் நெற்றிக்கண் ஒன்றும் அக்கினிப் பிரகாசமான சடைகளும் பஞ்சபூதாதி பக்ஷணமும் ஒரு கரத்திற் சூலாயுதமும் ஒரு கையிற் பாசமும் மற்றொரு கையில் சமுத்திரம், பூமி, பாதாளம், ஆகாசம் முதலியவைகளையேந்தியும், பிரம கபால வாள் பிடிகரமும், சிங்கப்பற்களுந்தோன்றவிருக்கிறோம். எங்களை உலகத்திலுள்ள ஜனங்கள் மாரியாகிய மழையிற் பிறந்ததால், மாரியம்மையென்றும், வனத்தின்கண் பிறந்ததால் காளி, பேச்சி என்றும், துஷ்ட்டர்களைச் சங்கரிப்பதனால் துர்க்கை, சாமுண்டி என்றும் சாம்பசிவமூர்த்தியினுடைய பாரியாயிருப்பதினால் சாம்பவியென்றும் பெயரிட்டு வணங்கி வருகிறார்கள். இனிக் குரோதன வருடம் சித்திரை மாதம் 6ந்தேதி வெள்ளிக்கிழமையும் அமரபட்சமும், சஷ்டி திதியும் கூடிய சுபயோக சுபதினத்தில் தெக்ஷண பூமிக்கு வருகிறோம்.

அப்படி யாங்கள் வந்த உடனே நல்லோர்கள் நினைக்கிற காரியங்கள் யாவும் அனுகூலமாகும். அன்றியும் வேதங்களின் நெறிமுறை தவறாது வாழ்ந்து வருவோர்கள் ஆட்கொண்டருளும், அந்த வேதப்படிக்கில்லாமல் கொடிய துஷ்டச்செய்கைகள் செய்வோர்களை சோபாக்கினியென்ற எங்கள் நெற்றிக் கண்ணிற் மட்டும் அக்கினிக் காடாக அனலையெழுப்பி அனல்பேதி, சலபேதி,

நவபேதி, இரத்தபேதி, நிலபேதி, மந்தாரக்காச்சல், அனல்வெதுப்பு, அன்ன வெதுப்பு, பெரிய சிலந்தி முதலிய நோய்களை உண்டாக்கி மிக்க துன்பமடையச் செய்தும் சூலத்தால் குத்தி பிரம கபாலத்திலேந்திக் கொண்டு போய் தெக்ஷண சமுத்திரத்திலும் இமயகிரிச்சருவிலும் போட்டு விடுவோம். ஜீவனை எமன் கையில் ஒப்புவித்து சித்திரவதை செய்யச்சொல்லுவோம். குரோதன வருடம் முதல் அட்சய வருஷத்துக்குள்ளாக கூடிய சீக்கிரம் இந்தப்படி நடக்கும்.

இப்பத்திரிகையைப் பொய் என்று கூறியவர்களுக்கும், இப்பத்திரிகையை யாவருக்கும் தெரியும்படியாய்ப் படித்து, பிரசங்கஞ் செய்யாதவர்களுக்கும், இப்பத்திரிகையை வாசிக்க மனமில்லாதவர்களுக்கும், பிரம்மஹத்தி, கோவதை முதலியவைகளை செய்த பாவங்கள் சம்பவிக்கும். இனிமேல் ஆடி மாதம் 18-ந் தேதி முதல் மிகுந்த மழை வருக்ஷிக்கும். அம்மழையினால் பெரிய வெள்ளமுண்டாகி சிலநகரங்கள், அருணோதய காலத்தில் விசைக்காற்று அதிகமாக வீசிக் கொண்டிருக்கும், கார்த்திகை மாதம் 6-ந்தேதிக்கு மேல் முப்பத்தாறு நாள் வரைக்கும் மகாசண்டப் பிரசண்டமான காற்றும், இருபத்தோருநாள்வரை இருட்டும் உண்டாகும். பூகம்பமென்ற பூமி நடுக்கமும், எரிமலையால் அனேக நகரங்கள் சேதமும் உண்டாகும். இவ்விஷயங்கள் இப்பொழுது உலகத்தில் நடந்து வருவதையும் இனி நடக்கப்போகிறதையும் தம்மையுணர்ந்த பெரியோர்கள் நன்கறிந்து கொள்வார்கள். நிற்க, தென்திசையில் காமதேனு என்னப் பட்ட வால் நீண்ட நட்சத்திரங்கள் ஆகாசத்தில் அநேகம் தோன்றும். உலகத்தில் மகாராஜாக்கள் ஒருவருக்கொருவர் இராமாயண பாரத யுத்தம் போல போர் புரிந்து சேதமாவார்கள். அட்சய வருடத்துக்குள்ளாக துஷ்டர்கள் யாவரும் அழிந்து பாவங்கள் நிவாரணமாகி ஜீவகாருண்யமுடைய பெரியோர்களும் தரும சிந்தனையுடையவர்களும் தெய்வபக்தியுடையவர்களும் மற்றுமுள்ள நல்லோர்கள் யாவரும் புண்ணிய புருடர்களான உங்களைத் தெரிசிக்க வேணுமென்ற அவாவுடையவர்களாய், மானதமாகப் பூசித்துப் போற்றிப் பணிந்துகொண்டு சுகஜீவியாய் வாழ்வார்கள். இந்தப் பத்திரிகைப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்தவர்களுக்கு அன்னதானம் வஸ்திரதானம் சொர்ணதானம் முதலிய தானங்களைச் செய்து அவர்களுடைய மனது நோகாமல் சந்தோஷமாக அனுப்பிவைத்தவர்கள், தங்கள் புத்ர பௌத்திர பரம்பரையாய் அஷ்ட அயிசுவரியங்களும் சகல சம்பத்துக்களும் தீர்க்காயுசும் மேன்மேலும் பெருக உண்டாகிச் சுகமாக வாழ்வார்கள்.

இன்னும் இப்பிரபஞ்சத்தில் ஜனங்கள் யாவரும் சமமாக நினைந்து ஒருவருக்கொருவர் உறவுகொண்டு ஜாதிமதபேத எண்ணங்களைக் கொள்ளாது மனமகிழ்ச்சியாய் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். புண்ணிய புருஷோத்தமனாகிய ஸ்ரீமந்நாராயண அம்ச வீரபோக வசந்த வீரபிரம்மமே நீ இனிப் பிறக்கப் போகிற பிரபவ-ஞு முதல் இவ்வுலகத்தை அரசு புரிய போகிறாய். அப்பொழுது மாதம் 3 முறை மழை தவறாது வருஷிக்கும். தானிய தலச முதலி

யாவும் விலை குறையும். அதாவது நெல் வகை பணத்துக்கு 10 அல்லது 12 படியும் மற்ற தானியங்கள் பணத்துக்கு 20 அல்லது 22 படியும் விற்கும். தேவாலயங்களில் விழா, பூஜை, கால சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, அர்த்த சாமம், திருவனந்தல் ஆகிய 6 கால பூஜைகளும், மாதம், வருஷம், பட்சம் முதலிய விசேட உற்சவங்களும் சரிவர நடக்கும். விரமா ஞானத்தை உணர்ந்தவர்களுக்கு சருவமானுவம் கிடைக்கும். ஆறு, குளம், ஏரி, சாலை பூர்வீக ஆலயம் முதலிய திருப்பணிகள் நடக்கும். சிற்றரசர்கள் குடிகளிடத்தில் ஆறிலொரு கடமை பெற்று அரசாளுவார்கள். இப்பொழுது அரசு புரிந்து வருகிற காலாங்கிஷராசர்கள் அட்சய வருடம் முடிவதற்குள்ளாக முடி சாய்ந்து போவார்கள். அதற்கேதும் சந்தேகமில்லை. இந்தப் பத்திரிகையை தரும சிந்தையுடைய நல்லோர்கள் தங்களுக்கொரு புத்தகமும் மற்ற இதர தேசங்களுக்குப் புத்தகத்தைப் பார்த்து மறுபிரதி அனுப்பியும் பிரபல்ய பிரசங்கள் செய்து வருவார்கள். அவ்வாறு செய்து வருகிறவர்கள் இஷ்ட காமியாந்த மோட்சங்களைப்பெற்று, உளமகிழ்வுகொண்டு வாழ்வார்கள். கிரும வாசிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கிருமங்களில் காளிகாதேவியின் ஆலயமொன்று உண்டுபண்ணி அனுதினமும் நியமத்துடன் பூசை புரிந்து வருவார்கள். உலகிலெங்கணும் சங்குசெய கண்டி நாதமும் முழக்கமாகும்.

அட்சய வருடம் முடிந்தவுடன் பிரபவ வருடம் சித்திரை மாதம் 15-ந் தேதி பூர்வபட்சமும் ஏகாதசி திதியும் குருவாரமுங் கூடிய சுபதினத்தன்று நீங்கள் எல்லோரும் இந்திர நீலகிரி பருவதம் சென்று அங்கு சில நாள் தங்கியிருந்து அவ்விடத்திலுள்ள முனீஸ்வரர்களின் உபதேசம் பெற்று அம்மலையடிவாரத்தில் அணந்த நகர்களை உண்டுபண்ணி கேதார வனசித்தர்களாகிய இராமயோகி ஐயர், சிதம்பர தீக்ஷிதர், சுப்பைய சுவாமிகள், சுந்தரேஸ்வர சுவாமிகள் முதலிய யாவரும் ஆசீர்வதிக்க ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் புடைசூழ தேவர்கள் புஷ்பமாரி பொழிய பட்டாபிஷேகம் கொள்ளப்புகும்.

ஹே! வீர பிரம்ம்மா தெக்ஷணதேசம் சென்று வருவாய். அன்றியும் இப்பூவுலகம் முழுமையும் சுற்றி வந்தாலும் நலம். ஜே. ஜே. விஜயீபவ எனக் கூறியருளிய சாம்பவியானவள் அந்தர்த்தானமாயினள். அப்பால் சித்தர் முதலான யாவரும் நமது வீரபிரமம் அவர்களும், அம்பிகையைத் தோத்தரித்து தேஜோமயானந்தத்துடன் தவயோக நிஷ்டானுபூதியிலமாந்தனர். சுபம்—சுபம்—சுபம். ஜெய ஜெய வந்தேமாதரம்—அல்லாஹு அக்பர்—மகாத்மா காந்திக்கு ஜே. ஏழாவது பத்திரிகை. இரண்டாம் பாகம் முற்றுப்பெற்றது.

சாதுர்லட்சம் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார்

நா. விசுவநாதன்,
தெலுங்கு பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகச் சங்கம், தஞ்சாவூர்.

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் பதினொன்றும் அவதார புருஷர். சாதுர் லக்ஷ கிரந்தம் சங்கீர்த்தனாசாரியார் என மதிப்புடன் அழைக்கப்பட்டவர். இவர் காகதீய அரசில் பணிபுரிந்தவர். சிம்மாசலத்து நரஹரியின் பக்தர். நாம சங்கீர்த்தனத்தை எந்நேரமும் நிகழ்த்திக் கொண்டிருந்தவர். வைணவ பக்தி மார்க்க சித்தாந்தத்தை தெலுங்கு மொழியில் உரைநடையாக முதன் முதலில் எழுதிய மகான்தான் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார். முதன் முதலில் ஆந்திரத்தில் ஸ்ரீ இராமானுஜரின் சித்தாந்தத்தை பின்பற்றி உரைநடையில் சங்கீர்த்தனங்கள் இயற்றி போதித்தவர். வைஷ்ணவ நெறியில் நின்று பாகவதோத்தமனாக விளங்கியவர். ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய சங்கீர்த்தனங்களின் தொகை நான்கு லட்சம் கிரந்தங்கள் கொண்ட உரைநடையாகும்.

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் இசை, நாட்டியக்கலைகளில் வல்லுனராகத் திகழ்ந்தவர். அஹோபிலம், சிம்மாசலம் முதலிய ஆந்திர பாகவதர்களுடன் ஒன்றரக்கலந்து, நன்முறையில் உபசரித்து, பக்தி மார்க்கத்தை வளர்த்தவர். சிம்மாசலத்தில் வீற்றிருக்கும் நரசிம்மமூர்த்தியின் பேரில் பேரன்பு கொண்டு உபாசித்து பல தொண்டுகள் செய்தவர். மேலும் இவர் தமிழகத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீரங்கநாதரின் பக்தராகவும் திகழ்ந்து, தாம் இயற்றிய உரைநடை சங்கீர்த்தனங்களை அரங்கநாதனின் பொற்பாத கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்தவர்.

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரின் வாழ்நாளிலேயே நான்கு லட்சம் கிரந்தங்கள் கொண்ட வசன பாகங்களை தாமிர ஏடுகளில் படிவம் எடுத்து அவ்வேடுகளை ஸ்ரீரங்கம் பண்டாரகத்தில் சேமிக்கச் செய்தவர். ஸ்ரீ அன்னமாச்சாரியாருக்கு முன்பாகவே ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் தாமிர ஏடுகளில் சங்கீர்த்தனங்களை எழுதி வைத்தவர் என்பதும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். நரசிம்ம மூர்த்தியின் கருணையால் கவிதைகள் புனையும் ஆற்றலைப் பெற்றவர்.

சங்கீர்த்தனாசாரியாரின் வரலாற்றுச் செய்திகள் தமிழகத்து மக்கள் தெரிந்துகொள்வதற்காகவும், ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் இசை மேதை என்று சங்கீத உலகம் அறிவதற்காகவும், இக்கட்டுரை இப்பருவ இதழில் வரையப் பட்டுள்ளது.

ஸந்தூர் எனும் குக்கிராமத்தில் லக்ஷ்மீ அம்மாள், கோவிந்தாசாரியார் எனும் வைணவ தம்பதிகள் வாழ்ந்துவந்தனர். இத்தம்பதிகளுக்கு தாரண வருடம் பாத்திரபத கிருஷ்ண சதுர்தசி கேட்டை நட்சத்திரம் கூடிய வேளையி லும் செவ்வாய்கிழமை அன்று ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் ஜனனமானார். பிறந்தத் திருக்குமரன் கொடியவேளையிலும், பிறவிலேயே அந்தகனாகவும் பிறந்தமையைக்கண்ட வைணவ தம்பதிகள் மனம் உடைந்து மிகவும் வேதனை யில் மூழ்கினர். என்ன செய்வதென்று தெரியாமல் அவதியுற்று பின்பு அக் குழந்தையை அழித்துவிட முடிவெடுத்தனர். அவ்வூரிலேயே உள்ள பாழுங் கிணற்றில் திருக்குமாரனை யாருக்கும் தெரியாமல் போட்டுவிட்டு தம் விடுதிக்கு சென்றனர்.

கிருஷ்ணமாசாரியாரை ஆட்கொள்ளவேண்டி சிம்மாசலத்து நரசிம்மர் திருவுள்ளம் கொண்டார். அம்மூர்த்தியால் ஏவப்பட்ட கிருஷ்ணகுமார் எனும் சன்யாசி, பாலகன் வீற்றிருக்கும் பாழுங்கிணற்றடிக்கு வந்து சேர்ந்தார். கிணற்றிலிருந்து அச்சிறு குழந்தையை எடுத்து ஆனந்த பரவசங்கொண்டார். பாலகனை தாமே வளர்க்க மனம்கொண்டு தம்மிருப்பிடமான மடாலயத்தில் சில நாட்கள் வளர்க்கச் செய்தார். பாலகனும் நன்கு வளர்ந்து நடக்க முற் பட்டான். பாலகனின் அந்தக அவதியை கண்ணுற்ற சன்யாசி மிக மன வேதனை அடைந்தார். ஒரு நாள், பாலகனை கிருஷ்ணமாசாரியாரை யாருக் கும் தெரியாமல் இரவு வேளையில் நரசிம்ம சந்நிதியில் மறைத்துவிட்டு சன்யாசி மறைந்துவிட்டார்.

நரசிம்மமூர்த்தி கொடுத்த தீர்த்தப் பிரசாதங்களை பாலகன் தன் கண்ணிமைகளில் தெளித்துத் துடைத்துக்கொண்டான். அத்தருணத்திலேயே திருக்குமரனை கிருஷ்ணமாசாரியாரின் கண்பார்வை நன்கு பிரகாசமாக மலர்ந்தன பாலகன் உலக அதிசயங்களை கண்ணுற்று ஆனந்தபரவசமானான். அழுகையை விட்டு நீங்கிய பாலகன் யோக நித்திரையில் மூழ்கினான். இந் நிகழ்ச்சி விக்ருதி வருடம் மார்க்கசிரம் துவாதசி வியாழக்கிழமை இரவில் நிகழ்ந்தது. உறங்கிக்கொண்டிருக்கும் பாலகன் முன்பாக வராகமூர்த்தி ரூபத்தில் எம்பெருமானார் தோன்றினார். "நான்கு லட்சம் கிரந்தங்கள் கொண்ட வைணவ சித்தாந்த வசனங்களை நீ இயற்றவேண்டும்" என பாலக னை கிருஷ்ணமாசாரியாருக்கு வராகமூர்த்தி கட்டளையிட்டார். வராக மூர்த்தியின் கட்டளையை கேட்ட பாலகன் திகைத்து நின்றான். வராக மூர்த்தியை பார்த்து பாலகன் "இது என்னால் இயலாத காரியமாயிற்றே, இதற்கு நான் ஏற்றவனல்ல நான் என் செய்வேன் அருள்செய்ய வேண்டும்"

என விண்ணப்பம் செய்துகொண்டார். அந்த நல்ல நாளிலே நரசிம்மமூர்த்தி பாலகனாக நிற்கும் கிருஷ்ணமாச்சாரியாருக்கு அருளாசிகள் கூறி மறைந்தார். அந்நாள் முதற்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரின் திருவாக்கு மலர்ந்ததாக சிம்மகிரி வசனங்கள் சான்றளிக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரின் குணநியங்களை கேட்டறிந்த அவரது பெற்றோர்கள் பெருமிதங்கொண்டு நரசிம்மமூர்த்தியின் கருணை உள்ளத்தை புகழ்ந்தனர். தாமும் கிருஷ்ணமாசாரியாருடன் சேர்ந்து வாழ வேண்டுமென நினைத்தனர். கிருஷ்ணமாசாரியாருக்கு பின்பு அனந்தாசாரியார் எனும் உடன்பிறப்பும் அவ்வைஷ்ணவ தம்பதிகளுக்கு ஏற்பட்டது. அனந்தாசாரியார் கிருஷ்ணமாசாரியார், இலக்குமி அம்மாள், கோவிந்தாசாரியார் எனும் இந் நால்வர் ஒன்றுசேர்ந்து ஸந்தூர் கிராமத்தில் வாழ்ந்துவந்தனர் எனும் செய்தியும் சங்கீர்த்தனங்களில் சான்று பகர்கின்றன.

கிருஷ்ணமாச்சாரியின் திருக்கல்யாணம் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்றது. அவ்வைபவத்தில் சங்கீர்த்தனாசாரியாரை தடுத்தாட்கொள்ள வேண்டும் என சிம்மாசலமூர்த்தி நினைத்தார், கல்யாண சடங்கில் சமஷ்டி போஜனம் நிகழ்ந்ததை கண்ணுற்ற ஸ்ரீரங்காசாரியார் தாய்வழி மாமனும் ஆவர். ஸ்ரீரங்காசாரியரின் மகளை (மணப்பெண்ணை) கிருஷ்ணமாசாரியாருடன் அனுப்ப மறுத்துவிட்டார். கல்யாண சடங்கில் நம்பிதோழனாக சமஷ்டி போஜனம் செய்தவர் இறைவன் சிம்மாசல நரஹரியே என ஸ்ரீரங்காசாரியாரால் அறிய முடியவில்லை. கிருஷ்ணமாச்சாரியார் தனக்கு ஏற்பட்ட மனவேதனையை போக்கும்படி எம்பெருமானாரிடம் வேண்டிக்கொண்டார். எம்பெருமான் கருணை கூர்ந்து ஸ்ரீரங்காசாரியாரின் கனவில் தோன்றி ஸ்ரீரங்காசாரியாரின் பேத புத்தியை மாற்றிக்கொள்ளும்படி கட்டளையிட்டார். ஸ்ரீரங்காசாரியார் எம்பெருமானின் கட்டளையின்படி சமஷ்டி போஜனத்தை மறுமுறையும் விசேடமாகச் செய்து முடித்து தன்மகளை கிருஷ்ணமாச்சாரியாருடன் வழியனுப்பி வைத்தார்.

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் தன் மனைவியுடன் சேர்ந்து பாகவத கைங்கர்யங்கள் செய்து வாழ்ந்து வந்தார். சில நாட்களுக்குப்பின் புத்திர பாக்கியம் பெற்றார். விதிவசமாக அந்த புத்திரன் உலகத்தை விட்டு மறைந்தான். கிருஷ்ணமாசாரியார் புத்திர சோகத்தில் மூழ்கினார். அப்போதும் பகவான் தடுத்தாட்கொண்டு கிருஷ்ணமாச்சாரியாரை மனபக்குவம் அடைய செய்தார். கிருஷ்ணமாசாரியார் இல்லறவாழ்வில் மனமில்லாமல் விரக்தனாக திரிந்தார். வைணவ பக்த சிரோமணியாக விளங்கும் மோகனாங்கி எனும் வார வநிதையுடன் நட்புக்கொண்டு வாழ்ந்துவந்தார். எம்பெருமான் கிருஷ்ணமாச்சாரியாரை தடுத்தாட்கொள்ள வேண்டுமென நினைத்து கிருஷ்ணமாசாரியார் வாழ்ந்து வரும் இல்லத்திற்கு அஹோபில பாகவதர்களை அனுப்பி வைக்கிறார்.

நரஹரியால் ஏவப்பட்ட போதகமூர் நாராயணய்யா, ஔபளய்யா அச்சுதய்யா, அனந்தய்யா, லக்ஷ்மய்யா, ஸ்ரீசென்மைய்யா எனும் அகோபில பாகவதர்கள் கிருஷ்ணமாசாரியார் வாழ்ந்துவரும் இல்லத்திற்கு வந்தடைகின்றனர். அவ்வேளையில் கிருஷ்ணமாசாரியாரும் மோகனுங்கியும் சரஸஸல்லாபங்கள் செய்து கொண்டிருந்தனர். அந்த வேளையில் அகோபில பாகவதர்கள் தம் பேட்டிக்காக நிற்பதைக் கண்டார் கிருஷ்ணமாச்சாரியார். பாகவத அபசாரம் செய்துவிட்டேனே. உலக மாயையில் என் மனம் தடுமாறியல்லவோ செயல்படுகிறேன். இனி நிவாரணம் தேடிக்கொள்ள வேண்டுமே என நினைத்தவாறு, சிருங்கார புருடி வேஷத்தைக் கலைத்து விரைவாக ஏகாங்கி வேஷம் பூண்டு அகோபில பாகவதர்கள் முன்பாக வந்துநின்று தண்ட பிரணாமங்கள் செய்து தம் அபராதங்களை பொறுத்தருள வேண்டுமென்று கிருஷ்ணமாசாரியார் வினவினர்.

அகோபில பாகவதர்களும் இக்காட்சியைக்கண்டு ஆனந்த பரவசமாகி கிருஷ்ணமாசாரியாரை பலவிதமாக புகழ்ந்தனர். கிருஷ்ணமாசாரியாரும் அகோபில பாகவதர்களும் ஒன்று சேர்ந்து திவ்விய நாம சங்கீர்தனைகள் நிகழ்த்தினர். கிருஷ்ணமாசாரியார் தனிமையிலும் அகோபில பாகவதர்கள் முன்பாகவும் சங்கீர்த்தனங்கள் சொல்லும்பொழுது நரஹரி மூர்த்தியே பால ரூபமாக வந்து கிருஷ்ணமாசாரியாரின் சங்கீர்த்தனங்களை பனை ஓலையில் எழுத்தாணியின் மூலம் படிவம் எடுத்ததாக உரைநடை சங்கீர்த்தனங்களில் சான்று கிடைக்கிறது. பகவான் சங்கீர்த்தனங்களை படிவமெடுத்ததைக் கண்ட அகோபில பாகவதர்கள் கிருஷ்ணமாசாரியாருக்கு தண்டனிட்டு புகழ் மாலைகள் சூட்டினர். திரு கிருஷ்ணமாசாரியார் இயற்றிய உரைநடை வசனங்கள் மற்றும் வசனங்களில் நடுவில் வரும் கீதங்கள் நாம சங்கீர்த்தனங்களை இனி பார்ப்போமாக:—

"பாலரூபம்புன வச்சின ஸ்வாமி க்ஷீரம்புலு தெச்சி உபயோகிம்பு மனின புச்சுகொனி லோபலிகேகி ஹஸ்தமூல நயனமுல துடுசுகொன்ன ஸமயம்புன நந்தத்வமு மானெ ஆச்சர்யபடி நித்ரிஞ்சு ஸமயம்புன ஸ்வாமி தனஸ்வப்னம்புன வராஹாவதாரம்புன ப்ரத்யக்ஷம்பை நாஸந்நிதினி ஸங்கீர்தன நாமோச்சரணர்புலு உபநிஷத்வாக்கியம்புலு பரமபக்திபரித சாதுர்லக்ஷுக்ரந்த ஸங்கீர்தனம்புலு செப்பு மனெனு".

நே நெக்கட! நாமோச்சரணம்பெக்கட! ஜடுண்டனு, மூடுண்டனு" அனின ஸ்வாமி உபதேசமு ஜேஸிரி.

கிருஷ்ணமாசாரியாரின் நாமஸ்மரணை:- தேவா பரமபுருஷா தயாபரா பரமதர்மநிகரா துக்கவிமோசனு மங்களாகாரா தோஷநிக்ரஹரனு

நிரவந்த்யா, நிரவதிகா, நித்யநிரஞ்ஜஹ நிரவிகல்பா, நிராலம்பா, நிராச்ரயா நமோ, ஸிம்ஹகிரி நரஹரீ, நமோ நமோ தயாநிதீ.

தேவா ஶ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்புனகு தேவதாந்தரமே ஹானி, சித்ஸ்வரூபம்புனகு காவ்யமே ஹானி. பதபக்திகி மோகவிலம்பமே ஹானி. மீ தாஸுலகு ஆசார்ய கடாக்ஷமு லேகுண்டுடயே ஹானி. ப்ராணஹானி ஸமயமந்து பகவத்பக்தி மறுவுக. விஷ்ணுபுராணமுலு ஹரிகதலு தலஞ்சி. இதரமுல தலஞ்சக ஸம்ஸார மோஹ ப்ராந்தி விடிசி ஸிம்ஹகிரி நரஹரீ நமோ நமோ தயாநிதீ.

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure, by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up ? The Library waits for your answer.

Collector & Director,
T. M. S. S. M. Library, Thanjavur.

இரண்டாம் ஏகோஜியும், பிரபஞ்சாமிருதசாரமும்

****

சேவாதர்மம் - அதமசேவக நிரூபணம்

*****
***
*

ஸாஹித்ய சிரோமணி

திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி,

சம்ஸ்க்ருத பண்டிதர்.

சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.

*

இந்நூலக பருவ இதழ் எண் 36-ன் தொடர்ச்சியாக இந்தப்பகுதி வெளிவருகிறது. இரண்டாம் ஏகோஜி ராஜதர்ம சாஸ்திரங்களைக்கற்று அவைகள் மக்களுக்கும் பயன்படும்படி பிரபஞ்சாமிருதசார ராஜரஞ்சன புராணம் என்னும் பெயரில் செய்திகள் பலவற்றை சிறுசிறு தலைப்புகளாகத் தொகுத்துக் கூறியுள்ளார். அவற்றில் சில* இதற்கு முன்னால் வெளியிடப் பட்டுள்ளன. தொடர்ந்து தற்போது சேவா தர்மம் என்னும் தலைப்பில் மன்னனிடம் பணியாளர்கள் நடக்கவேண்டிய முறைபற்றியும், 'அதமசேவக நிருபணம்' என்னும் தலைப்பில் அதமசேவகனுடைய செயல்களைப்பற்றியும் தற்போது வெளிவருகின்றன.

---

* 1. தேவீ மாஹாத்ம்ய சதகம் — V. Gopala Iyengar - TMSSM. Jl. XX-I pp 1-10.
2. பரபிரும்மதத்வ நிருபனம் — I bid - 2-3 pp. (1-20)
3. துளஜா மஹாராஜ குணவர்ணனம் — by the author - TMSSM. Jl. XXX p. 1-12
4. தீபாம்பா மாஹாத்மியம் — N. Srinivasan,TMSSM.XXXIII p. 1-18
5. உத்தமசேவக நிருபனம் — by the author, TMSSM. Jl. XXXIV p. 1-14
6. ராஜபுத்ரநீதி
7. அவிசாரரமணிய கதை } T, R. Bheema Rao, TMSSM. XXXIV - p. 23-46

வடமொழியில் பர்த்ருஹரி என்ற கவிஞர் ஓர் எஜமானனிடம் சேவகம் புரிவது எவ்வாறு என்ற தத்துவம் யோகிகளுக்கும் புரியாதது என்றுர். ஏனெனில் ஓர் பணியாளன் எஜமானனின் அருகிலேயே அமர்ந்திருந்தால் ஏன் இங்கேயே இருக்கிருய்? எங்கேயாவது பார்வையில் படாத இடத்தில் அமர் என்பார். அவ்வாறு இருந்தால், எங்கே ஓடிவிட்டாய்? அருகிலேயே இரு என்பார். ஏதாவது கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தால் என்ன அதிகப்பிரசங்கித்தனமாய் பதிலளிக்கிருய் என்பார். இவ்வாறு பணியாள் சுதந்திரமாக இருக்கமுடியாதநிலை ஏற்படுவதால் பணிசெய்வது கடினம் என்று அந்த கவிஞருடைய கருத்தாகும்.

மேற்கூறியபடி சிலர் இருக்கலாம். ஆயினும் எஜமானன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் காளிதாசன் ஓரிடத்தில் விளக்குகிருர்: எஜமானனிடம் பணியாட்களுக்குப் பயம் ஏற்படும் படியான குணங்களும் அதேசமயம் எஜமானனிடம் பிரியத்துடன் எப்பொழுதும் எதுவும் சொல்ல லாம் என்ற ஆவலை உண்டுபண்ணக்கூடிய குணங்களும் இருக்கவேண்டும். கடலில் திமிங்கலம் முதலிய துஷ்ட ஜந்துக்களும் உள. இரத்தினங்கள் போன்ற ஆவலை உண்டுபண்ணும் பொருட்களும் உள. அதுபோல எஜமான னிடம் இருவித குணங்களும் இருந்துவிட்டால் பணியாட்களுக்கு எந்தவிதக் கஷ்டமும் இருக்காது என்று எண்ணுகிறேம். இந்த வழியில் செல்லும் எஜமானர்களிடம் பணியாட்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற கடமையைத்தான் இந்த சிறிய நூல் புகட்டுகிறது. கடமையைச் செய்தால், தானே உரிமை வரும்.

வேதம், ஓர் தந்தை, தனயனிடம் அதிகாரமாகச் சொல்வதுபோல் இந்தக் காரியம் தர்மம், இதைச்செய்தால் சுகம் பெறலாம். இதைச்செய். இக்காரியம் அதர்மம். இதைச் செய்யாதே. செய்தால் துக்கம்தான் வரும் என்று மானிடர்களுக்குப் புகட்டுகிறது. இதையே புராணங்கள் ஓர் நண்பனைப் போல் ஓர் கதைசொல்லி அதன்மூலம் மானிடர்களைத் திருத்துகிறது. இதே விஷயத்தை காவ்யமும், வியங்யத்தால் மானிடர்களைக் கவர்ந்துவிடுகிறது. ஆகவே வேதம், புராணம், காவ்யம் இம்மூன்றும் வெவ்வேறு வழிகளில் மனிதர்களை நல்வழிப்படுத்தத்தான் உண்டாயின என்பது எல்லா புலவர் களுக்கும் தெரிந்தவிஷயமே.

இந்நூலாசிரியர் இரண்டாவது முறையைக் கையாள்வதன்மூலம் பணியாட்களை, தான் அரசகுமாரனுக இருந்தும் தன் நண்பர்களாகப்பாவித்து ஓர் கதையின் வடிவம் கொடுத்து பணியாட்களின் கடமைகளை நினைவு கூறுகிருர் என்பதும் அவர் சீர்திருத்தக்காரர் என்பதும் புலனுகிறது.

இந்நூலின் சுருக்கம் :—

I. துவாரகையின் அரசனுன கிருஷ்ணன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிருர். ஒரு நாள் அவரைப் பார்க்க நாரதர் வருகிருர். கிருஷ்ணன் அறிவின் பிரதிநிதியான நாரதருக்கு உபசாரம்செய்து ஓர் ஆசனத்தில் அமர்த்துகிருர். இருவரும் பல விஷயங்களைப்பற்றி பேசும்பொழுது நாரதர் கிருஷ்ணனிடம் சேவகர்களின் கடமையைச் சொல்லுமாறு தூண்டுகிருர். கிருஷ்ணனும் அவர் கேள்வியை மதித்து பதிலளிக்கிருர்.

மனிதர்களுக்கு ஐவர் தந்தைக்குச் சமானம் என்று கூறுவர். தன்னைப் பெற்றவன், பூணூல் அணிவித்தவன், கல்விபுகட்டினவன், அன்னம் அளித்தவன், பயத்திலிருந்து காத்தவன் இவர்களே அந்த ஐவர். இது சேவகர்களுக்கும் பொருந்தும். கடவுளைச் சேவிப்பதால் மோக்ஷம் கிட்டுவதுபோல் நற்பலனை அடைய பணியாளும் தன் எஜமானனைக் கடவுளாகக் கருதவேண்டும். ஏதோ ஒரு சக்தியில்தான் மனிதன் அரசனுக ஆகிருன். அவன் எல்லோரையும் காக்கிருன். ஆகவே பணியாளும் தங்களைப் பரம்பரை பரம்பரையாகக் காக்கும் அரசனைத் தெய்வமாகக் கருதுவதில் தவறு இல்லை, தெய்வத்தின் பயத்தால் நற்காரியங்கள் செய்வது போல் அரசனிடமும் பக்தியால் நற்குணங்களைக் காட்டி அவர் இட்ட பணிகளைச் செய்ய வேண்டும்.

அரசனிடம் பக்தி இல்லாதவர் நடத்தை கெட்ட சன்யாசிகள் போலவும், தந்தையை விரோதிக்கும் தனயர்கள் போலவும், கணவனை ஏமாற்றி விபசாரம் செய்யும் குலஸ்திரீகள் போலவும், பரமேஸ்வரனை வெறுக்கும் மானிடர்கள் போலவும் நரகத்தையே அடைவர்.

அரசன் உத்திரவிட்டால் எவராக இருப்பினும் கொல்லத் துணிய வேண்டும். இதில் பாசம், நீதி முதலியவைகளுக்கு இடமில்லை. ஆனுல், வேதம் ஓதும் அந்தணராக இருந்தாலும், மது உண்டால் அவன் குடிகாரன் என்று தான் உலகம் சொல்லும், அவ்வாறே நற்குடியில் பிறக்காத பண்பு இல்லாத அரசனையும் கொடியவன் என்றுதான் சொல்வார்கள். அவனுக்குச் சேவை செய்வதே பாவம். குலஸ்திரீ தன் கணவனுக்குப் பணி செய்வது போல் பணியாள் தன் எஜமானனுக்குப் பக்தியுடன் பணிபுரிய வேண்டும்.

II. தாழ்ந்த குணம் உடைய சேவகர்கள் சிவ-விஷ்ணு துரோகத்தையும், தனது எஜமானனின் துரோகத்தையும், அந்தணனைக் கொல்லவேண்டும் என்ற மனமுடனும், ஆசாரமுடையவனுக இருந்தும், ஆசாரத்தைச் செய்வதில் முயற்சியற்றவனுகவும், தயை, தாக்ஷிண்யம் அற்றவனுக இருப்பான். அந்த அதமன் தெய்வகணங்கள், பித்ருகணங்கள் எல்லாவற்றுலும் தள்ளப்படுகிருன். தூய்மையற்றவனுயும், உண்மையற்றவனுயும் விளங்குகிருன். எது புண்யம், எது பாபம்

என்பதையும் அறியமாட்டான். கெட்ட கார்யங்களை செய்கின்ற மனமுடைய வனாகவும், பயத்தினால் பீடிக்கப்பட்டவனாகவும், துஷ்டர்களாலே நெருங்கிய சேர்க்கையை உடையவனாகவும் விளங்குகிறான். நியாயமற்ற முறையில் பணத்தைச் சேர்ப்பதில் அவன் ஈடுபடுகிறான். தன்னுடைய எஜமானனுடைய ரகசியங்களை எவன் கூறுகிறானோ அவன் அதமன் என்று நீதிமான்களால் சுட்டப்படுகிறான். அவன் நீதி சாத்திரமறிந்தவர்களுடைய நல் வார்த்தைகளை மாறுபட்ட கருத்துக்கள் உடையதாகக் கருதி தன்னுடைய இறப்பிற்குக் காரணமாகிறான். அந்த அதமன் தன்னுடைய கெட்ட காரியங்களைச் செய்கிற வனாய், சாத்திரம், புராணம், முதலியவற்றை ஒரு பொழுதும் கேட்காமல் சிலவற்றைக் கேட்டு அதை மாறுபட்டதாக வர்ணித்து ஒருவருக்கொருவர் சண்டையிடும் நிலையை உருவாக்குகிறான். நன்மை செய்வதில் ஈடுபாடற்ற வனாய், கலகத்தை உண்டுபண்ணுவதில் நாட்டமுடையவனாய் தெய்வம், பிராம் மணர் இவர்களை நிந்திப்பவனாயும் விளங்குவான். புதிய விருந்தினர்களாக வரும் பிராம்மணர்களை துன்புறுத்தி அன்னமிட்டு அதை வெளியில் தெரிவிக் கின்றதால் அவனிடத்து லக்ஷ்மி, சரஸ்வதி, பவானி இவர்கள் வெறுப்படை கிறார்கள். பரம்பரையாக வரும் குல தர்மம், குலத் தன்மை முதலியவற்றை பக்தியோடு அவர்கள் செய்வதில்லை. தன்னுடைய ஆசாரமின்மையாலும், மனைவி ஆசாரமின்மையாலும் நல்ல குலம் அழிவடைகிறது.

அதமனின் எண்ணங்கள் சிற்சில சமயங்களில் நிறைவேறினாலும் அம்பிகையானவள் அவர்களை பூமியில் நிலைநிறுத்தமாட்டாள். எந்தவிடத்தில் கீழ்ப்பட்ட சேவகர்களின் கால்கள் பட்டதோ அவ்விடத்தில் அவர்களுக்கு உயர்வு இல்லை. அவர்களுடைய குலமானது வம்சமற்றதாக ஆவது நிச்சயம். அவ்வாறான பெண்களும், சேவகர்களும், அவ்வாறான செயல்களை உடையவர் களும் தகுதியற்றவர்களாக எந்த செயலுக்கும் பயன்படமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் எல்லாத் துன்பங்களுக்கும் உள்ளாகி மறுபிறப்பையும் அடைகிறார்கள்.

॥ प्रपञ्चामृतसारराजरञ्जनपुराणे ॥

॥ सेवाधर्मकथा ॥

॥ श्री गणेशाय नमः ॥ ॥ श्री सरस्वत्यै नमः ॥ ॥ श्री गुरुभ्यो नमः ॥

देवर्षिर्नारदः श्रीमान् भगवन्तं यदूद्वहम् ।
पप्रच्छ सेवकानां तु स्वामिभक्त्यैव केवलं ॥

ऐहिक्यामुष्मिकीकीर्तिर्मुक्तिश्चापीह जायते ।
किं वदन्तिति लोकेस्मिन् प्रथिता विद्यतेतराम् ॥

तेषां ज्ञानविहिनानां कथं मुक्तिर्हि जायते ।
ज्ञानादेवतु कैवल्यमिति शास्त्र विनिर्णयः ॥

तत्र मे संशयो भूयान् तन्मेविस्तरतो वद ।
एव मुक्तस्तु मुनिना कृष्णो वचनमब्रवीत् ॥

यथा सर्व फल प्राप्तिः सुतानां पितृ सेवया ।
वनितानां भर्तृ भक्त्या जायते सकलं फलम् ॥

श्रुति स्मृति पुराणोक्तज्ञानं सद्गुरुसेवया ।
छात्राणां च यथा तद्वत्सकलं स्वामिसेवया ॥

सेवकानां भवत्येव नात्रकार्या विचारणा ।
स्वामि भक्त्या केवलया शुद्धं ज्ञानं तु जायते ॥

ते नैव मुक्तिर्भवति संशयो नास्ति नारद ।
पुनः पप्रच्छ देवर्षिः वसुदेवसुतं हरिं ॥

स्वामिन् चतुर्णामेतेषामुत्तमः कोमहान्मतः ।
तंवदत्वं दयासिन्धो दीनबन्धो दयावशात् ॥

एवं पृष्टः स भगवान् नारदेन महात्मना ।
सस्मितं प्राहदेवर्षिं वसुदेव सुतो हरिः ॥

सर्वेषामपि लोकानां पितरौ कारणं यतः ।
तस्मान्महान्तौगदितौपितरौजगती तले ॥

नारदो विस्मयाविष्टोऽव्यवारयतितं हरिं ।
स्वामीमहानितिप्रोक्तं युष्माभिः प्रथमं हरे ॥

तत्कथं वदतत्वेन सर्वतत्व विचक्षण ।
इति श्रुत्वा वचस्तस्य नारदस्यमहात्मनः ॥

देवकीनंदनः श्रीमान् वचनं प्राह सत्वरम् ।
शृणु नारद शास्त्राणां सर्वेषामेव निर्णयः ॥

जनिता चोपनेता च यस्तु विद्यां प्रयच्छति ।
अन्नदाता भयत्राता पञ्चैते पितरः स्मृताः ॥

यस्मादतः सेवकानां स्वाम्येव पितरौ स्मृतः ।
स एव सर्वावस्थासु संरक्षणकरः परः ॥

स्वामिसंसेवया सर्वफलप्राप्तिर्हि जायते ।
सेवकैः स्वामिसेवैका कार्या सद्धर्मचारिभिः ॥

पुनः पप्रच्छ देवर्षिर्यशोदानंददायिनम् ।
प्रायश्चित्तं किमस्तीह स्वामिद्रोहकृतां नृणाम् ॥

एवमुक्तः स भगवान् विस्मयाविष्टमान सः ।
नारदं प्राह पंचानां प्रायश्चित्तं न विद्यते ॥

ते पञ्च के वेति यदि शृणु तान् मुनिसत्तम ।
सन्यासिनः स्वधाचारभ्रष्टाः पितृविरोधिनः ॥

कुलाङ्गनाजाररताः स्वामिद्रोहविधायिनः ।
महादेवद्रोहरताः पञ्चानामपि नारद ॥

प्रायश्चित्तं न चास्तीह श्रुतिस्मृति निरूपितम् ।
अतोऽनुजीविमनुजैः स्वामिद्रोहः कदापि हि ॥

नैव कार्यो मुनिश्रेष्ट सर्वतत्वविचक्षण ।
नारदः पुनरप्याह कृष्णं यदुकुलोद्वहम् ॥

वयं सर्वे पशुपतेः सेवकाः शङ्करस्य भोः ।
यथऽस्मत्तोतरं न स्यात् बुद्धिर्वैशधमाप्नुयात् ॥

तथा सेवकधर्मं त्वं निरूपय दयानिधे ।
ततः स भगवान् कृष्णो नारदं प्राह विस्मितः ॥

अस्मिन् कलियुगे देवमुने नारद सत्तम ।
तुलजेन्द्रमहाराजतनूजें कॅद्ररूप भूक् ॥

सेवाधर्मं वदिष्यामि गहनं योगिनामपि ।
सेवकानां महद्भाग्यं जायते स्वामिसेवया ॥

स्वकीयनेतृचित्तानुसारिवर्तनतापि च ।
सेवाधर्मोतिकठिनः खड्गधारावलेहवत् ॥

स्वस्वाम्यनुज्ञया भृत्यः स्वकीयं पितरं सुतम् ।
मातरं युवतीं चापि हन्यादेवाविचारयन् ॥

स्वाम्याज्ञया स्वामिबन्धोस्तत्सुतेऽथाधिकारिणि ।
दाक्षिण्यं नैव कुर्वीत स्वामिसेवाकृतादरः ॥

महादेवनृपस्वामिदाक्षिण्यासक्तमानसः ।
अकुलीनस्यानुजीवी विदध्यान्नैव सेवनम् ॥

तत्सेवया सेवकोऽपि कुलहीनः प्रजायते ।
साध्वाचारो यथा विप्रो वेदवेदाङ्गपारगः ॥

मद्यविक्रेतृविपणौ दुग्धं पिबति चेत्सकृत् ।
तदा सर्वे जना ब्रूयुस्तं द्विजं मद्यपायिनम् ॥

तद्वद्धीनकुलस्यापि सेवातस्तां विवर्जयेत् ।
अनुजीवी मानधनो दयापात्रं निजेशितुः ॥

भूरिद्रव्ये परामाशां सर्वथा संपरित्यजेत् ।
वाराङ्गना वितनुते तृष्णां भूषाविधौ यथा ॥

यथा कुलाङ्गना साध्वी भर्तृपादाब्जसेवने ।
तद्वत्तृष्णां नरः कुर्यात् स्वामिसेवनकर्मणि ॥

सदाचारो यथा साध्व्याः शुभोदर्को भवेत्तथा ।
अनुजीविजनस्यापि स्वकीयस्वामिसेवनम् ॥

सेवाविधायिनः प्रायो नराः सर्वे कलौ युगे ।
तां विनोदरपूर्तिः न दरीदृश्यतेऽधुना ॥

स्वामिभक्त्या केवलया सेवा यदि कृता भवेत् ।
इहामुत्रैकफलदा सैव स्यान्नात्र संशयः ॥

भक्त्या या रहिता सेवा या कृताप्यनुजीविना ।
ऐहिकामुष्मिकफलं न ददाति न संशयः ॥

सेवासु नृपसेवा तु जनानामुत्तमा मता ।
अश्वमेधादियज्ञानां फलं वचनमात्रतः ॥

जायतेऽतो नृपालानामेव सेवां समाचरेत् ।
इतरेषां तु सेवायां फलप्राप्तिर्न तादृशी ॥

अष्टानां लोकपालानां मात्राभिः कल्पितो नृपः ।
अतस्तत्सेवनं भूरिफलदं ह्युत्तमं स्मृतम् ॥

इतरेषां पिशाचानां सेवनं स्वल्पदं मतम् ।
परंपरागतां सेवां जानीयात्सेवको जनः ॥

मतिदं वृद्धवचनं शृणुयात्तत्तदन्त्रिकः ।
संपादयेत सततं भूयसी नृपतेर्दयाम् ॥

सैव सर्वफलं दत्ते सेवकस्य न संशयः ॥
स्वामिसंवाहनोपायं कथयामि मुने शृणु ।

साधको जीव शिवयोरभेदोपासनात् शिवम् ॥
आराधयति तुष्टः स वरान् दत्ते यथेप्सितान् ॥

तथानुजीविमनुजः स्वामिसौख्यं स्वसौख्यवत् ।
मत्वा यदि प्रवर्तेत तस्य स्वामी वशो भवेत् ॥

सेवां न कुरुते यस्तु स्वामिनः सेवको भुवि ।
स तु पित्रार्जितं द्रव्यं भुक्त्वा क्षीणोऽभिजायते ॥

अतः सेवां प्रकुर्वीत सेवकः स्वामिनः सदा ।
साधुकर्मण्यपि कृते साधुत्वं न हि जायते ॥

असाधुकर्माणि कृते साधुत्वस्य विचारणा ।
दुग्धे पीतेप्यजीर्णो तु जातु चित् भवति ध्रुवम् ॥

श्रेयः कथं भवेत्तस्य विषभक्षणकारिणः ।
अतः सेवां प्रकुर्वीत साध्वीं स्वामिहिते रतः ॥

॥ श्रीमद्राजाधिराज तुलजमहाराजसूनु - एकराजविरचिता सेवाधर्मकथा संपूर्णा ॥

॥ अधमसेवकनिरूपणम् ॥

॥ श्रीगणेशाय नमः ॥

अधमानां तु भृत्यानां लक्षणं कथयाम्यहं ।
ततोन्यजातिमान् यस्य मातास्यादन्यजातिका ॥

परस्मात्प्राप्नुतेपुत्रं सोधमः परिकीर्तितः ।
शिवविष्णवोः सदाद्रोहं स्वामिद्रोहं तथैव च ॥

विप्राणांहननं कर्तुं मानसं यस्य सर्वदा ।
सोधमः पुरुषोज्ञेयो विद्वभिर्नयशालिभिः ॥

अयंस्वामीगतश्चेत्किमन्यंकुर्वेविभुंत्वहं ।
इति यन्मानसंचास्ते सज्ञेयस्त्वधमोनरैः ॥

सर्वदा यस्तु कुरुते स्व स्वाम्यहितचिन्तनं ।
स्वामिनोमुखमुद्वीक्ष्य बिभेति नितरां हृदि ॥

मद्यपानकरः शश्वदुन्मत्तद्रव्यभक्षकः ।
परस्त्रीमैथुनकृत्परस्त्री स्वामिनोपि हि ॥

परस्त्रीमनसस्यापिं सर्वदावश्यकारकः ।
स ज्ञेयो नीतिशास्त्रज्ञैरधमः पुरुषः सदा ॥

साधूनां मज्जनेदक्षः कुलीन कुलमज्जने ।
आचारस्याप्यनाचार करणेयुक्तमानसः ॥

धर्मशास्त्र विरुद्धं तु कुरुते वर्तनं तु यः ।
सज्ञेयो नीतिशास्त्रज्ञैः पुरुषेष्वधमोनरः ॥

दया दाक्षिण्यमपि च स्वप्नेनास्त्येव यस्य हि ।
कृतः प्रसादः प्रभुणाय हितस्यप्रतिक्रियाम् ॥

कुर्याद्भस्मासुरइव सोधमः परिकीर्तितः ।
अहितं कुरुते यस्तु तुष्टेरुष्टे च भर्तरि ॥

स्वामिनः स तु विज्ञेयस्त्वधमो नय शालिभिः ॥

स्तोत्रं विधातुं दुष्टानां यतंते नियमेन ये ।
नाशं कर्तुं स्वकीयानामतीवनियमान्विताः ॥

स्वाम्येकः कश्चिदस्तीति देवो वा कश्चिदस्ति वै ।
नास्तियेषांमानवे तु ते ज्ञेयास्त्वधमानरैः ॥

यस्य कस्य नरस्यापि काषायांबरधारिणः ।
मलश्वातु यथा पार्श्वभागं नैव विमुंचति ॥

तथा यो वर्ततेमर्त्यः स ज्ञेयोह्यधमोनरैः ।
भित्तिस्थदीपज्वालेव वर्तनं यस्य संततं ॥

अधमः स तु विज्ञेयोनुचरो नीति शालिभिः ।
दैवे कर्मणिपितृये च न भोभ्योयः सदैव हि ॥

देवान् पितृगणान् सर्वान्मजस्यलिजातुचित् ।
अज्ञानवान्वचोभावं नैव वेत्ति च यः पुमान् ॥

भीरुस्वभावः पिशुनामतिर्यस्यास्तिधातुका ।
कुतर्कान् तनुते मस्तु स्वामिन्येव सदा नरः ॥

धीमः स तु विज्ञेयो नीतिशास्त्र विशारदैः ।
अनृतं भ्रमकृद्यस्य कृत्यंडंभ समन्वितम् ॥

देवान् भूतादिकानेव भजितुं यन्मनः सदा ।
क्षुद्रं मन्त्रान् सर्वदैवं जपतेकर्मणोद्यतः ॥

नीचसंबन्धकर्ता च ह्यसमंजस वाक्यवान् ।
यदीय वक्त्रे तु कला भ्रमस्यैव भासते ॥

वचनं मधुरं यस्य घातंकर्त्तुं समुद्यत ।
स ज्ञेयोनीतिशास्त्रज्ञैर्ह्यधमानुचरोभुवि ॥

शपथं कुरुते नित्यं सदाचार विवर्जितः ।
अशुचिः सत्यरहितो दयाहीनोह्यदक्षिणः ॥

नास्तीश्वर इति प्रज्ञा यस्यास्तिमनसिध्रुवा ।
इदं पुण्यं मिदं पापमिति जानाति नैव यः ॥

परंपरा भाग्य भाजां भाग्यं दृष्ट्वा दुराशया ।
दुष्टकर्मकृतौचित्ते भयं धत्ते न चैव यः ॥

दुष्टैर्बहुभिरत्यन्तं संसर्गं यः समाचरेत् ।
अन्यायेनैव धर्माणामार्जनं कुरुते भृशं ॥

स्वकीय यजमानस्य मर्माण्यस्मै निवेदयेत् ।
सोऽनुजीवितुह्यधमो गीयते नीति पारगैः ॥

यजमानस्योपकृतिमनुते यो न मानसे ।
कार्या कार्यं न जानाति स ज्ञेयोह्यधमो नरैः ॥

अहितं च हितं चापि स्वामिना न हि वेत्ति यः ।
न दूरदर्शीकपटी हितशत्रुत्व कृत्सदा ॥

स ज्ञेयोह्यधमः सर्वैं नीतिशास्त्र विचक्षणैः ।
योग्यां वार्तां समीचीनां विपरीतं तथैव यः ।
बोधयित्वा स्वंकम्बामिघातंसंतनुते परं ॥

स ज्ञेयो नीतिशास्त्रज्ञैर्ह्यधमेनुचरः परं ।
यः सदा मानसेस्वीये दुष्टकर्म विचिंतकः ॥

न शास्त्रं न पुराणं च शृणोतीह कदाचन ।
श्रुतं चेत्तस्य कुरुते विपरीतार्थ वर्णनं ॥

परस्परं विग्रहं कारयत्यनिशं तु यः ।
हितानभिज्ञः सततं भेदकृत् कलहप्रियः ॥

ज्ञानं न क्वापि यस्यास्ति सर्वज्ञ इति मन्यते ।
युक्त कार्ये कोपकारी सर्वत्रैवातिकारकः ॥

देवता ब्राह्मणाश्चापि नैव पूजयते तु यः ।
अधमः सतु विज्ञेयो नीति शास्त्र विचक्षणैः ॥

आतिथ्यभ्यागतान् विप्रान् मध्यान्हे गृहमागतान् ।
क्लेशयित्वाह्यवस्तान्नं प्रस्थापयति सत्वरं ॥

सरस्वतीं महालक्ष्मीं भवानीं च जुगुप्सते ।
परंपरा प्राप्तमपि कुलधर्मं कुलस्थितिं ॥

कुरूते नैव यो भक्त्या सञ्ज्ञेयोह्यधमोजनैः ।
स्वयमाचारहीनश्च पत्न्यथाचारवर्जिता ॥

पुत्रोह्यनाचाररतो यस्यास्ते सर्वदैवहि ।
व्यभिचाररतैराप्तैः स्वयं संबन्धवानपि ॥

संबन्धे नतु साधूनां कुलं नाशयति स्फुटं ।
भोगस्त्री जठरोत्पन्नः कुलीनैः सज्जनैः सह ॥
संबन्धकरणादेब देवतानां प्रकोपनं ॥

स्वकीय स्वामिकोपं च तेषामुपरिकारयेत् ।
सञ्ज्ञेयोह्यधमोमर्त्यो नीति शास्त्र विशारदैः ॥

अधमनां सेवकानां वंशवृद्धिर्न जायते ।
रोगमृत्यू पीडयतस्तानेव नितरां ध्रुवं ॥

अल्पायुष्याः स्वल्पबलाः स्वल्पशौर्याभवन्ति वे ।
तेषां वक्रेनैव कान्तिर्दृश्यते जातु चितु भुवि ॥

तेषां दैव बलं नास्ते नास्ते पितृ बलं तथा ।
तेषां मनोरथः सिद्धिं नायात्येव कदाचन ॥

चिरकालमिदं देवी भूमिस्तान्नैब धारयेत् ।
तदीया ज्ञानमोक्षौ हि न भवेज्जातु चित्परं ॥

तेगन्तर्वोध तामिस्रान्नरकान् दुःखदायकान् ।
ते राक्षसगणा प्रोक्ता दुष्टादैव विवर्जिताः ॥

दर्शन स्पर्श संभाषा योग्यास्ते नहि जातु चित् ।
यत्रस्थले पदं तेषां पतितं तत्र नैवहि ॥

समंजसं भवेत्तेषां निर्वंशो भविता ध्रुवं ।
तादृक् स्त्रीपुरूषस्तादृक् परिवारोपि तादृशः ॥

योग्यः कस्यापि कार्यस्य न भवेन्नियमे नहि ।
यथा तु नै ऋतीकाष्टा सर्वारिष्टास्पदा भवेत् ॥

तथारिष्टास्पदो भूत्वा पुनर्जन्म प्रपद्यते ।
सुकृतस्यानुरूपंतु फलं भुङ्क्तेन संशयः ॥

न तस्य सच्चिदानंद ब्रह्मणः प्राप्तिरस्ति हि ।
प्राप्नोतिह्यधमं जन्म तिर्यग्योनि भवं सदा ॥

श्रीमद्राजाधिराज तुल्जराज तनुज राजकुमारांबागर्भ संभव श्री महादेवैक भक्तैकराज विरचिते प्रपञ्चामृतसारराजरञ्जनपुराणे सेवाधर्मे अधमसेवकनिरूपणं नाम प्रथमोध्यायः ॥

॥ श्री कृष्णार्पणमस्तु ॥

अधमसेवकनिरूपणम् — D 18920 - B 1418
सेवाधर्मकथा — D 18929 - B 1439

திருவாரூர் மாஹாத்மியம் என்னும்

கலிவிடம்பனம்

வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்

என். ஸ்ரீநிவாஸன்,

சம்ஸ்க்ருத பண்டிதர்.

சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.

மராட்டியரின் ஆட்சிக்காலம் சுமார் 200 ஆண்டுகள் தஞ்சையில் நிலைத்தது. இதில் இரண்டாம் சகஜி மன்னரின் (கி. பி. 1684 — 1710) ஆட்சிக்காலமே ஒரு பொற்காலமாகக் கருதப்பெறுகிறது. இவன் காலத்தில் கல்வி, கலாசாரம், பண்பாடு பேணப்பட்டன. பலகலைகளும் வளர்க்கப் பெற்றன. குறிப்பாக இசை, நாட்டியம், நாடகம், ஓவியம் போன்ற நுண் கலைகள் சிறந்து விளங்கின. இவனது தந்தை வெங்கோஜிக்குப்பின் தனது 13-ஆம் வயதிலேயே அரசு கட்டிலேறினன் மன்னன் சகஜி. இவன் இளமைப் பருவத்தில் இருந்ததாலும், அரசியலில் போதிய பயிற்சியின்மையாலும், இவனது தாய் தீபாம்பாள் மற்றும் நல்லமைச்சு துணையிருக்க, சிறப்பாக அரசோச்சினன். இம் மன்னன் காலத்தில் பல்வேறு சமஸ்தானங்களிலிருந்தும், பன்மொழிப் புலவர்கள் தஞ்சையில் குடியேறினர். குறிப்பாக கர்னடக மாநிலத்திலிருந்து கங்காதரமகி, மராட்டிய மாநிலத்திலிருந்து ஜகன்னாதபண்டிதர், காசியிலிருந்து துண்டிவியாஸர், ஆந்திரத்திலிருந்து சேஷாசலபதி, தமிழகத்தின் பல்வேறு சமஸ்தானங்களிலிருந்து ராமபாரதி, வாசுதேவகவி போன்ற புலவர்களைக் கூறலாம். இவர்களை இன்முகத்துடன் வரவேற்று தமது அரசவைப் புலவர்களாக்கிக்கொண்டான் மன்னன். இவர்களுக்கு அவரவர் தகுதிகளைச் சிறப்பிக்கும் முகத்தான் கனகாபிஷேகம், தங்கப்பல்லக்கு, நிலக்கொடை, கிராம தானம் போன்றவற்றைச் செய்து அவர்களை மகிழ்வித்து அதில் தானும் மகிழ்ந்தான் சகஜி மன்னன்.

மன்னனே ஒரு புலவனாகத் திகழ்ந்ததால் புலவர்களுடைய மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதனால் "அபிநவபோஜன்" என்று புலவர்களால் புகழப் பெற்றான். இம் மன்னனுடைய காலத்தில் அத்வைத வேதாந்த சந்நியாசிகள் இத்தஞ்சைப்பகுதியில் வாழ்ந்தனர். இதனால் தஞ்சை மாவட்டத்தில் அத்வைத நூல்கள் தோன்றின.

மன்னனுக்குக் கல்வியும், வயதும் முதிரமுதிர தான் ஒரு மன்னனாகத் திகழ்ந்தாலும், ஜனகன்போல் உலகியலில் பற்றற்றநிலைகொண்டான். பொதுவாக ஒரு வேதாந்தியாகவே இருந்துள்ளான். இவன் தனது இறுதிக் காலத்தில் துறவு மேற்கொண்டு வல்லம் கோட்டையில் வாழ்ந்தாக அறிய முடிகிறது. கி. பி. 1712-ஆம் வருடம் பாத்ரபதமாதம் கிருஷ்ணபக்ஷம் துவிதீயை அன்று மன்னன் சகஜி இறந்துள்ளான்.[1] தனது வாழ்நாளில் ஏகதெய்வ உபாஸனையைக் கைக்கொண்டு ஆரூர் தியாகேசப்பெருமானைப் போற்றி பலகீர்த்தனைகளைப் புனைந்துள்ளான். தியாகேசப்பெருமான்மீது பல இசை நாடகங்களையும் இயற்றியுள்ளான்.

ஆரூரில் யானை வைத்தியசாலை

மராட்டிய மன்னர்கள் பல மருத்துவமனைகளை ஏற்படுத்தியுள்ளனர். 'ஆரோக்கியசாலை' என்ற பெயரில் நடத்தப்பெறுவது பொதுமக்கள் சென்று வைத்தியம் செய்துகொள்ளும் மருத்துவச்சாலையாகும். இதனின் வேறாக 'தன்வந்தரிமஹால்' என்ற பெயரில் ஒரு மகால் இருந்தது. இங்கு மக்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் வைத்தியம் செய்யக்கூடிய மருத்துவர்கள் இருந்து ஆய்வு செய்தனர் என்றும், பல மருந்துகள் இங்கு தயாரிக்கப்பெற்றன வென்றும் அறியமுடிகிறது. இதனைத் தவிர ஆரூரில் யானை-குதிரை ஆகியவற்றுக்கான மிகப்பெரிய வைத்தியசாலை இருந்துள்ளது இந்த வைத்தியசாலையில் கஜசாஸ்திரம் - அஸ்வசாஸ்திரம் ஆகியவைகளில் கூறியுள்ளபடி யானை-குதிரைகளுக்கு வைத்தியம் செய்ததுடன், அதில் கூறியபடியே உணவு முறைகளையும் கடைப்பிடித்துள்ளனர். இத்தகைய வைத்தியசாலை எப்பொழுது தொடங்கப்பெற்றது என்பது ஆய்வுக்குரியது. ஆனால் இந்த வைத்தியசாலையில் மன்னன் இரண்டாம் சகஜியின் ஆட்சிக் காலத்தில் அதிகாரிகளிடையே 'ஊழல்' நடைபெற்றுள்ளது. இந்த ஊழலைப் பற்றி அந்த வைத்தியசாலையின் மருத்துவன் ஒரு சீட்டுக்கவியைப்போல சிறு காவியத்தைப் புனைந்து மன்னனுக்கு அனுப்பியுள்ளான். இச்சுவடி இந்நூலகத்தின் வடமொழிப்பிரிவில் எண் B 5039/D 4239ல் பாதுகாக்கப்பெறுகின்றது. இச்சுவடியின் மூலமாக மன்னன் சகஜியின் ஆட்சிக்காலத்தில் அவனது 'ஆட்சி முறை' பற்றிய செய்திகளில் சிலவற்றை நாம் அறியமுடிகின்றன. கி. பி.

---

1. சரஸ்வதி மகால் நூலகத்தின் மோடி தமிழாக்கத்திலிருந்து.

1789-ஆம் ஆண்டுக்குப் பிறகே மராட்டிய மன்னர்களின் நிர்வாகமுறை பற்றியும், அலுவலர்கள் பற்றியும் சில செய்திகளை சேகரிக்கமுடிகிறது. கி. பி. 1676—1788 வரையுள்ள நிர்வாக அமைப்பைப்பற்றிய செய்திகள் அறிய முடியவில்லை. இக்காலத்தைப்பற்றிய ஒருசில செய்திகளே கிடைக்கின்றன. அதனால் இச்சுவடி இத்தகைய ஆய்வுக்குச் சிறிது பயனளிக்கும் என்று கருதுகிறேன். இக்கண்ணோட்டத்தில் இங்கு இச்சுவடி அனுபந்தமாக வெளிவருகிறது. முதலில் மராட்டியரின் ஆட்சிமுறைகள் பற்றியும், அவர்கள் காலத்தில் யானைகளைப் பயன்படுத்திய செய்திகளையும் சுருக்கமாகக் காண்போம்.

மராட்டியர் கால நிர்வாக அமைப்பு :

தஞ்சை நாயக்க மன்னர்களுக்குப்பின், மராட்டியர் ஆட்சிக்கு வந்ததால் பெரும்பாலும் நாயக்க மன்னர்களின் நிர்வாக அமைப்பையே பின்பற்றியுள்ளனர். நாயக்கமன்னர்களின் காலத்தில் பிரிக்கப்பட்ட நிலப்பகுதிகளே இவர்களுடைய காலத்திலும் இருந்திருக்கக்கூடும்.[1] இவர்கள் காலத்தில் இத் தஞ்சை மாவட்டம் 5 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவ்வைந்தும் பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயூரம் (மயிலாடுதுறை) திருவாதி (திருவையாறு) என்பன. இப்பிரிவுகள் 'சுபா' என்ற பெயரில் அழைக்கப் பெற்றன. இந்தச் சுபாக்கள் சீமைகளாகவும், சீமைகள் மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுபாக்களுக்கும் ஒவ்வொரு அதிகாரி. அவரை 'சுபேதார்' என்ற பெயரில் அழைத்தனர். இவருக்குச் 'சுபாவின்' ஆட்சித் தலைமை மட்டுமின்றி இராணுவத் துறையும் இவரது அதிகார வரம்பில் இருந்துள்ளது.[2] இவர்கள் மன்னனுக்கு உதவி செய்ய, இவருக்கு உதவ பல அலுவலர்களும் பணி புரிந்துள்ளனர். மராட்டியர் காலத்து அலுவலர்களின் பதவிகளின் பெயர்கள், சர்கேல், பதக்தார், அமல்தார், சிரஸ்தேதார், தாசில்தார், ஹவில்தார், மகல்தார், கில்லேதார், போன்றவர்கள் பணியாற்றியுள்ளனர். இவர்களில் சர்கேல், கில்லேதார், சுபேதார் போன்ற உயர்பதவிகளுக்கு அரசருடைய மிக நெருங்கிய உறவினரே பணியாற்றியுள்ளனர்.[3]

யானைகளும்-அவற்றின் ஆய்வுப் பணிகளும் :

தஞ்சை மராட்டியர் காலத்தில் போர் யானைகளும், பெரிய-பெரிய பாரவண்டிகளை இழுத்துக்கொண்டு செல்லும் யானைகளும்; ஆலய விழாக்கள்

---

1. 'தஞ்சை மராட்டியர்கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும்'
— K. M வேங்கடராமையா. பக். 13.

2. The Subhedar was a most powerful man for, he was not only the Controller of the administration machinery of the subha, but was also in charge of the military dept. — Maratha Rule in the Carnatic - C. K. Srinivasan. P. 353

3. தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50. செ. இராசு, முகவுரை பக். xxii.

மற்றும் இதர பல்வகைப்பணிகளுக்கும் யானைகளைப் பயன்படுத்திவந்துள்ளனர். இம் மன்னர்களின் யானைப்படை வலுவான படையாகவும், அது வீரம் மிக்க படையாகவும் விளங்கி வந்துள்ளது. இந்தியாவிலேயே யானைப்படைகளையும்-குதிரைப்படைகளையும் வைத்துப் பேணக்கூடிய செதி தஞ்சையில்தான் இருந்துள்ளது.[1] மன்னன் இரண்டாம் சகஜியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற போர்களில், செஞ்சி மன்னனுக்கும், சேதுமன்னன் கிழவன் சேதுபதிக்கு உதவியபோதும், கி. பி. 1709-ஆம் ஆண்டில் தஞ்சைமீது மதுரைப் படை, தளவாய் நரசப்பையன் தலைமையில் போர்தொடுத்தபோதும், சேதுமன்னன் தண்டத்தேவனுக்கு (முதலாம் சரபோஜியின் ஆட்சியில்) எதிராக நடைபெற்ற போரின்போதும், மராட்டிய மன்னர்கள் யானைப்படைகளையும். குதிரைப் படைகளையுமீடுபடுத்தியுள்ளனர். இப்போரில் அறந்தாங்கிக் கோட்டையை சரபோஜியின் யானைப்படைகள் தகர்த்த செய்திகளை 'சரபோஜி சரித்திரம்' கூறுகிறது,[2]

பொதுவாக யானைகளின் பராமரிப்பில் மராட்டிய மன்னர்கள் சிறப்பாகவே தனிக்கவனம் செலுத்தியுள்ளனர். இதற்காக யானைகளைப் பிடித்துப் பழக்குவது, அதன் சாமுத்ரிகா லக்ஷணம், உணவு முறை, போர்செய்யத் தேவையான பயிற்சி ஆகியவைகளைப் பற்றிய நூற் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்தனர். இதற்குரிய 29 சுவடிகள் இந்நூலகத்தில் பாதுகாக்கப் பெற்றுள்ளன. சகஜி மன்னன் காலத்தில் இந்த முறையை வண்ண வண்ண ஓவியமாக முதன் முதலில் வடித்துள்ளான். இச்சுவடியில் கஜ சாத்திரத்தின் மூல நூலான சம்ஸ்கிருத ஸ்லோகங்களும், அதற்குரிய வண்ணப்படங்களும் தொகுக்கப் பெற்றுள்ளன.[3] இந்நூலைக் கண்ட இரண்டாம் சரபோஜி மன்னன் (கி. பி. 1800—1832) இதே படங்களை மீண்டும் எழுதச்செய்து வடமொழியின் மூலத்தையும் அதன் மராட்டி மொழியாக்கமும் செய்யச் செய்தான்.[4] பின்னர் இதனையே தனித்தனித்தொகுதிகளாக மராட்டி மொழியில் மட்டும் 'ஆர்யா' என்னும் விருத்தப் பாக்களாலியற்றப் பெற்ற பாடல்களுடன் படங்களையும் மீண்டும் வரையச் செய்துள்ளான்.[5] இவை இந்த நூலகத்தில் 'கண்' போலப் பாதுகாக்கப்பெறுகின்றன. மேலும் சகஜி மன்னன் காலத்திலோ அல்லது முதலாம் துளஜாவின் காலத்திலோ விஜயநகர நாயக்க மன்னர் பெனுகொண்ட

---

1. No part of India or perhaps of the world is formed for producing and maintaining an effective body of cavalry than Tanjore.

— Memorial of the King of Tanjore to the Directors of the Honourable The East India Company. (Booklet found in the University Library, Bombay University) Page — 18.

2. முதலாம் சரபோஜியும் அவர்காலத்து நூல்களும், — இந்நூலகப் பருவ இதழ் - 35

3. 4, 5. கஜ சாஸ்திரம் 42/4; 41/3; 43/5, 44/6, 45/7

வெங்கடபதிராயர் அவர்களின் சொந்தச் சுவடியின் பிரதி செய்யப்பெற்ற தெலுங்கு உரையுடன் கூடிய கஜசாஸ்திரம் - பாலகாப்பியத்தை[1] வரவழைத்துள்ளார்கள். இது இந்த நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வருகிறது.[2] கஜசாஸ்திரம் பற்றிய ஆராய்ச்சியை முதலாம் துளஜா மேற்கொண்டிருந்தார். இம்மன்னருடைய சுவடிகளாக பல சுவடிகள் இந்த நூலகத்தில் காணப்படுகின்றன.[3] இந்த நூல்களிலுள்ளபடி 'யானை வளர்ப்பையும்', அதனைப் பேணும் முறைகளையும், மராட்டிய மன்னர்கள் முற்றும் கடைபிடித்துள்ளனர் என்பது இக்'கலிவிடம்பனம்' என்னும் சுவடியால் அறியமுடிகிறது. திருவாரூரில் யானைகளுக்குரிய வைத்தியசாலை மட்டுமல்லாது குதிரைகளின் வைத்தியசாலையுமிருந்திருக்கக்கூடும். இவர்களது ஐந்து சுபாக்களில் மன்னார்குடி, மாயூரம், கும்பகோணம், பட்டுக்கோட்டை ஆகிய நான்கு சுபாக்களுக்கும் மையப் பகுதியாகவும் செழிப்பான நகரமாகவும் இருப்பது ஆரூர். இதனால் நோயுற்ற யானைகளுக்கும், போரில் காயமடைந்த யானை-குதிரைகளுக்கும் இங்கேயே வைத்தியம் செய்யச் செய்துள்ளனர் என்பதும் அறியவியலுகிறது.

யானைகளுக்குரிய உணவு :

பொதுவாக யானைகளுக்கு பன்னிரண்டு மாதங்களிலும், தென்னை மட்டை, பனைமட்டை, அரசமரக்கிளைகள், ஆலமரக்கிளைகள், கரும்பு, மூங்கில் தழை, தாழம்பூ மரத்தின் கட்டை, பாந்தரி இலை, வைகோல், புல், கோரை, அரிசிச்சாதம் ஆகியவைகளை உணவாக அளிக்கின்றனர்.

குறிப்பாக பால், நெய், தயிர் ஆகியவைகளைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். பால் : மலச்சிக்கலை நீக்கி உடலுக்கு வலு கொடுக்கும். நெய் : யானைக்கு வலுவூட்டுகிறது. உடல் பருக்கச் செய்கிறது. போர் யானைகள், கால்களில் வலுவிழந்த யானைகள், இளைத்த யானைகள், புதிதாகப் பிடிக்கப்பெற்ற யானைகள், வயிற்றில் நோயுள்ள யானைகள் ஆகியவைகளுக்கு நெய் கொடுக்கப்பட வேண்டும். நெய்யை இளஞ்சூடாக்கி, அது தண்ணீரானவுடன் சுமார் 2 படி அளவுக்கு கொடுக்கப்பட வேண்டும். இதற்கு அனுபானமாக நல்லெண்ணை, கள், கல்கண்டுப்பொடி, பால், கடுகெண்ணை முதலியவற்றைக் கொடுக்கலாம். அனுபானமுறை மட்டும் காலச் சூழலுக்கேற்ப மாறும். இதனால் உடல்வலுவுடன், வயிற்றிலுள்ள மாசுநீங்கும் என்கிறது கஜசாஸ்திரம். இத்தகைய உணவு முறைகளை இந்த ஆருர் வைத்தியசாலையில் அப்படியே கடைப்பிடித்து வந்துள்ளனர்.

---

1. B. 10772(d) D. 11264.
2) இந்நூலக வெளியீடாக இந்த நூல் அச்சில் வெளிவந்துள்ளது.
3. B. 12295, 10743

ஆரூர் யானை வைத்தியனின் குற்றச்சாட்டுகள் :

சகஜிமன்னனுக்கு எழுதியுள்ள இக்காப்பியத்தில் வைத்தியன் அதிகாரிகளின் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகளின் சுருக்கம் :

1. யானைகளின் உணவுக்காகக் கொடுக்கப்படவேண்டிய உணவுப் பொருட்கள் எவையும் முழுமையாகக் கொடுக்கப்படுவதில்லை. தினந்தோறும் ஒரு யானைக்கு 70 படி பால் கொடுக்கப்படவேண்டும் என்பது வைத்தியசாலையின் விதி. ஆனால் கொடுக்கப்படுவதோ பாதி பால், பாதி தண்ணீர். இதில், அதிகாரிகள் தங்களுக்குள் முன்கூட்டியே பேசிகொண்டதுபோல் ஒரு சில நாட்களில் 'தண்ணீர்ப்பால்' கூட யானைகளுக்கு வைக்கப்படுவதில்லை. 'முறைப்படி பால் கொடுக்கப்படாவிடில் அரசனின் தண்டனை கிடைக்கும்' என்ற அச்சமும் அதிகாரிகளிடமில்லை.[1]

2. யானைகள் உடல் வலுப்பெறுதற்காகக் கொடுக்கப்படவேண்டிய 2 படி நெய் கொடுக்கப்படுவதில்லை. இதில் பாதியாகிலும் கொடுக்கலாம் அதுவும் கொடுக்கப்பெறுவதில்லை. ஆஜ்யம் (நெய்) பூஜ்யமாகவே இருக்கிறது.[2]

3. வைத்தியசாலையில் மட்டுமின்றி, அரண்மனையின் மற்றப்பிரிவுகளிலும் ஊழல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக ஏழை, எளியவர், சன்யாஸி முதலியவர்களுக்காக தினமும் வழங்கப்படவேண்டிய 'தர்மக்காசுகள்' முறைப்படி வழங்கப்படுவதில்லை. பிச்சை எடுக்கும் வறிஞர்கள் சாதுக்களாக (ஏமாளிகளாக) இருந்தால் 'காசு இல்லை போ' என்று துறத்திவிடுவர். வம்பிழுக்கும் வலுவுள்ள பிச்சைக்காரனாயின் அவனுக்குப் பயந்துகொண்டு 'பாதிப்பணம்' கொடுக்கின்றனர். பொதுவாக அரண்மனையின் பொருளை அநியாயமாக எடுத்துக்கொண்டு வாழ்தலே சிறந்த வாழ்க்கையாக அமைகிறது. இதின்றி வாழ்வது எல்லா வகையிலும் துன்பமாகவே காணப்படுகிறது.[3]

4. நாங்கள் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் என்று தெரிந்தும், ஒருகாரணமுமின்றி எங்களைப் பணிசெய்யவிடாமல் இங்குள்ள அதிகாரி ஒருவர் தடுக்கிறார். இதனால் எங்கள் பணிகள் தடைபடுகின்றன.[4]

5. அரசுப் பணிகளுக்காகப் பயன்படுத்த வேண்டிய வண்டி-மாடு, பணியாட்கள் போன்றவைகளை தங்களது சொந்தப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.[5]

---

1. அனுபந்தம் சுலோக எண்கள் : 15, 16, 17.
2. அனு. ஸ்லோ. 18.
3. அனு. ஸ்லோ. 19, 20, 21.
4. அனு. ஸ்லோ. 7.
5. அனு. ஸ்லோ. 22, 23, 24.

6. மருத்துவசாலையில் குறிப்பிட்ட பணிகளுக்காக நியமிக்கப்பட்ட பணியாட்களை அந்தந்தப் பணியிலேயே ஈடுபடுத்தாமல் பிறபணியில் ஈடுபடுத்தப்படுகிறது. குறிப்பாக துப்புரவுப் பணியாளனைக்கொண்டு யானைகளுக்காக அரிசி, நெய் அளந்து கொடுக்கும் உணவு வழங்கும் பணியாளனுகைப் பணிசெய்யச் சொல்கின்றனர். எந்த யானையாவது தீனி உண்ணுதிருக்குமாயின் அவைபற்றி நாங்கள் (வைத்தியர்கள்) முழுதும் அறியமுடியவில்லை. காரணம் அந்தஅந்த யானைப்பாகர்களிடமே அரிசி, நெய் முதலியவற்றை அளிக்கப்பெறுவதில்லை. அதிகாரிக்கு வேண்டிய ஷெ துப்புரவுப் பணியாளனே யானைகளுக்குத் தீனியும் வைத்துவிடுகிறான். இதனால் யானை தீனி எடுக்காதிருக்குமாயின் அந்த யானைக்குறிய அரிசியைத் தானே எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும், கொடுக்கப்படும் அளவில் குறையவும் அல்லது கொடுத்துவிட்டதாக கூறிக்கொள்ளும் வாய்ப்பும் இவனுக்கு ஏற்படுகிறது. ஆதலால், இந்த வைத்தியசாலையின் விதிகளின்படி அந்தந்தப் பாகர்களிடமே யானைகளின் தீனிகளைக் கொடுக்கப்படல் வேண்டும்.[1]

7. அதிகாரிகளின் அன்புக்குப் பாத்திரமான பணியாளர்களில் சிலர் எதைச் செய்தாலும் அது தண்டிக்கத்தக்கதல்ல. வைத்தியசாலையின் விதிமுறைகளுக்குப் புறம்பான செயல்கள் நடைபெற்றபோதிலும், அதிகாரிகள் அதைக் கண்டுகொள்வதேயில்லை. உதாரணமாக அதிகாரியின் அன்புக்குப் பாத்திரமான பாகன் ஒருவன் மருத்துவமனையின் அனுமதியின்றி மருத்துவமனையிலுள்ள யானைமேலேறி ஆரூரில் நடைபெற்ற 'ரேணுகாதேவி'யின் திருவிழா காணச் சென்றுவிட்டான். இதனை அதிகாரிகள் அறிந்தபின்னரும் அவனை தண்டிக்கவேயில்லை.[2]

8. 'திலீலுஹி' என்னும் யானைக்குக் கழுத்தில் தோன்றும் நோயின் (கண்டமாலைபோன்றது) அறிகுறி தென்பட்டது. அதனைப் போக்குதற்குரிய மருந்து என்னால் கொடுக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகளின் அன்புக்குப் பாத்திரமான பாகனும், அவனுடைய உதவியாளனும் அந்த மருந்தை யானைக்குப் பயன்படுத்தவேயில்லை. அதுமட்டுமின்றி தாங்கள் மன்னனுடைய பணியாளர்கள், யானைகளின் பாதுகாப்புக்காகவே நியமனம் செய்யப்பட்டவர்கள்' என்பதைச் சிறிதும் எண்ணுமலிருந்தனர். இதனால் இந்த 'திலீலுஹி' என்னும் மலையைப்போன்ற யானை தஞ்சையில் இறந்துவிட்டது.[3]

9. சங்கரநாராயணன் என்ற பெயருடைய யானை தற்போது நோயுற்று இங்கு வந்திருக்கிறது. கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளாக இந்த யானைக்கு நோய் வந்த காலங்களில் அதனைக் கவனித்து வந்திருக்கிறேன். இதனால் அந்த யானையின் உடல் நலம்பற்றிய அனுபவம் எனக்கு உண்டு. இதனைப் பரிசோதித்து இதற்குரிய மருந்தை நான் கொடுத்தும் அதனை அந்த யானையின்

---

1. அனு. ஸ்லோ. 26, 27. 2. அனு. ஸ்லோ. 39. 3. அனு. ஸ்லோ. 42—45.

பாகன் கொடுக்கவேயில்லை. அவன் அதிகாரியின் 'அபிமானி'. வைத்திய ஞகிய என்னைக் கலந்துகொள்ளாமல் அவர்களது மனம்போனபடி மருந்து கொடுத்து வருகின்றனர். இது கண்டிக்கத்தக்கது. உரியமுறையில் யானை களைப் பரிசோதித்து உரிய அளவில் மருந்து கொடுக்கப்பெறல்வேண்டும்.[1] அங்ஙனம் கொடுக்கப்பெருவிடில் யானைகளுக்கு மரணம் ஏற்படலாம்.[2]

10. மழைக்காலம் வருவதற்கு முன்பே வைத்தியசாலையின் பணி யாட்களிடம் யானையின் படுக்கைபற்றி எச்சரித்தேன். காய்ந்த லத்திகளைக் கொண்டும், இலைச்சருகுகளைக்கொண்டும் படுக்கைவசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யுமாறு அவர்களிடம் கூறினேன். ஆனல் நான் கூறியதைக் கேட்காமல் அலக்ஷியம்செய்து காலத்தைக் கடத்தினர். இதனல் சென்ற விய வருடம் (கி. பி. 1706) கடுமையாக மழைபொழிந்து எங்குமே தண்ணீர். மழைச்சாரலால் காய்ந்த இடம் சிறிதுமின்றியிருந்தது. வைத்தியசாலையின் யானைகளை திருவாரூர் திருக்கோவிலிலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் கட்ட நேரிட்டது. அங்கு லத்தியாலும், சிறுநீர்கழிப்பதாலும் காய்ந்த இடமும் ஈரமாயிற்று. இதனல் இரவு-பகலாக யானைகள் படுக்க வசதியின்றி குளிரால் உடல் நடுங்கி, ஜலதோஷம் பிடித்துவிட்டது. காரணம் நான் முன் னெச்சரிக்கை செய்தும், உரிய பணிகளைப் பணியாளர்கள் செய்யாமையால் யானைகள் துன்பமடைந்தன.[3]

11. யானைகளின் தீனிக்காக அரிசி கொடுக்கப்படும் சமயத்தில் அதிகாரிகள் உடனிருப்பதில்லை. அவர்களில்லாவிட்டாலும், அந்தந்த யானைப் பாகனவது இருக்கவேண்டும். அவனும் யானையின் அருகே இருப்பதில்லை.[4]

12. ஒருசமயம் யானைக்குத் தேவையான மருந்தை ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்தனுப்பினேன். எடுத்துச் சென்றவன் நீண்ட நேரமாகியும் காணவில்லை. சென்று பார்த்தால் ஒரு மூலையில் தூங்கிக்கொண்டிருந்தான். இதைக் கேட்கவேண்டிய அதிகாரிகளோ 'நீ உன் வீட்டுக்குப்போ—நான் என் வீட்டிற்குப் போகிறேன்' என்று தினமும் சென்றுவிட்டால் யானைகளின் நிலையை யார் கவனிப்பார்கள் ?[5]

13. சேனதிபதியின் யானையின் கண்களில் ஒரு நோய். இதனை நீக்குதற்காக மருத்துவமனைக்கு வந்தது. இந்த யானையை மருத்துவமனையில்

---

1. அனு ஸ்லோ. 55—57.

2. மருந்து சிறிதளவு குறைந்தாலும் வியாதியைப் போக்காது. அதிகமானல் வியாதியை அதிகரிக்கச்செய்யும். ஆகையால் வைத்தியன் முதலில் யானையின் உடல்நிலை யின் தன்மை, சுபாவம், வயது, ஸத்துவம் இவைகளை நன்கு அறிந்துகொண்டபிறகே மருந்தைக் கொடுக்கவேண்டும். —கஜ சாஸ்திரம் Ed. K. S. சுப்பிரமணிய சாஸ்திரிகள், சரஸ்வதி மகால் நூலக வெளியீடு. பக். 99.

3. அனு. சுலோ. 58—65. 4. அனு. சுலோ. 70—71. 5. அனு. சுலோ. 73,74,75.

சேர்த்த 7 நாட்களாகியும் கண்களுக்கு மருந்திடமுடியவில்லை. நோயுற்ற யானை - நோய் நீக்கும் மருந்து — நோய்நீக்கும் வழிகூறும் மருத்துவன் ஆகிய மூவரும் இந்த மருத்துவ மனையிலிருந்தும் அந்த யானையின் கண்ணுக்கு உரிய நேரத்தில் மருந்திடமுடியவில்லை. காரணம் வைத்தியசாலையின் அதிகாரிகள், மற்றும் பணியாளர்களின் அலக்ஷியப்போக்குமே. சேனாதிபதியின் யானைக்கே இக்கதியெனில் மற்ற யானைகளைப்பற்றிக் கூறவேண்டுமோ ?[1]

14. வைத்தியசாலையின் அதிகாரிகள் சிப்பந்திகளை மிகக் கேவலமாக பேசுவதும், நிந்திப்பதும் செய்கின்றனர்.[2]

நூலாய்வு — இச்சுவடியால் அறியப்படும் செய்திகள் :

நிர்வாக அதிகாரிகள் உணவுப்பொருட்களை உரியபடி கொடுக்காமல் அதில் ஊழல்கள் புரிந்துள்ளனர். சிப்பந்திகளிடையே கருத்துவேற்றுமை நிறைந்து காணப்பட்டுள்ளன. சோம்பேரித்தனமாகப் பணியாளர்கள் பணி புரிந்துள்ளனர். சில பணியாளர்கள் அதிகாரிகளின் அன்பைப்பெருவதே நோக்கமாகக் கொண்டிருந்தனர், அதிகாரிகள், ஊழியர்களைத் தரக் குறைவாக நடத்தியதுடன், இழிச்சொற்களால் கடிந்துகொண்டிருக்கின்றனர். ஊழியர்களின் முறையீட்டை உயரதிகாரிகள் பரிவோடு விசாரித்து உரிய முறையில் செயல்பட்டுள்ளனர். இவர்கள், அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கு மிடையே நிலவிய கருத்து வேற்றுமைகளைக் களைய விசாரணையும் செய்துள்ளனர். முதலில் எழுத்துமூலமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிக கனமுடைய பொருட்களை சக்கரம் பூட்டப்பட்ட வண்டியிலேற்றி அதனை இழுக்க யானைகளைப் பயன்படுத்தியுள்ளனர். வைத்தியர்களுக்கு வைத்தியம் செய்வதுடன் மருந்து தயாரிக்கும் பணியும், அதற்கு உதவியாளர் களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மருந்துகளைத் தயாரிப்பதற்குமுன் மூலிகைகள் தரம்பிரிக்கப்படுகின்றன. அதன்பின் அம்மூலிகைகளைக் காயவைத்து சூர்ண மாக்ச் செய்து புது மண்பானையிலிட்டு அதிகாரிகளின் வசம் ஒப்படைக்கப் படுகிறது. இப்பணிக்குத் தனிப்பட்ட ஒருவரைமட்டும் நியமிக்காமல் இப் பிரிவின் உயரதிகாரியான மஹல்தார், (தலைமை) யானைப்பாகன், யந்தா என்று அழைக்கப்பெறும் (பளுவான வண்டிகளை யானைகளைக்கொண்டு இழுக்கச் செய்பவனை) பாகன்; (தலைமை) வைத்தியன், மற்றும் உதவியாளர்களின் முன்னிலையில் மருந்துகள் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. தயாரிக்கப் பெற்ற மருந்துகள் Stock Room எனப்படும் மருந்து சேமிப்புக்கிடங்கில் பாதுகாப்பாக வைக்கப்பெற்று தேவையானபோது வைத்தியர் குறித்துக் கொடுக்கும் அளவின்படி மருந்துகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

---

1. அனு. சுலோ. 75—92. 2. அனு. சுலோ. 103, 112, 113, 114.

ஆரூரில் ஆவின் பொருட்கள் :

யானைகளுக்குரிய தீனிகளில் பால் முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஒரு நாளைக்கு ஒரு யானைக்கு 70 படி பால் வீதம் கொடுக்கப்பட்டுள்ளது. வைத்திய சாலையில் நோயுற்று வைத்தியத்திற்காக வந்த யானைகள் 40. இதனால் ஒரு நாளைக்கு 2800 படி பால் தேவைப்படுகிறது. இதைத்தவிர போர் பயிற்சியிலீடுபடுத்துதற்குரிய யானைகளும், போர் யானைகளும், இருந்துள்ளன. இதற்கு உடல் வலு உண்டாக்குதற்குரிய யானைகளும், யானைக் கன்றுகளும் (குட்டி) அச்சாலையில் இருந்திருக்கின்றன. இவைகளுக்குத் தேவைப்படும் பால் உற்பத்திக்காக சுமார் 1000 பசுக்களும்; நெய், தயிர் போன்றவற்றுக்காகச் சுமார் 1000 பசுக்களும் ஆக 2000 பசுக்களுக்கு மேல் ஆரூர் வைத்திய சாலையில் வளர்க்கப்பெற்றிருக்க வேண்டும். இதனால் கோசாலையும், அவற்றுக்கான சிப்பந்திகளும், அதிகாரிகளும் அங்கு நியமிக்கப் பெற்றுள்ளனர் என்பதையும், அறியமுடிகிறது. இதனால் ஆரூரின் பொருளாதார வளர்ச்சியும், மக்களின் வளமான வாழ்வையும் அறியமுடிகிறது.

கி. பி. 1706-ஆம் ஆண்டு மிகப்பெரிய மழை பொழிந்திருப்பதாயும், அதனால் பொதுமக்களும், வைத்தியசாலையின் யானைகளும் ஆரூர் திருக்கோவிலில் அடைக்கலம் புகுந்திருக்கின்றனர் என்ற செய்தியையும் அறியமுடிகிறது.

முடிவுரை :

இதனைப்போன்ற பல செய்திகளை இச்சுவடியின் மூலமாக அறிவதுடன், அதிகாரிகளின் பெயர்கள், அவர்கள் வகித்தபதவிகள், போன்ற பலசெய்திகளையும் இச்சுவடியின் வாயிலாக அறியமுடிகிறது. ஒரு வைத்தியனின் குற்றச்சாட்டு என்ற கண்ணோட்டத்தில் மட்டும் கொள்ளாமல், இச்சுவடியை ஆய்வு செய்தால் இன்னும் பல செய்திகள் புலனாகும். இத்தகைய சுவடி இந்த நூலகத்தின் வடமொழிப் பிரிவில் பாதுகாக்கப்பெற்று வருகிறது. இதில் பலபிழைகள் காணப்படுகின்றன. உயரிய வடமொழிநடையில் எழுதப்படாமையாலும், இது ஒரே சுவடியாக இருப்பதாலும் இச்சுவடியே வைத்தியனால் கொடுக்கப்பெற்ற சுவடியாகவும் இருக்கலாம் என்றும் கருதமுடிகிறது. 'கமலாலய மாகாத்மியம்' என்ற பெயர் ஆரூரின் சிறப்பைக்கூறும் தலபுராணம். ஆனால் ஆரூரில் சிறப்பாகக் கூறத்தக்க அளவில் இந்த ஊழல்களுள்ளன என்பதைக் குறிக்கவே கமலாலய மாகாத்மியம் என்று வைத்தியன் குறித்துள்ளானோ ?

॥ श्रीकमलालयमाहात्म्यं नाम "कलिविडम्बनम्"* ॥

****
*

॥ श्रीः ॥

॥ श्रीमहागणपतये नमः ॥

शश्वद्वीथीविटंकाधिपचरणसरोजातभृङ्गायमानः
स्वान्तस्वैरप्रमोदामृतरसजलधौ गाहमानो महात्मा ।
धन्यश्रीशाहराजो जगति विजयते भद्रपीठाधिरूढः
प्रौढो निश्शेषविद्यागुरुरिव विदुषां पोषकस्सार्वभौमः ॥ -१

शृङ्गारोज्वलकाव्यनाटकमहागीतप्रबन्धादिकं
यो निर्मात्यनिशं स्वभावमधुरं नानार्थरत्नाकरम् ।
सर्वेषां हृदयङ्गमं सुविदुषां वाणीविलासास्पदं
तं प्रस्तौम्यवनीश ! शाहजिविभुं नान्यं महीनायकम् ॥ -२

श्रीमन् शाहजिभूपते ! तव कृपालेशादुपात्तोद्यम-
स्संप्राप्यांबुधिकन्यकालयमहं संसेव्य तं नायकम् ।
त्यागेशं कमलाम्बिकां प्रतिदिनं तत्सन्निधौ चिन्तयन्
कल्याणं तव दन्तिनां तु नित्यसाम्यत्र प्रकुर्वन्हितम् ॥ -३

* Descriptive catalogue No. 4239. Burnell's Catalogue No. 5039.

आधोरणानामति कुत्सितानां

आज्ञावहः कश्चन दुर्विनीतः ।

आसन्नमासाद्य ममाद्य वाचं

उवाच राजन् ! श्रुति भागबोध्याम् ॥ -४

प्रामाणिकत्वेन कलौ युगेऽनिशं

संसेव्यमानस्य न जीवनं परम् ।

नाम्ना गजानां बहुवस्तु संचयं

संपाद्य भुक्तं यदि सांप्रतं भवेत् ॥ -५

इत्थं निस्पृहया धिया निवसतः ते भाग्यमायाति किं ?

ब्रूहि त्वं किमु वेतनं समधिकं प्राज्ञेन राज्ञा कृतम् ।

किं सम्मानितमत्र नास्ति किमपि त्वद्भिन्न वैद्यस्य चेत्

अस्मद्यन्तृकुलानुकूलचरितस्यास्ते समस्तं हि तत् ॥ -६

अथ रुद्रदेकोदर उवाच –

राजद्वारं गभीरं बहुतरमिहकः किं किमुद्दिश्य कुर्यात्

तत्तन्नज्ञायते तस्समधिकमधुना धोरणोक्तप्रकारम् ।

आनीयादभ्रमूल्यान्यपिवयमसकृद्भेषजान्येव यूयं

'स्थास्यामस्त्वे' ति नित्यं प्रकथितमिनभो तद्रुदत्सोदरेण ॥ -७

अस्माभिर्नमिलिन्यदीह निवसेद्वैद्यस्स एकः पृथक्

का वा हानिः ? अनेन संभवति नस्तस्यैव किं तु प्रभो ।

'सङ्घेशक्ति' रिति ब्रुवन्ति हि कलौ सत्यं त्वसत्यं भवेत्

सत्यं स्यादपसत्यमित्यकथयद्वृद्धस्सदष्टाङ्कः ॥ -८

तदुक्ते: भिषज: अस्य प्रत्युत्तरदानाभिप्रायमाह :-

यत्पाञ्चभौतिकमिदं सकलं जगच्च
यद्येकमप्यहह सत्यमित: प्रभिन्नम् ।
किं त्वद्वितीयममलं परमप्रमेयं
जानासि शाहनृपते तदिदं त्वमेव ॥ -९

रुददेक पिचण्डेन एवमुक्तं नराधिप ।
ततो विज्ञापनं कर्तुं ग्रन्थरूपेण तेऽनघ ॥ १०

मम बुद्धिस्समजनि यतस्सुश्रूयतां प्रभो ।
सर्वज्ञोऽसि तथाऽपि त्वमेतद्ग्रन्थं समग्रता ॥ -११

नित्यं मत्तेभशालाचरितमभिमतं वाजिशाला चरित्रं
सत्यं श्रुत्वा समग्रं निरवधिकधिया साधुचित्ते विधत्ते ।
राजा सर्वज्ञमूर्ति: स हि भुविचतुरो दण्डयंस्तत्र दण्ड्यान्
कुर्वन् तेषां हितं यत्फलमपि च लभेदश्वमेधोक्तमेतत् ॥ -१२

तस्मादनन्य मनसा श्रोतव्यं दयया मयि ।
श्रुणु राजन्! प्रवक्ष्यामि शाहभूपालचन्द्रमा: ॥ -१३

विद्वन्मन: कैरवाणामुन्मीलनकराद्भुतम् ।
वृत्तान्तमत्र करिणां शालायां कमलालये ॥ -१४

नित्यं हि सप्ततिप्रस्थ क्षीराणि धरणीपते ।
दीयन्ते करिणे तेभ्यो तवैवाज्ञात्र कारणम् ॥ -१५

क्षीरमर्धं नीरमर्धं क्षीराद्विगुणितं पय: ।
सन्ततं दीयते चैवमुत्कोचग्रहणेन हिं ॥ -१६

चित्रमेकं दिनं क्षीरमेकसंकेतमास्थितैः ।
सर्वं निपीतमत्यैः निर्भीत्या पृथिवीपते ॥ -१७

किं च येभ्यो गजेन्द्रभ्यो दाप्यते प्रतिवासरम् ।
घृतं यावत्तदर्धं वा तेषां प्राप्तिर्नविद्यते ॥ -१८

उपहारप्रदानाच्च विविक्तै मत्तचूर्णतः ।
महामते ! फ़कीरिभ्यो नीचेभ्यश्च निरन्तरम् ॥ -१९

गालीप्रदानदुर्मन्त्रं पठद्भ्योद्भ्याढकाधिकम् ।
प्रत्यहं दाप्यते तेन दुष्टेनात्राधिकारिणा ॥ -२०

स्वामिवित्तस्वीकरणं विनायज्जीवनं कलौ ।
न सुखं विद्यते तत्र न लाभस्त्विति केवलम् ॥ -२१

रुद्देक पिचण्डेन देव विप्रापकारिणा ।
एकस्मिन्दिवसे राजन् ! सुतांश्श्वश्रूगृहं प्रति ॥ -२२

प्रेषयन्नेव संवोढुं बलीवर्दं महाबलम् ।
गजग्रासतृणादानतत्परं च धुरन्तरम् ॥ -२३

समानीयाथ तत्पृष्ठे समारोप्याधमाधमः ।
तञ्जापुरं प्रापयितुं गन्तुं सार्धं तथा नवम् ॥ -२४

गजशालां समाश्रित्य संस्थितं बहुकुत्सितम् ।
पुरीषमूत्र संसिक्त तृणोत्क्षेपणकारकम् ॥ -२५

मतंगजव्रजग्रासतण्डुलांशभुजंदढं ।
भृतकं तं समाहूय तस्मै चादापयत्पृथक् ॥ -२६

चत्वारिंशत्कुञ्जराणां अञ्जलीः पुरतस्तथा ।
तण्डुलानामपिपुरो निषिन्दस्य च गोदुहाम् ॥ -२७

किं च राजन्महाभाग ! करुणारस सागर ! ।
यस्य कस्यापि नागस्य लङ्घनानि भवन्ति चेत् ॥ -२८

निषिन्द निकटं प्राप्य समालोक्य करेण वै ।
तयौषधानि भूपाल ! दाप्यन्ते भिषजा मया ॥ -२९

तत्पत्रं गुप्तिगोपास्तु तवाज्ञावहमन्दिरम् ।
संगृह्यगत्वा झडिति श्रावयित्वा प्रदर्श्य च ॥ -३०

वृत्तान्तं इह राजेन्द्र तदुत्पन्नां च पत्रिकाम् ।
गृहीत्वागत्यवेगेन वर्त्तकस्य करेभृशम् ॥ -३१

दत्वौषधानि संगृह्य गजशालां विशन्ति ते ।
ततस्त्वहं गुप्तिगोपाः निषिन्दा च महामते ॥ -३२

महल्दारी च यन्ता च पञ्चैने वयमादरात् ।
संयक् परीक्ष्य औषधानि क्षीदयित्वा त्युलूखले ॥ -३३

सूक्ष्मचूर्णं कारयित्वा तच्चूर्णं नव भाण्डके ।
निक्षिप्य मुद्रितं भाण्डं सर्वेषां पुरतो दृढम् ॥ -३४

गुप्तिगोपवशे दत्वा संस्थाप्यौषध सद्मनि ।
प्रातः प्रातः प्रमाणेन तत्तन्नागाय दाप्यते ॥ -३५

अस्माकं निस्स्पृहानां च रीतिरेषा चिरन्तना ।
वैद्येनोक्तप्रकारेण सर्वेश्शृण्वन्ति सर्वदा ॥ -३६

सर्वेऽपि सस्पृहा यत्र शालायां निष्पृहोभिषक् ।
तत्र सञ्जायते द्वेषः तस्मिन्वैद्ये दयानिधे ॥ -३७

नैसर्गिको महाप्राज्ञ ! तेजस्तिमिरयोरिव ।
रुदेक पिचण्डस्तु चण्डोप्यत्यन्तसाहसः ॥ -३८

गजसङ्घान् गजस्कन्धं सोपानच्चरणे न हि ।
समारुह्य गतो राजन् ! रेणुकास्यन्दनोत्सवम् ॥ -३९

दर्शितुं यत्र कुत्रापि, स्वसमानाधिकोभुवि ।
नास्तीति मन्यमानश्च विमुढो गतसाध्वसः ॥ -४०

अस्यदुष्टस्य माहात्म्यं किञ्चिदत्र प्रकाशितम् ।
इतोधिकं नृपश्रेष्ठ ! शृण्वेकाग्रेण चेतसा ॥ -४१

दिलीलुहिमदाख्यस्य गजस्य मनुजाधिप ।
गलग्रहाख्य रोगस्य पूर्वरूपमुपागतम् ॥ -४२

तत्तन्निरीक्ष्यौषधानि दापितानि मयाऽधिप ।
दूरीकृतानि सर्वाणि तेनैव च दुरात्मना ॥ -४३

"चोळमंडळपालक सद्गुणालंकृत शरभेंद्राच्या आज्ञेकरून भक्तविलास ग्रंथ महाराष्ट्रभाषेनें विरूपाक्षकवीनें आरंभिला । सर्वभूतीं मुनीश्वर जो दयाळ । महाराष्ट्र हरदास नामा । त्याने व्यासाच्या प्रसादानें केलें भक्तमहात्म्य पुराण. हे पुराण रचिलें भाषेनें ।

२. रंगनाथकवि :

हे रंगनाथकवि पुराणाचे आधाराने कार्तिकमहात्म्य व तुलामहात्म्य हे दोन ग्रंथेही भाषांतरकेले. त्याविना हे रंगनाथकवि नाटकग्रंथें रचण्यांत बहुत परिश्रम घेतले.

रंगनाथकवि त्यथा गणेशविजय व गणेशलीलार्णव हे दोन नाटके लिहिले. आणि ह्यांचे आश्रित शरभोजीराजेयास काही नाटकग्रंथें लिहूनदिले. ते शिवरात्री उपाख्यान [43]गंगाविश्वेश्वरपरिणय, [44]मोहिनीमहेशपरिणय, [45]राधाकृस्णविलासनाटक इत्यादी. हे नाटकें सर्वांतही शरभोजीचे नावानेचरचिले आहेत रंगनाथकविचे रचनाशैलीवरून हे समझण्यांत येते. वर जाणविल्या काहीं नाटकें, तंजावर राजवाड्यांत नवरात्री, विनायकचतुर्थी ह्या व्रतकाळांतहीं तंजावर सुप्रसिद्ध शिवालय बृहदीश्वर देऊळांत विशेष चैत्रोत्सवांत रंगभूमींत प्रदर्शन केल्यासारखें त्या नाटकांत जाणविला आहे ते पहावे.

सूत्रदारवचन — येथें श्रीमद्भोंसलकुलतिलक राजाधिराज श्रीशरभेंद्रमहाराजें प्रतिवर्षी क्रियमाण गणेशमहोत्सव विलोकन संतोष भरित चतुरवर मिळाले आहेत.

राधाकृष्णविलास नाटक –

सू. – येथें श्रीबृहदीश्वराचा वसन्तोत्सव पहावया कारणें चतुःषष्टिकलाप्रवीण साहिती धुरीण तौर्यत्रिकप्रवर्तन चणविचक्षण मिळाले आहेत.

मोहिनी-महेशपरिणय नाटक —

रंगनाथकवि त्यांचे रचना शिवरात्री उपाख्यान, गंगाविश्वेस्वर परिणय, मोहिनी महेश परिणय इत्यादिकांत तुळजाराजे शरभोजीला दत्त घेतलेले परंपराविधान माहिती जाणविले आहेत. आणी शरभोजीचे आश्रित ह्मणून आपण आहेने माहितीहीं सांगतात. मोहिनी महेशपरिणय नाटक :- श्रीभोसलकुल भूप छायावासिना लिखिलें.

रंगनाथकवि आणि काहीं ग्रंथ रचिले. ते तमिळनाडूंतील शैवभक्त [46]नीलकंठाचे चरित्र व [47]नीलभिल्ल चरित्र हे दोने. हे कीर्तनरूपाने श्लोक, आर्या साखी, दिंडी, पद, लावणी सारखें मराठीवृत्ताने जोडून रचिलें. आणि स्कांदपुराणाचे आधाराने [48]किरातार्जुनीय, [49]उमामहेश्वरव्रत, [50]पंचाक्षरि विभूती [51]शिवरात्री महिमा व [52]शनिप्रदोष, [53]पंचप्रदोषा सारखें व्रत ग्रंथेंही रचिले. ते सर्व रचनातहीं त्यांचे आश्रित शरभोजीचे नावानेच लिहिले.

३. गोविंदकवि —

गोविंदकवि पुराणगंथें रचिलें ते आग्नेयपुराणाचे आधाराने 'दनुर्मासमहात्म्य', स्कांदपुराणाचे आधाराने 'वैशकमहात्म्य', ब्रह्मकैवर्तपुराणाचे आधाराने 'पंचनदमहात्म्य' इत्यादि गंथें टीका लिहिले.

४. उटके गोविंदकवि —

उटके गोविंदकवि शरभोजी राजाजळव अतिप्रेमाने असून त्यांकरिता अनेक गंथें रचिले. ते [54]पार्वतीपरिणय, [55]हरिलीला, [56]उमारमासंवाद हे लहान गंथें निरूपण पद्धतींत रचिले. 'द्वादशभाव' ह्मणवयाचे ज्योतिष ग्रंथांत बाराराशीचे गुण वर्णनकरून ते मंगळाष्टक रूपाने लिहिले. शरभोजीराजाचेगुण वर्णनकरून पद व मंगळाष्टक रचनाहीं केले आहेत. [57]'तीर्थ यात्रा लावणी' ह्मणून शरभोजी केलेते तीर्थयात्रा बाबत्ती लिहिले आहेत.

५, धुंडिसुत शिवा —

हे धुंडिसुत शिवा ह्मणणार कवि शरभोजीराजा तमिळनाडूंतील शिवक्षेत्र व काशी-क्षेत्रास केलेते यात्रासर्वहीं अतिविस्ताराने वर्णनकरून लिहिले आहेत. शिवधर्मग्रंथांत शरभोजीचे भक्ति व उधार वृत्तीहीं आणी त्याने केलेले दानधर्महीं वर्णनकरूत लिहिले आहेत. शिवा आणीक एक मुख्य ग्रंथ नृत्याविषई होय. ते नाट्यअभिनय प्रदर्शन करावयास पदसाहित्य संस्कृत अभिनयदर्पण, नृत्ताध्याय सारखे गंथें पाहून मराठींत अति बिस्ताराने लिहिले आहेत. हे पदसाहित्य कर्णाटक संगीतसाहित्याला अनुसरून आहेत्यामुळे, महाराष्ट्र बायानी नृत्यकला सिकायाला अति उपयोग पडेल.

६, रामसखा —

कवि रामसखा मंगळाष्टक गीत रचण्यांत निपुणवणी होते. शरभोजीराजेंचे पांच मुलींचे व मुलगा शिवाजीराजेंचे लग्नसमारंभ मंगळाष्टक गीतांत अति छानवणी रचिले आहेत. त्यांत नवराचे व नवरीचे कुलगोत्र, महाराष्ट्रराजेंचे लग्नसमारभाचे पद्धती, नवरा

नवरीची वस्त्र व अलंकार भूषण, लग्नमंटपाचे अलंकार वर्णन, लग्नसमारंभास आलेले राजघराणाचे प्रमुख व कुटुंभाचे वर्णन, लग्नाचेवेळी वाजविलेले मंगळवाद्याचे व सुस्वराचे वर्णन इत्यादि अति चमत्कारवणी संगूह करून ते गूंथ रचिले आहेत. ह्यावर्णनामुळे त्याकाळांतील राजेलोकांचे लग्नसमारंभाचे माहिती व पद्धती आम्हास समजण्यांत येते.

७. श्रीमुकुंधस्वामी --

हे मुकुंधस्वामी रामदास संप्रदाय कवी. तंजावरांत श्रीसमर्थांनी स्थापिलेले संप्रदायाचे मूलमठाचे मठाधिपती श्री भीकाजीबाबा ऊर्फ भीमराजगोस्वामी. त्यांस तिघे शिष्य तंजावरांत झाले. ते झोळीरामबावा, गोविंदबाळ, व अण्णाजीबावा. ह्यांत श्रीगोविंदबाळस्वामीचे शिष्य हे मुकुंधस्वामी.

मुकुंधस्वामी रामभक्तिपारंगत असून 'श्रीरामकृपाविलास' म्हणून एक मोठा गूंध रामायणाला व्याख्यान लिहिल. ह्यांचे काळा इ स १७८२-१८३० होय. हे मुकुंधरा तंजावर राजे तुळजा-II अमरसिंहराजा व शरभोजीराजा ह्यांकाळांत वासकरीत होते.

असे शरभोजीराजेचे काळांत कविने अनेक प्रकारचे साहित्ये रचून त्याचे सामर्थ्य दाखविले. आणि शरभोजीराजे वैद्यशास्त्रगंथेही लिहिणेस मार्गकेले. 'धन्वंतरीमहाल, म्हणून एक वैद्यशाला टेवून त्यांत आयुर्वेद, सिद्धवैद्य, युनानी, ह्या सर्वांत निपुण होतेते वैद्यलोख्यांस एकत्र मिळऊन अनेक रोगाबदल संशोधन करवून वैद्यशास्त्रगंथें लिहिणेस मार्गकेले. काळांतरांत त्या वैद्यशास्त्र गंथ [58]'शरभेंद्रवैद्यशास्त्र' म्हणून प्रसिद्धझाले. तसेच जुनी गजवैद्य व अश्ववैद्यशास्त्रगंथें संस्कृतांतील मूलगंथे पाहून मराठींत टीकाकरविले. आणि जूनी रंगित चित्रें पाहून नवीन चित्रेंही लिववून त्यास विस्तार वर्णनहीं करविलें शरभोजी राजे काशीयात्रा निमित्त घेलेतेसमई मराठींतले कृष्णदासमुद्गलांचे रामायण युद्धकांडाचे एकप्रत घेवून आणले. आणि काशीक्षेत्राचे ६४ स्नानघट्टाचे सुंदर रंगित चित्रहीं घेवून आणले. ते आताहीं सरस्वतिमहाल गंथालयांत पाहणेस मिळते.

शरभोजी एक शिलाछापी यंत्रशाला ठेवून पालनकेलेहोते. त्या यंत्रशालांत नागरी अक्षरांत अनेक हस्तलिखित गं्थें छापिण्यांत आले ते.

संस्कृतग्रंथें — अमरकोश, अन्नंभट्टि, मुक्तावळी, माघमूल, कुमारसंभवचंपू, कारिकावळी, रघुवंश, इत्यादि, आणि मराठीगं्थ श्रीएकनाथांचे भावार्थरामायण युद्धकांड मात्र होय ते छापितगं्थांत त्या छापखानाबद्दल माहिती असे आहे. भावार्थरामायण युद्धकांड पत्रें ४६९ च्या सेवटी.

श्रीमत्तंजानगर्यां विलसती नवविद्या कलानिध्यविख्याशाला तस्यां नयोद्धाव गत कलि शरत्काल सयेशकेच । शालीवानस्य शुक्ले सवितरिसतुले भावरामायणे युत्कांडैकाकारटीकामतनुत ऋषी कुप्पाख्य भट्टोणयंत्रे ॥

यावरून हे ग्रंथ गत कल्यब्द ४९१० स शालीवाहन शके १७३१ (A. D. 1809) शुक्लनाम संवत्सरी तुलामहिन्यांत कोणी एक कुप्पाभट्टानें वर्ण यंत्रशालेंत छापण्यांत आले असावे. छापी अतिसुद्ध आहे.

१० शिवाजीराजा - A. D. 1803 — 1855.

शरभोजी दुसरे ह्यांचे एकच मुलगा शिवाजी. शिवाजी वडीलांचे रक्षण्यांत असून सर्वविद्याही सिकून योग्यता पावले. शांतगुणाने असून दैवभक्तीने होते. पंडितांकडे चर्चाकरून अनेकविषय समजूनघेतले. तेलुगुभाषा त्यांस फार आवढत होते. त्यानि लिहिलेले एकच मराठी गं्थ [59]'नटेशविलास' नाटक त्यांचे काळांत मराठींत एककवि बदलचिमाहिती मिळते. ते रखमाजीपंडित होय. त्यांचे नटेशविलास नाटकांत असे माहिती आहे ते.

"श्रीभोंसलकुलकलशोदधी कलानिधी श्रीचंद्रमौळी प्रसादलब्द चोळसिंव्हासन संतसंतती सुविराजमान सार्वभौम महाराज छत्रपती भूमण्डलाखण्डल श्रीशिवाजीनृपवर विरचित श्रीनटेशविलासाभिधाननाटके प्रथमोंकः । असे लिहिलें आहे.

रखमाजीपंडित :

हे रखामाजीपंडित सुप्रसिद्ध रुक्मांगदपंडितांचे नातू. पंडित शिवाजिराजे एक ग्रंथ 'अश्वशास्त्रसारसमुच्चय', ह्मणून लिहिले. ते ग्रंथांत सर्वमाहिती हीं सांगतात ते पहावे.

" शालिहोत्र निर्मित अश्वशास्त्र समस्त ।
नीट विलोकूनि केला हा ग्रंथ प्रशस्त ।
नाव याचें अश्वशास्त्र सारसमुच्चय निश्चित ।
ह्मणूनि जाणा श्रीमंत विद्वज्जन हो ।। -१०४

श्रीमन्महाराज तुळजनृपचा पौत्र धीर ।
राजश्री महाराज शरभेंद्र नृपाचा पुत्र शूर ।
श्रीमंत राजश्री युवराज शिवाजीभूप उदार ।
त्याचे आज्ञेन गंभीर हा ग्रंथ रचियेला ।। -१०५

शालीवाहन शकें, सत्तराशें चव्वेनाळील ।
चित्रभानु संवत्सर, कार्तिकमास ।
बहुळपक्षी नवमीचे दिनी सुरम ।
हा ग्रंथ संपूर्णतेस पावतास झाला ।। -१०६

रुक्मांगदपंडितयाचे पौत्रें । श्रीगंगाधरपंडित यांचे पुत्र ।
मेदिनीकर रखमाजी पंडितें । नृसिहें कृपा पावें ।।
हे अश्वशास्त्र विचित्र रचिजेलें ।। -१०७

तंजावर भोसलकुल राजे वेंकोजीपासून शिवाजीपर्यंत होवूनगेलेले राजे सर्व विद्यापारंगत असून मराठींत आणि संस्कृत, तेलुगु व तमिळांतहीं अनेक अमोल्य ग्रंथें लिहून त्यांचे मातृभाषा व देशभाषाची सेवा केले. तसेच राजे आश्रित पंडितेंहीं राजाकरितां अनेक शास्त्रसंमतीने अतिचमत्कारवणी अनेक ग्रंथें रचून राजेंसही प्राकृतजनासहीं अतीत भाषाचे सेवाकेले आहेत. वर जाणविल्या अमोल्य ग्रंथें सर्व सुप्रसिद्ध सरस्वतिमहालग्रंथालयांत असून राजेंचे व पंडितांचे कीर्ती गाजत आहे.

प्रसिद्ध झालेले सरस्वतिमहाल ग्रंथालयाची
मराठी हस्तलिखित ग्रंथांची यादि

क्रम संख्या	ग्रंथाची नाव	लेखक	संपादक	वर्ष
1.	नळदमयंती स्वयंवर	रघुनाथ पंडित	अ. का. प्रियोळकर	1935
2.	श्रीमद्भगवद्गीता	माधवस्वामी	गो. नागराजराव मराठी पंडित-सरस्वतीमहाल	1954
3.	योगवाशिष्ट	,,	शं. गो. तुळपुळे	1958
4.	मल्लारीमाहात्म्य	,,	टि. भी. नागराजराव	1985
5.	श्लोकबद्धरामायण	,,	पु. दि. जोशी	1951
6.	मृत्युंजय चिरंजीव विलास नाटक	शाहजीराजा	ना. विश्वनाथन् तेलुगु पंडित, सरस्वतिमहाल	in the Press
7.	त्यागराजविलास यक्षगान	,,	(Library Journal Vol. 27)	1975
8.	पंचभाषाविलास नाटक	,,	,, Vol. 18 & 19	1966-70
9.	विश्वातीत विलास	,,	सु. गणपतिराव, मराठीपंडित सरस्वतिमहाल, L.J. Vol. 15	1961
10.	राधावंशीधर विलास नाटक-हिन्दुस्थानी	,,	,,	
11.	चंद्रशेकर विलास - संस्कृत नाटक	,,	सुंदरशर्मा, तेलुगुपंडित सरस्वतिमहाल, L.J. Vol. 17	1963
12.	कावेरी कल्याणम् - नाटक (तमिळ)	,,	व. वेणुगोपालन	1980
13.	शंकरकालिनटनसंवाद नाटक	,,	ना. विश्वनाथन् (L.J. Vol. 20—24)	1965
14.	शंकर पल्लकि सेवा प्रबंध	,,	प्रो. प्र. सांबमूर्ती	1955
15.	विष्णुपल्लकि सेवा प्रबंध	,,	,,	,,

क्रम संख्या	ग्रंथाची नाव	लेखक	संपादक	वर्ष
16.	राजकन्या परिणय	त्र्यंबक जोतिर्विध	टि. आर. भीमराव, मराठीपंडित सरस्वति महाल, तंजावर	1985
17.	अभिनवबारामास वर्णन	रुक्मांगदकवि	,, L. J. Vol. 34	1984
18.	ज्ञानेश्वरीटिप्पण	जगन्नाथ बालकृष्ण	कानडे व स. ब. कुलकर्णी	19[illegible]8
19.	आत्मविद्याविलास	सदाशिवब्रह्मेंद्र	श्रीकामकोठीग्रंथावळी श्रीशंकरमठालयम्, कुंबकोणम्	
20.	षण्मुखलीला	घनश्यामपंडित	टि. आर. भीमराव L. J. Vol. 35	1985
21.	रामामृततरंग	रामपंडित	गो. नागराजराव	1952
22,	आत्मविद्याविलास टीका (कृतित्रय)	,,	टि. आर. भीमराव	1983
23.	दक्षिणामूर्तीस्तोत्र टीका (कृतित्रय)	,,	,,	,,
24.	त्यागराजमहात्म्य			
25.	त्यागराज ध्यान			
26.	त्यागराज आगमोक्त ध्यान (त्यागराज माहात्म्य)	,,	,,	1977
27.	एकशतनीतिसुधारसाचे श्लोक (कृतित्रय)	,,	,,	1983
28.	कमलांबा त्यागेशपरिणय नाटक	एकोजी-II (बाबासाहेब)	ना. विश्वनाथन्	(in the Press)
29.	शाकुंतल नाटक	,,	,,	,,
30.	राजनीती	एकोजी-II	टि. आर. भीमराव L. J. Vol. 36	1986
31.	नीतिशास्त्र	,,	,,	,,
32.	जीवशिव संवाद	,,	,,	,,
33.	कृष्णमंजरी	प्रतापसिंहनृप	गो, नागराजराव	1957
34.	रामदिनचर्या	,,	टि. आर, भीमराव	1985
35.	पारिजातहरण नाटक	,,	प्रो. सौ. मायाबाई सरदेसाई	1969
36.	आत्मविद्याविलास	रामपंडित	टि, आर. भीमराव	1983
37,	दक्षिणामूर्तीस्तोत्र	,,	,,	,,

क्रम संख्या	ग्रंथाची नाव	लेखक	संपादक	वर्ष
38.	प्रतापसिंहेंद्रविजय प्रबंध	रामकृष्णकविपंडित	अ. कृष्णसामी महाडिकराव	1950
39.	श्रीरंगनाथमहिमा	गंगाधरकवि	टि. आर. भीमराव	1986
40.	तंजपुरीमहात्म्य	शेषकवि	,,	1979
41.	सत्यसंधविजय	कोनेरात्मज	ब. श्रीनिवासाचार्य, B. A., ग्रंथ पाल सरस्यतिसहाल	1951
42.	भक्तविलास	विरूपाक्षकवि	,,	1952
43.	गंगाविश्वरपरिणय नाटक	शरभोजीराजा	सौ. मायाबईसरदेसाई	1971
44.	मोहिनी महेशपरिणय नाटक	,,	टि. आर. भीमराव	
45.	राधाकृष्णविलास नाटक	,,	,,	,,
46.	नीलकंट चरित्र	,,	,, L. J. Vol. 24—25	1971 - 1972
47.	नीलभिल्ल चरित्र	,,	,,	,,
48.	किरातार्जुनीय	,,	टि. आर. भीमराव	1972
49.	उमामहेश्वरव्रत	,,	,,	
50.	पंचाक्षरि विभूती	,,	,,	,,
51.	शिवरात्रीमहिमा	,,	,,	,,
52.	शनिप्रदोष	,,	,,	,,
53.	पंचप्रदोप	,,	,,	,,
54.	पार्वतीपरिणय	उटके गोविंदकवि	,, L. J. Vol. 27	1975
55.	हरिलीला	,,	,,	,,
56.	रमाउमासंवाद	,,	,,	,,
57.	त्रिस्थळि यात्रेच्या लावण्या	,,	ए. कृष्णसामिमहाडिकराव	1951
58.	शरभेंद्र तीर्थावळी	शिवा	,,	,,
59.	शरभेंद्रवैद्यरत्नावळी भाग - १, २	शरभोजीराजा	,,	1954 - 1981
60.	नटेशविलास	शिवाजीराजा	ना. विश्वनाथन् L. J. Vol. 37	1986

OUR

MARATHI PUBLICATIONS

* * *

Bhonsle Vamsa Charita	Rs.	12 00
Srimad Bhagavatha Skandha I	...	1 50
Baktha Vilasa	...	10 00
Dance Pieces in Marathi	...	6 00
Devendra Kuravanji	...	1 25
Gaja Sastra	...	1 50
Satyasandha Vijaya	...	1 25
Krishna Manjari	...	1 25
Krititraya	...	6 00
Loka Geet	...	1 00
Mahabharatha (Virataparva)	...	11 00
Mallari Mahatmya	...	8 00
Ramamirtha Taranga	...	3 50
Rajakanya Parinaya	...	5 00
Sri Ramadinacharya	...	6 00
Thanjapuri Mahatmya	...	8 00
Thyagaraja Mahatmya	...	4 50
Thyagesapada	...	4 00
Sri Ranganatha Mahima	...	8 50
Sri Gurudasa's Nirupana Gutcha		20 00
Sri Radhakrishna Vilasa and Mohini Mahesa Parinaya Natakam	...	2 00

*

தஞ்சை நாயக்கர் வரலாற்றில் புதிய திருப்பம்

குடவாயில் பாலசுப்ரமணியன், M. A.,
காப்பாளர் - நுண்படப்பிரிவு,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

சேர மன்னர்களில் செங்குட்டுவன் எவ்வாறோ, சோழர்களில் இராஜ ராஜப் பெருந்தகை எவ்வாறோ, பல்லவர்களில் இராஜசிம்மன் எவ்வாறோ பாண்டியர்களில் பராந்தக நெடுஞ்சடையன் எவ்வாறோ அவ்வாறு தஞ்சை நாயக்கர்களில் வானளாவும் புகழ்பெற்றவன் விஜயரகுநாத நாயக்கன். இம் மன்னவன் சோழ மண்டலத்தை கி. பி. 1600 முதல் 1630 வரை ஆட்சிசெய்து பெரும் புகழ் எய்தியவன். தஞ்சை நாயக்கர் வரிசையில் மூன்றாவதாக அரசு கட்டிலில் அமர்ந்தவன். செவ்வப்பனில் துவங்கி, இரகுநாதன் ஈறாக உள்ள வரலாற்றைத் தெளிவான கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், இலக்கியங்களும் காட்டி நிற்கின்றன. ஆனால் இரகுநாதனுக்குப் பின்பு தஞ்சையை ஆட்சிபுரிந்த இவ்வேந்தனின் புதல்வன் அச்சுத விஜயராகவ நாயக்கன் பற்றிய சரியான தகவல்கள் வரலாற்று ஆய்வாளர்களுக்குக் கிடைக்காத காரணத்தாலும் பின்னால் வந்தவர்கள் கூறிய கட்டுக் கதைகளும், தமது' சமய வளர்ச்சிக்குத் தடையாய் நின்ற இம்மன்னவனின் செய்கைகளால் துவண்ட ஏசுசபை பாதிரி யார்களால் மாறுபட்ட கோணத்தில் எழுதப்பட்ட கடிதங்களுமே தவறான வரலாற்றை எழுதத் துணை நின்றன. கட்டுக்கதைகளெல்லாம் வரலாறுகளாக இன்று விஞ்சி நிற்கின்றன.

தமிழக வரலாற்றில் அச்சுதவிஜயராகவன் போன்று துரதிர்ஷ்டம் பிடித்தவன் வேறு யாரும் இருக்கமுடியாது. காரணம் மாபெரும் வீரனுக்கு மகனாய்ப் பிறந்து, தானும் பெரு வீரனாக வாழ்ந்து, மடியும்போதும் வீர மரணம் அடைந்த விஜயராகவன், பல அற்புத நூல்களையெல்லாம் படைத்து சாரதா துவஜகத்தின் கீழ் அமர்ந்து, புலவர் குழாத்தோடு நாளும் பங்கேற்ற வரலாறு படைக்கும் பேரறிவாளனை இன்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதோ, மடையன், பயித்தியக்காரன், கோழை, அறிவிலி என்ற பட்டங்க ளாள்தான். சரியான வரலாற்றுக் குறிப்புக்களோ சமகாலத்துச் சான்றுகளோ முறையாக ஆராயப்படவில்லை, விஜயராகவ நாயக்கன் பற்றிய வரலாற்று

ஆய்வில் இதுவரை ஆய்வறிஞர்கள் கூறிய கருத்துக்களையும் அவர்கள் மேற் கோள் காட்டும் சான்றுகளையும் முதலில் ஆய்ந்தபின்பு, அண்மையில் எமக்குக் கிடைத்த வரலாற்றுத் தடயங்களையும் புதிய செய்திகளையும் நோக்குவோம்.

தஞ்சை நாயக்கர்கள் வரலாற்றையும் குறிப்பாக விஜயராகவன் வரலாற்றை சென்ற நூற்றாண்டில் வில்லியம் டெய்லர் என்பாரும், பின்னர் தஞ்சாவூர் டிஸ்டிரிக் மேன்யூவல்; திரு. குப்புசாமி சாஸ்திரிகள் எழுதிய தஞ்சா வூர் சரித்திரம்; ஸ்ரீ சரவணப்பிள்ளை எழுதிய மோகனாங்கி நாடகம்; நாகை நீலலோசனி பத்திரிக்கையில் திரு. இராஜமையங்கார் எழுதிய நாயக்கர் வம்சாவளி வாசகங்கள் மற்றும் சிலர் து கதை கட்டுரைகள் வாயிலாக அறிய முடிகிறது. இவர்கள் அனைவரும் நாட்டில் வழங்கிய கதைகள், மற்றும் சென்னை கீழ்திசை சுவடிகள் நூலகத்திலுள்ள ''தஞ்சாவூரு ஆந்திர ராஜலு சரித்திரமு'' என்ற தெலுங்குச் சுவடி நூலில் உள்ள செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எழுதினர். திரு. V. விருத்தகிரீசன் அவர்கள் 1950ல் அண்ணாமலை பல்கலைக் கழகத்துப் பருவ இதழில் கட்டுரைகளாக தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு (The Nayaks of Tanjore) என்ற தலைப்பிலும் பின்னர் அதனையே நூலாகவும் வெளியிட்டார். இந்நூல் தஞ்சாவூரில் நிலவும் கர்ணபரம்பரை கதைகள், நாயக்கர் காலத்து இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றோடு, தஞ்சாவூர் ஆந்திர ராஜலு சரித்திரமு சுவடி மற்றும் ஏசுசபைக் கடிதங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து மிக அருமையான நாயக்கர் வரலாற்று நூலாக அமைந்தது இந்நூல் மிகச்சிறப்பாக எழுதப்பட்டிருந்தபோதும் கடைசி பகுதி யான விஜயராகவன் மற்றும் செங்கமலதாசு பற்றிய செய்திகள் முழுமையான தாகவோ வரலாற்று ஆதாரபூர்வமாகவோ அமையவில்லை. இதனை திரு. விருத்தகிரீசன் அவர்கள் விஜயராகவன் பற்றிய கட்டுரையின் துவக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார். பின்னாளில் எழுதப்பட்ட மதுரை வரலாறு மற்றும் பல வரலாற்று நூல்கள் திரு. விருத்தகிரீசனின் கருத்துக்களையே மையமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

திரு. விருத்தகிரீசனின் கருத்துக்களுக்கு மாறுபட்ட புதிய கருத்துக்களை யும், புதிய வரலாற்றுத் தடயங்களையும் நாம் ஆராயும் முன்பு இதுவரை விஜயராகவன் பற்றி அனைவரும் கூறி வந்தச் செய்திகளை சுருக்கமாக காண்போம்.

உடன் பிறப்புக்கள் :

இரகுநாத நாயக்கனுக்கு மகனாய்ப் பிறந்த விஜயராகவன் முறைப்படி பட்டத்திற்கு உரியவன் அல்ல என்பதும், இவனுடன் பிறந்த சகோதரன் ஒருவனை கண்ணைப்பிடுங்கி சிறையில் அடைத்தான் என்பதும் சில கதைகள். ஹிக்கி என்பவர் விஜயராகவன் ரகுநாதனின் இளைய மகன் என்றும் தனது

மூத்தவனைச் சிறையில் அடைத்துவிட்டு பட்டத்திற்கு வந்தான் என்றும், எந்த வித ஆதாரமும் குறிப்பிடாமல் கூறுகிறார். மேலும் கி. பி. 1659ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஏசுசபைக் கடிதம் ஒன்று வல்லம் கோட்டையை கொள்ளையிட்ட கள்ளர்கள் அங்கு சிறையிருந்தவர்களை மீட்டதாகவும், அதில் விஜயராகவனின் சகோதரர் இருவர் கண்கள் இழந்த நிலையில் இருந்ததாகவும் குறிப்பிடுகிறது.

மகன்கள் :

அடுத்து விஜயராகவனின் மகன் பற்றி பலர் பலவிதச் செய்திகளைப் புனைந்தனர். அவனுடைய பெயர் மன்னாருசாமி நாயுடு என்றும் குறிப்பிட்டுள்ளார். திரு. இராஜம் அய்யங்கார் எழுதிய நாகை நீலலோசனிப் பத்திரிகையில் 'விஜயராகவலு நாயுடு விஜயராகவனின் மகள் மதிவிலாசினி எனும் மங்கம்மாளை மதுரை சொக்கநாதன் பெண் கேட்டு அனுப்பிய தூதுவனை அவமதித்ததற்காக சொக்கநாதன் போரிட்டதாகவும், இதனால் ஏற்பட்ட பெரும் போராலேயே விஜயராகவன் மகன் மன்னாருசாமி, மற்றும் குடும்பமே அழிந்ததாகவும் மூன்று விதமான கதைகள் கூறப்பெறுகின்றன. போர் பற்றிக்கூறும் கதைகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன.

மகனா! பேரனா?

விஜயராகவனின் மகன் மன்னாருதாசனுக்கு செங்கமலதாசு மகன் என்னும் இவனே நாயக்க வம்சத்தின் கடைசி அரசன் என்றும், இவன் பயந்து, விட்டுச்சென்ற தஞ்சை அரசைத்தான் மராத்தியர்கள் கைக்கொண்டனர் என்பது ஒரு கூற்று. இதேக் கதையை கூறும் பிரிதோர்சாரர் மன்னாருதாசன் விஜயராகவனின் மகனே (பேரன் அல்ல) என்றும் கூறுகின்றனர்.

மகள்......' (மதிவிலாசனி எனும் மங்கம்மாள்)

மகன் மன்னாருசாமி நாயுடு, தளபதி இரங்கப்ப நாயுடு, அவர் மகன் வீரபானு, விப்ரன் வெங்கண்ணா, திருச்சி அளகிரி போன்றவர்களின் கதைகளைகூறி கோவிந்த தீட்சிதரின் மகள் சுலக்ஷிணியை ஏமாற்றியதால் தீட்சிதர் கோபம் கொண்டு விஜயராகவனிடம் சொல்ல, மகனை உடன் சிறையில் அடைத்ததாகக் கூறுகிறது. சரவணமுத்துப் பிள்ளை எழுதிய மோகனாங்கி சரித்திரமோ, தளபதி இரங்கப்ப நாயுடு தன் மகன் வீரபானுக்கு விஜயராகவனின் மகள் மங்கம்மாளை பணமுடிக்க எண்ணிச் செய்த சதியால் மன்னாரை சிறையில் அடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் நிகழ்ந்த வரலாறு.........

கி. பி. 1600ல் இளவரசுப் பட்டம் சூடிய விஜயரகுநாத நாயக்கன் கி. பி. 1614ல் மன்னனாக முடிசூடி கி. பி. 1634 வரை ஆட்சி புரிந்ததாக வரலாற்று

அறிஞர்கள் கணித்துள்ளனர். ரகுநாத நாயக்காப்யுதத்தில் குறிப்பிடப் பெறும் சோடச மகா தானங்கள் பற்றிய குறிப்பு, செங்கல்வகால கவி எழுதிய விஜயராகவ வம்சாவளியில் குறிப்பிடப்பெறும் ஸ்ரீமுக வருஷம் ஸ்ரவணமாதத்தில் செய்த சோடசமகா தானம் பற்றிய குறிப்பு, ராஜ சூடாமணி தீட்சிதரின் 'தந்திர சிகாமணியில்' விஜயராகவனை மன்னனாகக் குறிப்பிடப்பெறும் சான்று இவைகளைக்கொண்டு விஜயராகவனின் முடிசூட்டுவிழா கி. பி. 1633ல் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று திரு. K. சீதாராமய்யா அவர்களும், திரு விருத்தகிரீசன் அவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் எமக்குக் கிடைத்த திருவாரூர் கல்வெட்டின் துணையுடன் நோக்கும்போது விஜயராகவ நாயக்கர் கி.பி. 1631ல் முடி சூடியிருக்கவேண்டும் என்பதை அறியமுடிகிறது. இக்கல்வெட்டே விஜயராகவனின் முதற்கல்வெட்டு என்று கூறலாம். திருவாரூர் வன்மீகநாதர் கருவறையில் பொறிக்கப் பெற்றுள்ள இக்கல்வெட்டில் சகம் 1553 பரசோர்த்தி ஆண்டு சித்திரை மாதம் குறிப்பிடப்பெற்று விஜயராகவனின் ஆணையை குறிப்பிடுகிறது. இது கி. பி. 1631ல் வெளியிடப்பெற்ற விஜயராகவநாயக்கனின் ஆணையாகும். அடுத்து கி. பி. 1634ல் பட்டீச்சரத்தில் கோவிந்த தீட்சிதர் அளித்த தீர்ப்பு பற்றி கூறும் கல்வெட்டில் நாயக்கர் அய்யன் என்ற பெயர் குறிக்கப் பெற்றிருப்பதை இது காறும் இரகுநாத நாயக்கரைத்தான் குறிப்பிடுவதாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிட்டு, இக்கல்வெட்டுச்சான்றின் துணை கொண்டுதான் இரகுநாதனின் காலத்தை கி. பி. 1634வரை கொண்டு சென்றனர். ஆனால் திருவாரூர் கல்வெட்டை நோக்கும்போது. பட்டீச்சரத்து கல்வெட்டில் குறிக்கப்பெறும் நாயக்கர் அய்யன் ரகுநாதன் தானா? என்பது ஐயப்பாட்டிற்கு உள்ளாகிறது. நாயக்கர் ஐயன் என்பது விஜயராகவனையும் குறிப்பிட்டிருக்கலாமே!

கி. பி. 1631ல் இளவரசு பட்டமோ அல்லது இரகுநாதனின் மறைவிற்குப் பிறகு அரசுப் பட்டமோ ஏற்ற விஜயராகவநாயக்கன் சோழநாட்டில் மன்னராகத் திகழ்ந்தான். அடுத்து இவனது உடன் பிறந்தவர்கள் ஒருவரா? இருவரா அல்லது பலரா? என்று பல கோணங்களில் குழப்பியுள்ளனர். இரகுநாத நாயகப்புதயத்தில் விதிவலம் வரும் இரகுநாத நாயக்கர் மற்றும் அவனது தனயர்களான அச்சுத விஜயராகவன் மற்றும் இராமபத்திரன் ஆகிய மூவரையும் குறிப்பிட்டு இவர்கள் மூவரும் மும்மூர்த்திகள் போன்று பவனி வருவதாக மிகத் தெளிவாக குறிப்பிடப்பெற்றுள்ளது. நாயக்கர் காலத்து இலக்கியங்கள் அனைத்தையும ஆராயும்போது மன்னாருதாசு என அழைக்கப்பெறும் விஜயராகவன் பற்றியும் அவனது தம்பி இராமபத்திரன் பற்றியுமே குறிப்புக்கள் கிடைக்கின்றன. மன்னாருதாசன் என்பது விஜயராகவனின் மகன் என்று பலர் குழப்பியுள்ளனர். மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோயிலில் விஜயராகவ நாயக்கரால் செய்தளிக்கப்பெற்ற ஐந்திற்கும் மேற்பட்ட செப்புத்திருமேனிகள் உள்ளன. இதன் பீடத்தில் "அச்சுத விஜயராகவ மன்னாருதாசன்

சதாசேவை'' என்ற எழுத்துப்பொறிப்புகள் கிரந்தத்தில் உள்ளன. ''ரங்க மன்னார்'' என அழைக்கப்பெறும் ராஜகோபாலனின் தாசன் இவன் என்பதைக் குறிப்பிடும் வண்ணமே தனது பெயரை ''மன்னாருதாசன்'' எனக்கொண்டான் விஜயராகவன். மேலும் இதனை வலியுறுத்தும் இலக்கியச் சான்றாக ரங்காஜம்மா எழுதிய மன்னாருதாச விலாசம் இன்றும் சான்று பேசுகின்றது.

மன்னாருதேவன் :

மன்னாருதாசனாக வாழ்ந்த விஜயராகவனின் மைந்தனின் பெயர் மன்னாருதேவன் என்பதாகும். ''ஹேமாப்ஜ நாயகி சுயம்வரமு'' என்ற மன்னாருதேவன் எழுதிய நூலில் தான் ரகுநாதனின் பேரன் என்றும் விஜயராகவனின் பிரிய புத்திரன் என்றும், ராஜகோபாலாம்பிகா என்ற தேவிக்குப் பிறந்தவன் என்றும் குறிப்பிட்டுக் கொள்கிறான். மேலும் இதே நூலில் காணப்படும் குறிப்பினால் மன்னாருதேவன் தன் தந்தையின் வரலாறு கூறும் ''விஜயராகவாப்யுதயமு'' என்ற நூலொன்றினை எழுதியதாகவும் அறிய முடிகிறது. ஆனால் அந்நூல் நமக்கு இதுகாறும் கிடைக்கவில்லை. ''ஹேமாப்ஜ நாயகிஸ்வயம் வரமு'' என்ற மன்னாருதேவனின் நூல் சௌமிய வருஷம், சைத்ர மாதம் சுக்ல பட்ச சுத்தாஷ்டமி அன்று எழுதி முடிக்கப்பெற்ற தாகவும் குறிக்கப்பெற்றுள்ளது. இது கி. பி. 1669 மார்ச்சு மாதம் இருபத் தொன்பதாம் நாளாகும். ஒரு சிறந்த நூலை கி. பி. 1669ல் தஞ்சை அரண்மனையில் விஜயராகவனின் மைந்தன் எழுதி முடிக்கும்போது தஞ்சை அரண்மனை அமைதியான சூழலில்தான் இருந்திருக்க வேண்டும். ஆயின் கி. பி. 1669ஐ ஆதாரமில்லாமல் வரலாற்று ஆசிரியர்கள் அமைதியற்ற சூழலாகக் காட்டவேண்டும்?

செங்கமலதாஸ் :

செங்கமலதாஸ் என்பான் விஜயராகவனின் மைந்தன் என்று ஒருசாரரும் பேரன் என்று ஒரு சாரரும் எழுதியுள்ளார். இவன் இரண்டு வயதாக இருக்கும்போது அரண்மனையில் ஏற்பட்ட குழப்பத்தால் நாகப்பட்டிணம் செட்டியாரால் வளர்க்கப்பெற்று பீஜப்பூர் சுல்தான் அடில்சாவின் துணையுடன் ஏகோஜியால் தஞ்சை அரசு கட்டிலில் அமர்த்தப்பட்டதாகவும், வெங்கண்ணாவின் சூழ்ச்சியால் நாட்டை விட்டு ஓடிவிட்டதாகப் பலப்பல கதைகள் உண்டு. இதில் எந்த ஒரு கதையும் சமகாலத்துச் சான்றால் மெய்ப்பிக்கப் பெறவில்லை. மேலும் ஏசுசபைக் கடிதம் ஒன்றில்கூட செங்கமலதாஸ் பற்றிய குறிப்புக் கிடையாது. தஞ்சாவூருஆந்திரராஜுலு சரித்திரம் எனும் கற்பனைக் கதையில் தான் இவ்வாறு கூறப்பெறுகிறது.

ஆனால் உஷாபரிணயம் எனும் விஜயராகவன் காலத்து இலக்கியம் ஒன்றில் மட்டும் செங்கமலதாசு பற்றிய குறிப்பு உள்ளது. இது விஜயராகவனின்

ஆட்சித் துவக்க காலத்துப் படைப்பாகும். இதில் இந்நூலாசிரியர் இந் நூலை மன்னன் விஜயராகவன் முன்பு அர்ப்பணிக்கும்போது வேங்கடபதி, மன்னாருதேவன், செங்கமலதாஸ் போன்ற பெரியவர்கள் அமர்ந்திருக்க, அவர் களுடன் விஜயராகவனின் குடும்பத்தாரும் வீற்றிருந்ததாகக் குறிக்கப்பெற்றுள் ளது. எனவே இந்த மன்னனின் சமகாலத்துச் சான்றின் துணைகொண்டு நோக்கும்போது விஜயராகவனின் தர்பியான இராமபத்திரனின் தாஸ்ய நாமமே செங்கமலதாசன் என யூகிக்க முடிகிறது. விஜயராகவன் தன்னை மன்னாருதாசன் எனக்கொண்டதால், மன்னார்குடி இறைவனின் தேவியான செங்கமலவல்லியின் தாசனாக அவன் தம்பி திகழ்ந்திருந்ததில் வியப்பில்லை. இந்த இலக்கியக் குறிப்பு ஒன்றினைத் தவிர எந்த ஒரு கல்வெட்டோ, செப்பேடோ, இலக்கியமோ, ஏகசபை கடிதங்களோ குறிப்பிடாத ஒரு செங்கமலதாசுக்குப் பின்னாளில் அருமையான கட்டுக்கதை ஏற்பட்டுள்ளது.

கோவிந்த தீட்சிதர் :

செவ்வப்பநாயக்கன் (கி. பி. 1532-1580) காலத்திலேயே தஞ்சை அரசிய லில் பங்கேற்ற தீட்சிதர் பின்பு அச்சுதன், இரகுநாதன் ஆகிய இருவர் காலத்தி லும் முழுமையாகத் தஞ்சை அரசியலில் பங்கேற்றவர். கி.பி.1634ல் காணப்பெ றும் பட்டீச்சரத்துக் கல்வெட்டுக்குப் பிறகு இவர் பற்றிய குறிப்புகளோ மற்ற வரலாற்றுச்சான்றுகளோ கிடைத்தில. இவ்வாறு இருக்கும்போது இவரது மகள் மதிவிலாசனி என்றும், அவளை விஜயராகவனின் மைந்தன் காதல் கொண்டதாகவும், தீட்சதர் சதிசெய்ததாகவும் பல கதைகளை பின்னால் தீட்டி வரலாறு என மெய்ப்பித்துள்ளார். மிகச் சிறந்த ராஜதந்திரியாகத் திகழ்ந்த தீட்சிதர் விஜயராகவனின் துவக்க காலத்திலேயே இவ்வுலக வாழ்வை நீத்தவர்.

ஸ்ரீனிவாச தாத்தாசாரியார் :

அடுத்து விஜயராகவனின் இராஜகுருவாக சோமசுந்தரசுவாமி, மதுரை பக்த பெரியசுவாமி என்றெல்லாம் திரித்துள்ளனர். சதச்ரது ஸ்ரீனிவாச தாத்தாசாரியார் என்பவரே அவனது குரு என்பதை உஷா பரிணயம் மிகத் தெளிவாகப் பேசுகிறது. இலக்கியச் சான்றுகளில் நோக்கும்போது மிகச்சிறந்த அறிஞராகவே காணப்பெறுகிறார். விஜயராகவனை மூட நம்பிக்கைகளுக்கு ஆட்படுத்தியவராக ஒரு சான்றுகூட கிடையாது.

விஜயராகவனின் அமைச்சர் (தளவாய் வேங்கடேந்திரன்)

கற்பனைக் கதைகளெல்லாம் இரங்கப்ப நாயுடு, அவன் மகன் வீரபானு பற்றி கூறுகின்றன. இதை மெய்ப்பிக்க ஒரு வரலாற்றுச் சான்றுகூடகிடையாது. தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி என்ற ஏட்டுச் சுவடியில் விஜயராகவ

னின் தளபதி வேங்கடேந்திரன் என்பான் பற்றி குறிப்பு உள்ளது. மேலும் உஷாபரிணயம் வேங்கடபதியை மதியமைச்சனாகக் காட்டுகின்றது. இந்த வேங்கடபதியைத் தவிர இதுவரை வேறு யாரையும் எந்த ஒரு சமகாலத்துச் சான்றும் பேசவில்லை. ஆனால் செங்கமலதாசு பற்றி பேசும் கட்டுக்கதையில் வெங்கண்ணா என்ற கற்பனைப் பாத்திரம் ஒன்று இராயசமாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளது.

விஜயராகவனின் வரலாறும் முடிவும் :

கி. பி. 1631ல் தஞ்சை அரசை ஏற்ற விஜயராகவ நாயக்கர் விஜயநகரப் பேரரசுக்குட்பட்டு தன் ஆட்சியை செம்மையுறத் துவக்கினார். இவரது ஆட்சியின்போது, மதுரை திருமலை நாயக்கரால் அரசாளப் பெற்றது. திருமலை மன்னர் தன் வலிமை பெருக்கத்தால் தஞ்சை செஞ்சிநாயக்கர்களின் துணையைக்கொண்டு விஜயநகரப் பேரரசுக்கு எதிராக தனியாட்சி நிறுவ முற்பட்டார். இதற்கென தஞ்சை விஜயராகவனையும், செஞ்சிநாயக்கரையும் ஒருமுறை திருச்சிக்கண்மையில் சந்தித்து விவாதித்தனர். பேச்சுக்கள் நிகழுங்கால் தஞ்சை அரண்மனையில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக விஜயராகவ நாயக்கர் உடன் திரும்பவேண்டி இருந்ததையும், பின்னர் விஜய ராகவன் விஜநகரப பேரரசுக்குத் துரோகம் செய்ய சம்மதியாததால் திருமலை நாயக்கருக்கும், விஜயராகவ நாயக்கருக்கும் பகைமை மூண்டதாக ரோம் நகருக்கு எழுதப்பெற்ற பாதர் பால்டிசெர் டா காஸ்டா என்பவரின் குறிப்புக் களால் அறிய முடிகிறது. இந்நிகழ்ச்சிகள் கி. பி. 1644—46ல் நிகழ்ந்தவை யாகும்.

விஜயநகரப் பேரரசின் தலைமையை ஸ்ரீரங்கராயர் கி. பி. 1642ல் ஏற்றார். அப்போது பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா சுல்தான்கள் வலிமை பெற்றுத் திகழ்ந்தனர். மதுரை, செஞ்சி, நாயக்கர்களும் தஞ்சையின் உறவை முறித்துக்கொண்டனர். ஸ்ரீரங்கராயர் கி.பி. 1643ல் கோல்கொண்டா படையை வெற்றிகொண்டார். இதற்கு முன்னர் தஞ்சை மதுரை வரை ஸ்ரீரங்கராயனின் படை எடுப்பு நிகழ்ந்தபோது ரங்கராயரை எதிர்த்து திருமலைக்கு உதவ விஜயராகவநாயக்கர் முற்படவில்லை.

பின்னர் கி. பி. 1646—1653ல் கோல்கொண்டா, மற்றும் பீஜப்பூர் சுல்தான்களின் எழுச்சியின் காரணமாக ஸ்ரீரங்கராயர் தலைமறைவானார். விஜயநகரப்பேரரசும் அழிந்தது. ஸ்ரீரங்கராயர் தலைமறைவாக இருந்த போது முகமதியப் படையினரின் தாக்குதல் தஞ்சை நாட்டிற்கு ஏற்பட்டது

கி. பி. 1646ல் செஞ்சிக்கோட்டை கோல்கொண்டா சுல்தானின் பிடியில் இருந்தது. மதுரை திருமலை நாயக்கர், செஞ்சி நாயக்கருக்கு உதவுவதற்காக

பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினான். இதனால் பீஜப்பூர் படை கானிகான் என்ற முகம்மதியத் தளபதியின் தலைமையில் செஞ்சியைத் தாக்கிற்று. உடன் கோல்கொண்டா படை பீஜப்பூர் படையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு செஞ்சியை பீஜப்பூர்படையிடம் ஒப்புவித்து தாங்கள் வெளியேறினர். செஞ்சியைக் கைப்பற்றிய கானிகான் உடன் தஞ்சையைத் தாக்கினன். இப் படையெடுப்பின் தாக்குதலால் தஞ்சை பீஜப்பூர் சுல்தானின் கட்டுப்பாட்டிற் குள் கொண்டுவரப்பட்டது. கி. பி. 1653ல் கானிகான் தஞ்சைப் பகுதியை விட்டுச் சென்றபோது விஜயராகவ நாயக்கர் பீஜப்பூருக்குத் திரை செலுத்தும் நிலைக்கு ஆளானார்.

கி. பி. 1649 மே திங்களுக்கு பிறகு, ஷாஹாஜி தஞ்சாவூர் மீது படை எடுத்ததையும், பின்னர் கி. பி. 1658ல் ஷாஹாஜியும், ஏகோஜியும் தஞ்சையைக் கைப்பற்ற முனைந்ததாகவும், இது நாயக்கர்களின் கூட்டு முயற்சியால் பலன் அளிக்காமல் போயிற்று என்றும் மராத்திய வரலாறு எழுதியுள்ள சர் தேசாய் குறிப்பிடுகிறார். இந்நிகழ்ச்சிகள் ஷாஹஜிக்கும், ஏகோஜிக்கும் தஞ்சை மண்ணின்மேல் இருந்த நாட்டத்தைத் தெளிவாக்குகின்றன.

கி. பி. 1659ல் திருமலைநாயக்கர் இறந்த பிறகு அவரது மைந்தன் முத்துவீரப்ப நாயக்கர் மதுரை அரசராக முடிசூடினார். ஆறுமாத காலமே அரசு கட்டிலில் திகழ்ந்த இவர், திருச்சிக் கோட்டையை பாதுகாப்புள்ள தாக மாற்றினார். தனது தளபதியான லிங்கம நாயக்கரை (சொக்கலிங்கம நாயக்கர்) திருச்சியில் தங்குமாறு செய்தார்.

கி. பி. 1659ல் சாஹஜியும் முல்லாவும் தஞ்சையைத் தாக்கியதாக புரேயன்சா என்பவரின் கடிதங்களின் சான்றால் கூறப்பெறுகின்றது. அவ்வமயம் விஜயராகவநாயக்கர் கள்ளர்களின் பாதுகாப்பில் இருந்ததாகவும் குறிக்கப்பெற்றுள்ளது.

முத்துவீரப்பநாயக்கரின் மறைவிற்குப் பிறகு கி பி. 1659 ஜூலை திங்கள் அவரது மகனும் இளைஞனுமான சொக்கநாத நாயக்கர் மதுரை நாயக்க மன்னனாக முடிசூடினார். அவ்வமயம் திருச்சிப் பொறுப்பில் இருந்த லிங்கம நாயக்கர் பிரதானி, ராயசம் போன்ற உயர் அலுவலர்களின் கூட்டோடு சொக்கநாதனுக்குப் பாதுகாவலராகவும் திகழ்ந்தார். இவர் தனது செல்வாக்கைப் பலப்படுத்த விரும்பினார். செஞ்சியில் இருந்த சாஹஜியுடன் போரிட வலிமை வாய்ந்த மதுரைப் படையைத் தயார் செய்ய முனைந்தார். அவ்வமயம் இளைஞர் சொக்கநாதனுக்கு எதிராக சதி செய்வதாகவும், மதுரையைக் கைப்பற்றத் திட்டம் தீட்டியுள்ளதாகவும் அறிந்த சொக்கநாதன் விழிப்புணர்வுடன் செயலாற்ற லிங்கமனுக்கும் சொக்கநாதனுக்கும் பகைமை ஏற்பட்டது. லிங்கமனுக்கு தஞ்சை அரசர் விஜயராகவன் முழு உதவி

செய்ததாக அறிந்த சொக்கநாதன் விஜயராகவனுடன் பகைமை பூண்டான். இப்பகையே மதுரைக்கும் தஞ்சைக்கும் நிரந்தரப் பகையாக மாறியது. இது வன்றி சொக்கநாதன் பெண் கேட்டது, விஜயராகவன் மறுத்தது என்பதெல்லாம் கட்டுக் கதைகளே.

லிங்கமநாயக்கன் பற்றிய அரிய செப்பேடு ஒன்றினை அண்மையில் ஆராய்ந்தேன். தஞ்சாவூர் மாவட்டம் திருமயிலாடியில் கிடைத்த இச் செப்பேடு சகம் 1595ல் (கி. பி. 1673ல்) எழுதப்பெற்றதாகும். இது சொக்கலிங்கம நாயக்கரால் அளிக்கப்பெற்றதாகும். இதில் சொக்கலிங்கம நாயக்கர் மதுரை மன்னன் திருமலை நாயக்கரின் மகன் என்பதும், இவர் பிரமாதீச வருஷம் ஐப்பசி மாதம் ஒன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை சீர்காழிச் சீமையிலுள்ள குட்டியாபேட்டை மற்றும் பச்சிப்பெருமா நல்லூர் மாகாணங்களைச் சேர்ந்த 84 கிராமத்து பாளையக்காரர்கள் மற்றும் நாட்டார்களிடம் வரிவசூல் சம்பந்தமாக செய்துகொண்ட ஒப்பந்தமும், அதன் வருவாயிலிருந்து வடமாயூரம் எனும் திருமயிலாடி இறைவனுக்கு அளிக்கப்பெற்ற அறக்கட்டளைகளைப் பற்றியும் விவரிக்கின்றது.

விஜயராகவ நாயக்கர் பற்றிய ஆய்வில் ஜீவனான சான்று பகர்வது இச் செப்பேடே. சொக்கலிங்கம நாயக்கர் திருமலை மன்னரின் மகன் என்பதும், இவர் சொக்கநாதனை எதிர்த்தபின்பு இவருக்கு சோழநாட்டில் விஜயராகவன் அடைக்கலம் கொடுத்ததோடு சீர்காழி சீமையின் ஒரு பகுதிக்கு ஆட்சியாளனாகவும் நியமித்ததுதான் சொக்கநாதனுக்கும் விஜயராகவனுக்கும் ஏற்பட்ட நிரந்தரப் பகைமைக்கு உண்மையான காரணமாகும்.

இப்பகைமை காரணமாக பலமுறை மதுரைப்படை தஞ்சையைத் தாக்க முற்பட்டது. கி. பி. 1660—61ல் லிங்கமனுக்கு விஜயராகவன் உதவியதால் மதுரைக்கும் தஞ்சைக்கும் இடையே ஒரு போர் நிகழ்ந்தது. பின்னர் கி. பி. 1663ல் வானமியான் என்ற பீஜப்பூர் தலைவன் மதுரையைத் தாக்கியபோது விஜயராகவ நாயக்கர் வானமியானுக்கு உதவிபுரிந்தார். மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளாலும் கோபமுற்ற சொக்கநாதன் கி.பி.1663 ஆம் ஆண்டு இறுதியில் விஜயராகவனுடன் மோதி வல்லம் கோட்டையைக் கைப்பற்றினான். ஆனால் கி பி. 1664ல் விஜயராகவனது படை மதுரைப்படையை வெற்றிகண்டு வல்லம் கோட்டையைத் தன்வசம் கொண்டு வந்தது. கோவலத்தில் இருந்த கிழக்கிந்திய கம்பெனியிடம் மதுரை அரசர் தஞ்சையைத் தாக்க உதவி கேட்டு அது மறுக்கப்பெற்றதை ஜான்நியுஹோப்பின் குறிப்புக்களால் அறிய முடிகிறது.

மீண்டும் மீண்டும் சொக்கநாதன் வல்லம் கோட்டை மீது நிகழ்த்திய படையெடுப்புக்கள் நாகப்பட்டணத்திலிருந்த டச்சுக்காரர்களுடன் சொக்க நாதன் கொண்ட நட்புறவுகள், மற்றும் தரங்கம்பாடியிலிருந்த டேனிஷ்காரர் களின் திடீர் எதிர்ப்புகள் ஆகியவை விஜயராகவனுக்குத் தீராத தலைவலி யாயிற்று. இவையனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கத் திட்டமிட்ட விஜயராகவன் தனது ஏஜிஸ்டை (பிரதிநிதியை) படை உதவி கோரி பீஜப்பூர் சுல்தானிடம் அனுப்பினார்.

இக்கால கட்டத்தில் கி. பி. 1672ல் நோய்வாய்ப்பட்ட அலிஅதில்ஷாவும், அவரது புதல்வன் சிறுவன் சிகந்தர் அதில்ஷாவும் பீஜப்பூரில் இருந்தனர். பீஜப்பூரை தாக்க அவுரங்கசீப் தக்க தருணம் எதிர்பார்த்த நேரமது. விஜயராகவனின் கோரிக்கையை ஏற்று பீஜப்பூர் படைகள் 1. காதர் யெக்கலாசு (கவாஸ்கான்) 2. அப்துல் ஹலிம் என்ற இரண்டு முகம்மதிய தளபதிகள் மற்றும் பெங்களூர் ஜாகீர்தார் ஏகோஜியுடன் தஞ்சைக்கு உதவிப்படையுடன் வந்தனர். மதுரை நாயக்கரை வல்லம் பகுதி யிலிருந்து விரட்டிய பின்பு, இக்கூலிப்படை கொள்ளிடத்தின் வடகரையில் திருமழவாடியில் முகாமிட்டிருந்தது. பீஜப்பூர் சுல்தானுக்குரிய திறைப்பொருள் மற்றும் கூலிப்படையின் செலவினங்களை வசூல் செய்ய முகமதிய தளபதிகள் இருவரும் தஞ்சைக் கோட்டையில் தங்கி இருந்தனர். அவ்வமயம் பீஜப்பூர் அவுரங்கசீப்பின் பிடிக்குள் சிக்கும் அபாயச் செய்தி மேற்படி தளபதிகளுக்குக் கிடைத்தது. திரும்பச் சென்றால் அபாயம் என்ற நிலையில் தஞ்சையை அபகரிக்கத் திட்டம் தீட்டினர். இதற்கு ஏகோஜியையும் உடந்தையாக்கினர். கி. பி. 1675 பிப்ரவரி மூன்றாம் நாள் புதன்கிழமை (தமிழ் ஆனந்த வருடம் மாசிமாதம் 7-ஆம் நாள்) இம்மூவரும் சேர்ந்துகொண்டு விஜயராகவநாயக்கன் எதிர்பாராத வேளையில் தஞ்சை வடக்குவாசலைத் தாக்கினர். நண்பனே பகைவனான சூழலில் விஜயராகவநாயக்கரின் குடும்பத்தினர் தீரமுடன் எதிர்த்துத் தாக்கினர். தஞ்சை வடக்குவாசல் ராஜகோபாலசுவாமி திருக் கோயிலுக்கு எதிராக தீரமுடன் போரிட்ட விஜயராகவனும் அவனது குடும்பத் தினரும் வீரமரணம் அடைந்தனர். அன்றே கோட்டை முகமதிய தளபதிகள் வசமாயிற்று. சில நாட்களில் தளபதிகளுக்குள் ஏற்பட்ட பிணக்கால் இருவரும் ஏகோஜியிடம் தஞ்சைப் பொறுப்பை விட்டுவிட்டு பீஜப்பூர் திரும்பினர். திரும்பும் வழியில் பஹலோல்கான் என்பவன் காவாஸ்கானை பீமா நதிக்கரை யில் கைது செய்து பின்னர் கொன்றுவிடுகிறான். இவ்வாறு பீஜப்பூர் சென்ற தளபதிகள் திரும்பவே இல்லை. பீஜப்பூரும் அவுரங்கசீபிடம் வீழ்ந்திருந்தது.

ஏகோஜிக்குரிய பெங்களூர் ஜாகீர், அவுரங்கசீபின் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததால் ஏகோஜியும் தஞ்சையை விட்டு பெங்களூர் செல்ல இயலாத ஒரு நிலை. இந்நிலையில் ஏகோஜி தானே தஞ்சை மன்னராக கி. பி. 1675

செப்டம்பர் மாதம் முடிசூடிக்கொண்டார். நம்பிக்கைத் துரோகம் செய்து தஞ்சை அரசைக் கவர்ந்த ஏகோஜியின் செய்கைகள் அவரது குருவும் ஆலோசகருமான ஹனுமந்தேக்கு பிடிக்காமற்போகவே அவர் உடன் ஏகோஜியை பிரிந்து சத்ரபதி சிவாஜியிடம் முறையிட்டார். சத்திரபதி சிவாஜி ஏகோஜிக்கு எழுதிய கடிதங்கள் இரண்டில் முறைதவறி துரோகம் செய்து கவர்ந்த தஞ்சை அரசுபற்றி கண்டித்துள்ளதோடு அதனை உரியவர்களிடம் கொடுத்துவிட்டு தான் அளிக்கும் சதாரா பகுதிக்கு வந்துவிடவும் கூறியுள்ளார். அதனை ஏற்காத ஏகோஜியை பின்னர் ஹனுமந்தே தலைமையில் படையை அனுப்பி தாக்கினார். இத்தாக்குதலுக்குப் பிறகு ஏகோஜியின் மனைவி தீபாம்பாள் எடுத்துக்கொண்ட சமரச முயற்சியினால் தஞ்சை அரசை ஏகோஜி ஏற்க சிவாஜி சம்மதித்தார். இதனை சிவாஜியின் கடிதங்களும் மற்ற வரலாற்றுச் சான்றுகளும் மெய்ப்பிக்கின்றன.

இதுகாறும் கண்ட அனைத்துச் செய்திகளையும் தொகுத்து நோக்கும் போது தஞ்சைக்கும் மதுரைக்கும் ஏற்பட்ட உண்மையான பகைமைக்கு உரிய காரணங்கள் யாது என்பதும், நட்போடு கூலிப்படையாக வந்த பீஜப்பூர் படையின் தளபதிகளும் ஏகோஜியும் செய்த சதியால் விஜயராகவநாயக்கன் 3—2—1675 ஆம் நாள் அவர்களுடன் போரிட்டு வீரமரணம் அடைந்த செய்திகளும், துரோகம்செய்து தஞ்சை அரசைக் கவர்ந்த ஏகோஜிக்கு சத்ரபதி சிவாஜி கண்டனங்கள் தெரிவித்ததுமே உண்மையான வரலாறு ஆகும்.

விஜயராகவன் பெண் கொடுக்க மறுத்ததால் மதுரையுடன் பகை மூண்டது என்பதும், கோவிந்த தீட்சிதர் சதிசெய்தது என்பதும், நாள்தோறும் 12000 பிராமணர்களுக்குப் போஜனம் அளித்தான் என்பதும், உப்பரிகையில் ஏறி ரங்கநாதனை வழிபட்டான் என்பதும், விஜயராகவன் அரண்மனையில் ஸ்ரீரங்கத்து இறைவி ரங்கநாயகி சமையற்காரியாக இருந்தாள் என்பதும், இறந்த விஜயராகவன் உயிர்பெற்று ரங்கநாதரை தரிசித்து அவருடன் ஐக்கியமானார் என்பதும், தம்பியையும் மகளையும் கண்ணைப்பிடுங்கி சிறையிலிட்டான் என்பதும், வெங்கண்ணா துரோகத்தால் செங்கமலதாசு ஓடியதும், முழுமையான உண்மை கலவாத கற்பனைப் படைப்புகளே என்பதைத் தமிழகம் அறிதல் வேண்டும்.

கி.பி. 1532ல் தஞ்சை அரசை ஏற்ற செவ்வப்பநாயக்கனிடம் பணி புரியத் தொடங்கிய கோவிந்த தீட்சிதர் 17-ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் விஜயராகவனிடம் பணிபுரிந்து சதிகள் செய்தார் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. வில்லியம் டெய்லர் என்ற மேனாட்டு அறிஞரின் வரலாற்றுக் குறிப்பில் திருச்சியில் சொக்கநாதனின் தரப்பினர் காவிரி நீரில் மந்திரங்கள் செய்த பூசணிக்காயை விட்டதாகவும், அந்நீரை தஞ்சைப் பகுதியில் குடித்த

விஜயராகவனது படையினர்க்கு வயிற்று நோய் உண்டானதென்றும். பின்னர் அவர்கள் மந்திர உபாதை போக்க திருச்சிப்படையில் சேர்ந்ததாகவும் உள்ள குறிப்பு அறிவியலுக்கும் வரலாற்றுக்கும் பொருந்துமா ?

மேலும் ஸ்ரீரங்கத்து இறைவி ஸ்ரீரங்கநாயகி தஞ்சை சமையற்கட்டில் வேலைபார்த்தாள் என்ற குறிப்பும், விஜயராகவன் உப்பரிகையில் ஏறி ஸ்ரீரங்க கோபுரம் தரிசித்தது என்றக் குறிப்பும், தஞ்சையில் இறந்த விஜய ராகவன் திருவரங்கத்துச் சன்னிதியில் தோன்றி இறைவனோடு கலந்தது என்ற குறிப்பும் வரலாறு ஆகுமா ? விஜயராகவன் இறந்த ஆண்டு, அப்போது கைக் குழந்தையாய் இருந்த செங்கமலதாசு 11ஆம் வயதில் மீண்டும் வெங்கண்ணா வால் தஞ்சைக்கு அழைத்துவரப்பட்டது, இதற்கிடையில் தஞ்சை அரியணையில் அழகிரி நாயக்கன் ஆட்சி புரிந்தான் என்பது போன்ற நிகழ்ச்சிகளுக்கும், இக் காலகட்டத்தில் உள்ள வரலாற்று ஆண்டு குறிப்புகளுக்கும் இதுவரை எந்த வரலாற்று ஆசிரியரும் சரியான சமகாலத்து சான்றுகளையோ, விளக்கங் களையோ கூறவில்லையே......! எனவே கற்பனைகளை ஒதுக்கிவிட்டு சம காலத்து சான்றுகளை மட்டும் ஆராயும்போது நாயக்கர் வரலாற்றில் இருண்ட பகுதி ஒளிபெறுகின்றது.

எமது ஆய்வு, லிங்கமநாயக்கனின் திருமயிலாடி செப்பேடு, அமரசிம்ம னின் மகன் காலம் வரை தொகுக்கப்பெற்ற மராத்திய வம்சாவளிச் சுவடி நூல், பிரஞ்சு கவர்னர் ஆணையில் மொழிபெயர்க்கப்பெற்ற மேற்படி மராத்தி வம்சாவளியின் தமிழாக்க ஏடுகள், சத்ரபதி சிவாஜி எழுதிய கடிதங்கள், சரபோஜி மன்னர் தஞ்சை பெரியகோயிலில் வெட்டுவித்த போன்சலே வம்ச சரித்திரம், விஜயராகவ நாயக்கர் காலத்து தமிழ், சமஸ்கிருதம் மற்றும் தெலுங்கு ஏட்டுச்சுவடிகள், பீஜப்பூர் வரலாறு, ஏசுசபை கடிதங்கள், மற்றும் தரங்கம்பாடியிலிருந்து டேனிஷ்காரர்கள் கோபன்ஹேகனுக்கு எழுதிய ஆவணங்கள் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பெற்றதாகும்.

From Our Visitos' Book :

AN INVALUABLE TREASURE-HOUSE FOR SEEKERS OF KNOWLEDGE, RESEARCH AND CULTURAL HISTORY. MANY MANUSCRIPTS HAVE BEEN UNRAVELLED AND MANY MORE REMAIN. GOOD WORK BEING DONE. CONGRATULATIONS. LET THIS WORK CONTINUE WITH GREATER VIGOUR AND VISION.

Camp: Thanjavur,
8—6—88.

Sd. A. PADMANABHAN,
ADVISER TO HIS EXCELLENCY THE
GOVERNOR, TAMILNADU.

Form IV
(See Rule 8)

1.	Place of Publication :	Thanjavur
2.	Periodicity of its Publication :	Three issues a year
3.	Printer's Name :	T. M. S. S. M. Library Society Press Thanjavur.
	Nationality :	Indian
	Address :	T. M. S. S. M. Library Society Press, Thanjavur - 613 009
4.	Publisher's Name :	T. M. S. S. M. Library Society, Thanjavur.
	Nationality :	Indian
	Address :	Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library Society, Thanjavur.
5.	Editor's Name :	S. Krishnan
	Nationality :	Indian
	Address :	S. Krishnan, Administrative Officer, Sarasvati Mahal Library Society, Thanjavur,
6.	Name and Addresses of Individual who owns the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	T. M. S. S. M. Library Society, Thanjavur.

I, S. KRISHNAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

S. KRISHNAN,
Administrative Officer
(Signature of Publisher)

Date : 10—11—88

NOTE

—*—

The prices quoted are all net. Packing and postage will be charged Extra.

Purchasers of books, sending the cost in advance must include the value of sufficient stamps for Postage and Registration.

A discount of 10% will be allowed for the purchase of books below Rs. 50. 20% will be allowed on all orders for 5 copies and more of the same Publication and also on all orders for the value of Rs. 50/- and upwards. No discount will be allowed for purchase of Journals and Catalogues.

All orders for Books, Journals, Catalogues and other communications must be addressed to

The Administrative Officer,
T.M.S.S.M. Library Society
Thanjavur-613 009.
TAMILNADU, INDIA.